நாயன்மார்கட்டு

மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்க

(நல்லிளைஞர் சங்க)

# 50வது ஆண்டு நினைவு மலர்



Donated by:-
Mr. K. C. ...ARATNAM

மகேஸ்வரி பாலர் ஞானோதய
சங்கத்தினரால்
ஸ்தாபிக்கப்பெற்ற
நாயன்மார்கட்டு
மகேஸ்வரி வித்தியாசாலையின்
ஆரம்ப வரலாறும் அடங்கியது.



University of Jaffna
372
NAY
250256(AR; Main)

சித்தார்த்தி 1979

பொன்விழாக் காணும்

ஞானோதய சங்கத்தின் சேவை மேலும் வளர

எம் நல்லாசிகள்.

லட்சுமி விலாஸ்

205, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

பொன்விழாக் காணும்

மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தை வாழ்த்துகிறோம்.

வாழ்க நும் சேவை!

வட இலங்கையில் பிரபல நகை வியாபாரிகள்

ஹரன் ஜுவல்லர்ஸ்

50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

போன்: 444

தந்தி: 'இரத்தினம்ஸ்'

நாயன்மார்கட்டு

# மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்க

(நல்லிளைஞர் சங்க)

2007
372 NAY AR

# 50-வது ஆண்டு நினைவு மலர்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

ARCHIVES

University of Jaffna
250256
Library

## மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின்

முயற்சியால் ஸ்தாபிக்கப்பெற்ற

நாயன்மார்கட்டு

## மகேஸ்வரி வித்தியாசாலையின்

ஆரம்ப வரலாறும் அடங்கியது.

250256

சித்தார்த்தி

250256

1979

Donated by:-
Mr K. C. [illegible]ARATNAM

**தொகுப்பாசிரியர்கள்:**

1. **குமாரசுவாமி துரைராசா** (பாலபண்டிதர்)
(ஆசிரியர், தனியார் கல்வி நிலையம், யாழ்ப்பாணம்)

2. **சிவசம்பு சண்முகரத்தினம்**
(ஆசிரியர், தமிழ் மகாவித்தியாலயம், பூண்டுலோயா)

3. **சிவபாதசுந்தரம் ஜெகந்நாதன்**
(மாவட்ட மீன்பிடி விரிவாக்க அலுவலகம், முல்லைத்தீவு.)

**நூல் ஆய்வாளர்கள்:**

1. அமரர் திரு. வெ. சிவசம்பு அவர்கள்
(முன்னாள் ம. பா. ஞா. ச. காப்பாளர்)

2. திரு. இ, வேலாயுதபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்)
(முன்னாள் ம. பா. ஞா. ச. உபதலைவர்)

3. திரு, சி. சிவபாதசுந்தரம்
(முன்னாள் ம. பா. ஞா. ச. இணைக்காரியதரிசி)

4 திரு. சி. கனகரத்தினம் (ஆயுர்வேத டாக்டர்)
(முன்னாள் ம. பா. ஞா. ச. இணைக்காரியதரிசி)

5. திரு. ச. நடராசா (இளைப்பாறிய புகையிரத ஊழியர்)
(முன்னாள் ம. பா. ஞா. ச. தனாதிகாரி)

**சமர்ப்பணம்:**



மகேஸ்வரி வித்தியாசாலையை ஸ்தாபித்த மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் ஆரம்பிக்கப்பெற்ற இடம் தேவி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாள் ஆலய முன்றிலாகும்; சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இராப்பள்ளி பகற்பள்ளியாய் அமைய வேண்டுமென்று அயராது உழைத்த சங்க நிர்வாகிகளுக்குத் தோன்றாத் துணையாக நின்று திருவருள் பாலித்த தேவி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாளின் திருப்பாதாரவிந்தங்கட்கு இம் மலரை சமர்ப்பிக்கின்றோம்.

வணக்கம்

புனருத்தாரணம் செய்யப்பட்ட
மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்க
நிர்வாகிகள்

நாயன்மார்கட்டு,
சித்தார்த்தி, 1979

# வாழ்த்துரை

1930-ம் ஆண்டிலே சேவை மனப்பான்மையுடனும் முன்னேற்றத் துடிப்புடனும் நாயன்மார்கட்டு இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கமானது இவ்வூரின் ஆன்மீகத் துறைக்கும், கல்வித்துறைக்கும் ஆற்றிய தொண்டுகள் அளப்பல. காலத்தின் கோலத்தால் இந்த வரலாறு மறைந்துபோகாவண்ணம் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் முன்னைய அங்கத்தவர்கள் விரித்து எழுதிய ஆதாரபூர்வமான உண்மைகளையும், பிற பெரியார்களின் அணிந்துரைகள், வாழ்த்துரைகளையும் உள்ளடக்கி வெளிவரும் மலரினை நாம் இருகரங்களும் நீட்டி வரவேற்போமாக. எமக்கு இடரினும் தளரினும் உறுதுணையாக இலங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரித் தாயின் இன்னருளால் இம்மலர் வெற்றிபெறுக என இதயங்கனிந்து வாழ்த்துகிறேன்.

வித்துவான் க, சொக்கலிங்கம் [ சொக்கன் ] M. A.

## உங்களுடன் ஒரு நிமிடம்

1928-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கம் 1930-ம் ஆண்டு புதிய அங்கத்தவர்களையும் சேர்த்து மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் என்ற பெயரில் செயல்பட்டது. ஒன்றிணைந்த இம் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் தனது 50 வது வருடத்தை நினைவுகூர்வதில் பெருமகிழ்ச்சியடைகிறது.

அறிஞர் பெருமக்கள் தந்துதவிய ஆசிச்செய்திகள் வரலாற்றை ஸ்திரப்படுத்தும் குறிப்புக்கள் போன்றவற்றில் இரு சங்கங்களின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்கள். இவ் இரு சங்கங்களும் வெவ்வேறு சங்கங்களோவென வாசகர்கள் ஐயுறக்கூடும். பெயரால் வேறுபட்ட இவ் இரு சங்கங்களும் ஒரே சங்கம் (மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம்) என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

இங்ஙனம்

தொகுப்பாசிரியர்கள்

## அஞ்சலி

நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கம் அதன் திரிபான நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் - அதன் செயற்பாட்டினால் உருவாகிய நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை இவையாவற்றிற்கும் உறுதுணையாயிருந்து அரும்பாடுபட்டு உழைத்து மறைந்த நம் பெரியார்கள் அனைவர்க்கும் எமது இதய அஞ்சலி.

புனருத்தாரணம் செய்யப்பெற்ற
ம. பா. ஞா. சங்க நிர்வாகிகள்.

காப்பு

அன்னையுமை பேய்ச்சி அன்பில் திளைத்து நின்று
என்னையவாவும் ரசனை சொல—முன்னம்
மூவுலகும் கைகுவிக்கும் மூத்தோன் பதமலரை
மேவு மருச்சனை செய்வாம்.

---

உள்ளே .......

| | பக். |
|---|---|
| | 3 |
| வாழ்த்துரை: | |
| பொதுமக்கள் ஆதரவை வேண்டுகின்றோம் | 5 |
| | 6 |
| எமது கைங்கரியம் | |
| | 6 |
| ஊருக்கு ஒரு வரப்பிரசாதம் | |
| | 7 |
| ஒரு வளர்பிறை வளர்கிறது! | |
| | 8 |
| பெரிய தேரின் சிறிய அச்சாணி | |
| | 8 |
| மக்களின் வழிகாட்டி | |
| அறிவுப்பணிக்கு அருள் கிடைக்க-வேண்டுகிறேன் | 9 |
| ஒரு கலங்கரை விளக்கம் | 10 |
| கிராமத்தின் திலகம் | 11 |
| சாதனை புரிந்த நாயன்மார்கட்டினர் | 11 |
| ஆலின் சிறுபழத்து ஒரு விதை | 12 |
| முன்னுரை | |
| அம்பிகை அருள் வேண்டும் | 15 |
| நகையை விற்று நல்லது செய்த பெரியார் | 16 |
| மகிழ்ச்சிப் பிரவாகம் | 17 |
| கலைக்கல்வியும் தொழில்கல்வியும் | 18 |
| உள்ளதைச் சொல்வேன் | 19 |
| பெருமைக்குரியது | 20 |
| நான் செய்த தொண்டு | 20 |
| முயற்சி திருவினையாக்கியது | 21 |
| வரலாற்றை வடிப்பது புகழின்-போதைக்கன்று | 21 |
| மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் ஆரம்பகால அறிக்கையின் தொகுப்புரை | 22 |
| மகேஸ்வரி வித்தியாசாலையின் ஆரம்ப வரலாறு | 25 |
| நன்றியுரை | 31 |
| சிலம்புக் கட்டுரைகள் | 33 |

---

## நன்றி

- இம்மலரில் பாடசாலையின் ஆரம்ப வரலாற்றையும் விரிவாக எழுதி வெளியிட வேண்டும் என எமது சங்கத்தினரை ஊக்குவித்த அனைவர்க்கும்
- மலர் சிறப்புற ஆசியுரைகள் வழங்கிய வடமா நிலக் கல்வியதிகாரி திரு. தி. மாணிக்கவாசகர். செந்தமிழ்ச்சிரோன்மணி பண்டித வித்துவான் க. கி. நடராசன் B. O. L. Dip-in-Ed., வித்துவான் க. சொக்கலிங்கம் M. A. அவர்களுக்கும்
- மேலும் ஆசியுரைகள் வரலாற்றை ஸ்திரப்படுத்தும் குறிப்புக்கள் தந்துதவிய பெருமக்களுக்கும்
- சிலம்புக் கட்டுரையின் மூலப்பிரதியைத் தந்துதவிய திரு. N. N. இராசநாயகம் அவர்களுக்கும்
- அன்பும் ஆதரவும் ஊக்கமும் தந்து எம்மை உற்சாகப்படுத்திய ஊரபிமானப் பெரியோர்களுக்கும், விளம்பரங்கள், பண உதவிகள் புரிந்த மற்றுமனைவர்க்கும்
- மலரை அழகுற அச்சேற்றித்தந்த ஆனந்தா அச்சக அதிபர் ஏனைய ஊழியர்கள் அனைவர்க்கும்
- தோன்றாத் துணையாக நின்று திருவருள் பாலித்த தேவி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாளுக்கும் எம் உளங்கனிந்த நன்றி.

# பொதுமக்கள் ஆதரவை வேண்டுகின்றோம்

நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கம், மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம், மகேஸ்வரி வித்தியாசாலையின் ஆரம்ப வரலாறு என்பவற்றை இயன்றவரை விரிவாக எடுத்துச் சொல்லத் திருவருள் பாலித்த அம்பிகைக்கு எம்மெல்லோரதும் வணக்கம்.

மகேஸ்வரி வித்தியாசாலையைப் பொறுத்தமட்டில் மேலெழுந்த வாரியாக அதன் ஆரம்பவரலாறே இப்புத்தகத்தில் பெரிதும் சொல்லப்பட்டிருக்கிறது. காலாகாலங்களில் பாடசாலை பெற்ற வளர்ச்சி, முன்னேற்றம் எவரெவரால் எபபடியெப்படி வளர்ந்தது என்ற விபரம் சிறிதளவாகவே இங்கு தரப்பட்டுள்ளது. அவையெல்லாம் நல்லமுறையில் திரட்டி ஒருதரத்தில் வெளியிடுவது மிகமிகக் கஷ்டம் என்பதை வாசகர் நன்கு அறிவர். எனவே அதன் விபரங்களின் பட்டியலும் ஆசிரியன் மலரின் அட்டவணையும் சேர்ந்து ஒரு வெளியீடு வெளிவர இருக்கின்றது. காலம் ஓடிக்கொண்டு போவது எம்மை அறியாத ஒன்று. எது எப்படி இருந்தபோதிலும் பாடசாலையின் 50ஆம் வருடப் பொன்விழாக் கொண்டாட்டத்திலாயினும் இது நிகழ்ந்தே தீரும். இதில் நாம் எடுக்கும் எத்தனத்துக்கும் ஊரர்ரெல்லாரதும் சங்கங்கள் சபைகள் என்பனவற்றதும் ஒத்தாசையையும் புத்திமதியையும் எதிர்பார்க்கிறோம்.

இவ் வெளியீட்டில் உள்ள தவறுகள், பிழைகள் முதலியவற்றையும் தெரியவைத்து மேலும் பாடசாலையின்-சங்கத்தின்-வளர்ச்சிக்கு-வெளியீட்டுக்கு எம்மை ஊக்குவிக்கும்படியும் எல்லோரையும் வேண்டி விடைபெறுகின்றோம்.

— சிவசம்பு சண்முகரத்தினம்
ம. பா. ஞா. சங்க செயலாளர்

# எமது கைங்கரியம்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் தனது 50ம் ஆண்டை இன்று நினைவுகூர்கிறது. மேற்படி சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மகேஸ்வரி வித்தியாசாலை இன்று 44வது வயதை அடைந்துவிட்டது. மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் ஆரம்பித்த மகேஸ்வரி வித்தியாசாலை வளர்ச்சி பெற்றதற்கு இவ்வூர்ப் பெருமக்களின் அயரா ஊக்கமும் அபிமானமுமே காரணம் என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. பாடசாலையின் ஆரம்ப வரலாற்றை ஒரு நல்ல முறையில் பிரசுரித்து வெளியிடவோ பாடசாலையில் வைக்கவோ இதுவரை தருணம் கிடைக்கவில்லை. பாடசாலையில் லோக்கல் மனேச்சர் (Local Manager) என்ற முறையில் முதலில் இயங்கியவர் காலம் சென்ற டாக்டர் வெ. சி. இராமநாதன் அவர்கள். 120' நீளமுடைய மண்டபத்தில் தொடங்கிய பாடசாலையை ஸ்திரமான முறையில் 'ப' வடிவில் வரச்செய்யவும், அதற்கான பணத்தைத் திரட்டவும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தகர்களுடனும் பிறருடனும் அவர் கொண்ட தொடர்பு மிக மிக அதிகம். அவர்களுக்குப் பக்கபலமாக சோதிடர் க. திருஞானசம்பந்தரும் சி. சிவசிதம்பரநாத சுவாமிகளும் வெ. சிவசம்பு மு. குமாரசுவாமி என்போரும் முன்னின்றுழைத்தனர். ஆனால் வரலாற்றை வடிப்பதில் டாக்டரவர்களின் கவனம் செல்லவில்லை. [redacted] சோதிடரவர்களும் தலைமையாசிரியர் திரு ஆ. இளையதம்பி அவர்களும் சேர்ந்து பாடசாலையின் முன்னேற்றப் பாதைக்கு வழிவகுத்தனர். சோதிடரவர்கள் தமது ஊர்ப்பாடசாலை என்ற நோக்குடன் நடாத்துகின்றார் என நாமெல்லாம் நினைக்கும் தரத்தில் ஆசிரியர்களுக்கோ – மாணவர்களுக்கோ காலாகாலங்களில் செய்த உதவிகள் காட்டிய முகமலர்ச்சி, அன்பான மொழிகள், சலியாத உழைப்பு இன்னும் மேலானதெனலாம். இப்படியெல்லாம் பாடசாலை வளர்ந்து பீடு நடை போட்டதெனினும் அதன் ஆரம்ப வரலாறு - வளர்ச்சி என்பவற்றைத் திரட்டிவைக்கும் சந்தர்ப்பம் எவரது காலத்திலும் சம்பவிக்கவில்லை. இதன்மட்டிலேயே நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கமும் அதன் திரிபான நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கமும் சேர்ந்து 50ம் வருட நினைவையொட்டித் தமது மறு கைங்கரியமாக இப்பாடசாலையின் ஆரம்ப வரலாற்றை வெளியிடுகின்றது. வணக்கம்.

— மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கநிர்வாகிகள்

# ஊருக்கு ஒரு வரப்பிரசாதம்

நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கத்தார் தமது 50வது ஆண்டை நினைவுகூரும் இவ் வெளியீட்டில் மேற்படி குறிச்சிக்குத் தேவையானதும் சரித்திரத்தை வடித்தெடுப்பதுமான பலபகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. 1950 ஆண்டு இச்சங்கத்தில் உள்ள வாலிபரின் அனுசரணையுடன் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தினரும் சேர்ந்து நடாத்திய வைபவத்தில் நான் பங்குகொண்டமையும் எனது ஞாபகத்திற்கு வருகிறது. எத்தனையோ சங்கங்கள் தோன்றித் தோன்றி மறைந்தாலும் அவையவை கொண்டுள்ள இஸ்திரமான கொள்கை மறைவெய்த மாட்டா.

எனவே நல்லிளைஞர் சங்கத்தாரும் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தாரும் ஊராரும் ஒன்றிணைந்து வெளியிடும் இம்மலர் சிறப்புறுவதுடன் எல்லோரது சேவையும் நல்லெண்ணமும் ஊருக்கு ஒரு வரப்பிரசாதமாகவும் அமையும் என்பது எனது நம்பிக்கை.

— தி. மாணிக்கவாசகர்
கல்விக் கந்தோர், வடமாநிலம்.

# ஒரு வளர்பிறை வளர்கிறது!

1934ம் ஆண்டில் திரு. வெ. சிவசம்பு அவர்கள் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையிற் கருமமாற்றிக்கொண்டிருந்தார்கள். அக்காலத்திற் பண்டிதர் மு. வே. திருஞானசம்பந்தப் பிள்ளை அவர்களும் நானும் இந்துசாதனப் பத்திரிகையின் ஆசிரியன்மாராகப் பணிபுரிந்தோம். நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் ஆதரவில் அம்பாள் வீதியிலுள்ள வெயிலுகந்த விநாயகராலய வளவுக்குள் நடாத்தப்படும் இராப்பள்ளியில் ஓர் உபந்நியாசம் நிகழ்த்தும்படி திரு. சிவசம்பு பண்டிதரவர்களையும் என்னையும் ஒருநாள் கேட்டார். இது ஒரு சித்திரை வருடப்பிறப்புத் தினமாகும். அன்று நான் வேறு காரியார்த்தமாகச் செல்லவேண்டியிருந்தமையால் பண்டிதரவர்களை அன்றும் பிறிதொரு தினத்தில் நானுமாகச் சிவசம்புவின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதாக ஒழுங்கு செய்துகொண்டோம்.

1934ம் ஆண்டு புரட்டாதிமாதம் சரஸ்வதி பூசைத் தினத்தன்று நான் மேலே சொல்லிய சங்கத்தின் ஆதரவில் இராப்பாடசாலை மண்டபத்தில் சொற்பொழிவு நிகழ்த்தச் சென்றேன். பெருந்தொகை மக்கள் குழுமியிருந்தனர். சிறுவர்களின் கும்மி, கோலாட்டம் என்பனவும் இடம்பெற்றன. ஒரு திண்ணைப் பள்ளி–இராப் பாடசாலை இவ்வளவு கோலாகலமான நிகழ்ச்சிகளைத் தயாரித்திருந்ததே என நான் எண்ணுமளவுக்கு நிகழ்ச்சிகள் இருந்தன. எனவே சங்கத்தின் முயற்சியால் ஒரு பள்ளிக்கூடம் உருவாவதற்குப் பெரியாரின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியம் என்றும் அங்கு அச்சிறுவரின் அன்றைய நிகழ்ச்சிகளின் சிறப்பு அது நிறைவெய்துதற்கு அறிகுறியாக விளங்குகிறதென்றும் என்பேச்சின் இறுதியில் யான் குறிப்பிட்டமை ஞாபகத்திற்கு வருகின்றது.

இந்துசாதனக் காரியாலயத்தில் பண்டிதரவர்களும் நானும் சமுகமாயிருந்த ஒரு சமயத்தில் கார்த்திகை விளக்கீட்டிலன்று நாட்பள்ளி நடைபெறவிருப்பதாகச் சிவசம்பு சொல்லக் கேட்டோம். சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் ஆதரவில் தங்கள் சங்கத்தார் கொடுத்த பணத்தையும் வேறு பெரியார்கள் உதவிய பணத்தையும் கொண்டு பாடசாலை கட்டப்படுவதாகச் சொன்னர். பாடசாலை ஆரம்பமானதும் பண்டிதரவர்களும் நானும் புதிய பாடசாலைக்குத் தனித்தனி அழைக்கப் பெற்றோம். எமது பாராட்டுக்களைப் பெற்றதுடன் சங்கத்தின் பெயரைக்கொண்ட மகேஸ்வரி வித்தியாசாலைக்கும் பெருமையை ஈட்டிக்கொண்டார்கள். அக்காலத்திலிருந்து இப்பாடசாலை வளர்பிறைபோல வளர்ந்து வருகிறது. இன்னும் இது மேம்பாடடைவதற்கும் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் நோக்கங்கள் படிப்படியாக நிறைவேறி மேன்மேலும் வளர்ச்சியுறுவதற்கும் எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பாராக.

சங்கம் நீடு வாழ்க! வாழ்க தமிழ்! வளருக சைவம்

— க. கி. நடராஜன்

''யோகபவனம்''
10, பொன்னப்பா வீதி,
வண்ணார்பண்ணை.

# பெரிய தேரின் சிறிய அச்சாணி

காலம் கண்டவன் என்ற முறையில் மகேஸ்வரி வித்தியாசாலை ஆரம்ப வரலாற்றுக்கு நீங்கள் குறிப்புத் தரவேண்டுமென இவ்வூரிலுள்ள பலரால் கேட்கப்பட்டேன். மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் என்ற நிறுவனம் எம்மூரில் இயங்கியது. அது அம்பாள் வீதியில் ஓர் இராப் பள்ளியை நடாத்தியது அதிலுள்ள சிறுவர் வாலிபர் எடுத்த முயற்சி பகற் பள்ளியாய் கைலாசபிள்ளையார் கோயிற் காணியில் மகேஸ்வரி வித்தியாசாலை என்ற பெயருடன் உருவானது. இப்பள்ளி உருவானபோது புதிய பாடசாலையென்று அதிகமானோர் பிள்ளைகளை அனுப்பத் தயங்கினர். இதன்மட்டில் அயற் குறிச்சிகளிலிருந்து பிள்ளைகளைச் சேர்த்தால் இக்குறிச்சியிலுள்ளவர்கள் தாமாகவே பிள்ளைகளை அனுப்ப முன்வருவார்கள் என்ற எண்ணத்தில் சாளியபிட்டி வெட்டுக்குளம் கடுக்காயடி மடத்தடி முதலிய குறிச்சிகளிலிருந்து பிள்ளைகளைச் சேர்ப்பதில் நானும் இரவுபகலாகப் பாடுபட்டதுண்டு. காலகதியில் பெரியார்கள் பலரது ஒத்துழைப்பாலும் ஊரபிமானிகள் நல்கிய கொடைகளினாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பிரபல வர்த்தகப் பிரமுகர்களின் உதவியினாலும் வளர்ச்சி பெற்று பெரும் பாடசாலையாக மிளிர்கிறது.

பெரியதொரு தேரை மிகச்சிறிய அச்சாணி தாங்குவதுபோல இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் ஆரம்பத்திற்கும் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கமே அச்சாணியெனலாம். மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் மேற்படி தேவிக்கு இரு பித்தளைத் தீவர்த்திகளைச் செய்து கொடுத்ததும் எனக்குத் தெரியும். இன்றும் அது சங்கத்தின் பெயருடன் கோவிலில் இருக்கிறது. சிறு பிள்ளைகளின் தலையீடு பெரும்பணியாக அமைந்து இன்று எம்மூரைத் திகழ வைக்கிறது. இன்னும் இவர்கள் பணி வளரத் தேவியை வேண்டுகின்றேன்.

''உருவுகண்டெள்ளாமை வேண்டு முருள்பெருந் தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து''

ச. பொன்னையா
இராஜராஜேஸ்வரி தேவிஸ்தானத் தலைவர்.

# மக்களின் வழிகாட்டி

1928-ல் ஆரம்பிக்கப்பட்ட நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கம் அதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவை இந்த ஆண்டு கொண்டாடுவது பெருமைப்படத்தக்கதொன்றாகும். ஏனெனில் இதுபோன்ற அநேக சங்கங்கள் தோன்றி இரண்டொரு ஆண்டுகளிலேயே மறைந்து போகின்றன. நாயன்மார்கட்டு மக்களின் கல்வி வளர்ச்சிக்கு இச்சங்கமே மூலகாரணமாக இருந்திருக்கிறது. மக்களின் நல்லொழுக்கம், கலை, சமயம் முதலியவற்றிலும் வழிகாட்டியாக இருந்திருக்கிறது. ஆரம்பகாலத்தில் கல்வி அறிவில்லாத முதியோர்களுக்கும்கூட அறிவைப் போதிப்பதற்கு உரிய வசதிகளைச் செய்துவந்திருக்கிறது என்பதை அறியும்போது அதைப் பாராட்டாதிருக்கமுடியாது. ஐம்பதாவது ஆண்டு நினைவு விழாவை முன்னிட்டுச் சங்கம் தனது சேவைகளைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவது வரவேற்கத்தக்கதொன்றாகும். மேலும் வருங்காலத்திலும் இச்சங்கம் தனது சேவைகளை மக்களுக்குச் சிறப்பாகச் செய்து முன்னேற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

— இ. சரவணமுத்து
பெ. ஆ சங்கக்காரியதரிசி.

# அறிவுப் பணிக்கு அருள் கிடைக்க வேண்டுகிறேன்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் ஆரம்பவரலாறு பற்றி ஒரு குறிப்புரை நல்குமாறு என்னைக் கேட்டமைக்கு வித்தியாசாலையில் நான் காலாகாலங்களில் கொண்ட பெரும் பங்கும் எனக்கும் அதன் வளர்ச்சிப் பாதையில் கருமமாற்றிய பெருமக்களுக்குமிடையிலானநல்லுறவுமே என்பதைப் பெருமிதத்துடன் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலஞ்சென்ற டாக்ரர் க. குகநாததாசன், திரு. வெ. சிவசம்பு ஆகியோருடன் நாயன் மார்கட்டு நல்லிளைஞர் சங்கத்தை அவர்கள் ஸ்தாபித்து நடாத்தும்போதும் அவர்களுடன் நானும் இணைந்து செயலாற்றினேன். சங்கம் செயலிழந்துபோனபின் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் உருவானதும் அதன் அடிப்படையில் இராப்பள்ளியொன்று ஆரம்பமாகி நடந்து வந்தமையும் எனக்குள்ள மனத்தாங்கலை ஒருவாறு தீர்த்து வைத்தது. இராப்பள்ளியாக நடாத்தப்பட்டு வந்த சிறியதொரு காரியம் எம்மவர் மத்தியில் காலாகாலங்களில் சொற்பொழிவுகள் உபந்நியாசங்கள் நிகழ இடமளித்ததுடன் பெரும் பாடசாலையாக மாறவும் ஏதுவானமை மேலும் எனக்குப் பெருமிதத்தைத் தந்தது. மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் - இராப்பள்ளி பகற்பள்ளியாக மாறியது. பாடசாலையின் நிர்வாகத்தைத் தனித்து நடாத்தச் சக்தியில்லாத காரணத்தால் பெருமக்கள் பலரது கேள்விக்கிணங்க சங்கத்தின் பெயரைப் பாடசாலைக்கிடல் ஒன்றே நமக்குப் போதியதெனக் கொண்டு நம்மிடமிருந்த மிகுதிப் பணத்திற்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாளுக்கு 2 பித்தளைத் தீவர்த்திகளைச் செய்து கொடுத்துவிட்டுப் பாடசாலை வளர்ச்சிக்குழைத்த பெரியார்களுடன் ஒத்துழைத்ததும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருந்ததும் அவர்களின் மதியூகமென்றே நான் எண்ணுகின்றேன்.

நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கம் அதன் திரிபான நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் அதன் செயற்பாட்டால் உருவாகிய நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையைப்பற்றி இன்று ஒரு நினைவு மலரையும் வெளியிட முன்னின்று திருவருள்பாலித்த ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாளின் திருவருளை நாம் வழுத்தாமலிருக்கமுடியாது. அடுத்து பாடசாலையின் வளர்ச்சிக்குழைத்த டாக்டர் வெ. சி. இராமநாதன் சோதிடர் க. திருஞானசம்பந்தர் ஆகியோரைப் போற்றாமலிருக்கவும் முடியாது.

இன்னும் நீண்ட சேவையால் பாடசாலையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்திய ஆசிரியர் திரு. க. முத்தையா, தலைமை ஆசிரியர் ஆ. இளையதம்பி காலஞ்சென்ற திரு. வை. ஆறுமுகம் ஆகியோரை நினைவுகூராமலிருக்கவும் முடியாதென்பதை இங்கே தெரிவித்து மேலும் பாடசாலை வளர்ச்சிக்கு அருள் கிடைக்கவேண்டுமென்று வேண்டி முடிக்கின்றேன்.

— இ. திருநாவுக்கரசு

# ஒரு கலங்கரை விளக்கம்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தினர் வெளியிடும் மலருக்கு ஆசிச்செய்தி அளிப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இச் சங்கத்தினருக்கும் இப்பாடசாலைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துள்ளதாக அறிவதில் மிக்க மகிழ்ச்சி. இத்தொடர்பு எதிர்காலத்திலும் இப்பாடசாலையுடன் நெருங்கி வளர்ச்சியடையவேண்டுமென்றும் இச் சங்கம் இப்பாடசாலையின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு உறுதுணையாக நின்று உதவவேண்டுமென்றும் அவாவுகின்றேன்.

பாடசாலைகள் அப்பாடசாலைகளைச் சூழவுள்ள சமுதாயத்தினருக்குக் கலங்கரை விளக்கங்கள் போன்று ஒளிகாட்டி நல்வாழ்வுக்கு வழிவகுப்பனவாகும். பாடசாலைகளை நிறுவிய நமது முன்னோர்கள் தூயநல்நோக்கங்களுடனேயே அவற்றை நிறுவியிருப்பார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

இச்சங்கம் இப்பாடசாலையின் உயர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இவ்வூர் மக்களோடு தோளோடு தோள் கொடுத்து உதவிப் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்றுவாழ்த்தி இவர்களின் முயற்சிகளுக்கு உதவ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

— கே. மாணிக்கவாசகர்
முன்னாள் அதிபர்

# கிராமத்தின் திலகம்

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நான் 4 வருடங்களுக்கு மேல் அதிபராகப் பணிபுரிந்தேன். அண்மைக்காலத்தில் நாயன்மார்கட்டு மக்கள் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் 50 வது ஆண்டை நினைவு கூரும் ஒரு வெளியீட்டைப் பிரசுரிக்க விருப்பதாயும் சங்கத்தினால் ஸ்தாபிக்கப் பெற்ற மகேஸ்வரி வித்தியாசாலையின் ஆரம்ப வரலாற்றுக்கு ஒரு ஆசியுரை வழங்குமாறும் கேட்டிருந்தார்கள்.

நாயன்மார்கட்டு என்பது பெயர் அளவில் மாத்திரமல்ல சமய அடிப்படையிலும் சரித்திரங்களை மெய்ப்பித்துக்காட்டும் மெய்யடியார்களையும் பக்தர்களையும் கொண்டுள்ளது, மகேஸ்வரி வித்தியாசாலை இக்கிராமத்திற்கு பொட்டிட்டவாறாகக் காட்சியளிக்கிறது. எனது சேவைக் காலத்தில் எனக்கு முன்பு பாடசாலை அடைந்து வந்த வளர்ச்சிப்பாதையை சிற்சில நேரங்களில் நான் ஆராய்ந்து பார்த்ததுண்டு. அவ்வேளைகளிலெல்லாம் பாடசாலைக்கும் ஊர்மக்களுக்குமுள்ள தொடர்பு வர்ணிக்க முடியாத தரத்தில் காணப்பட்டது. எனவே பாடசாலையின் ஆரம்ப வரலாறு ஒன்றை மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் 50 வது ஆண்டு நினைவில் வெளியிடுவது பொருத்தமென்றே கருதுகின்றேன். வருங்காலத்திலும் இதுபோன்ற சீரியபணிகள் இச்சங்கம் நடாத்தத் திருவருள் கூட்டுவதாக

சங்கம் வளர்க! பணி வளர்க! பாடசாலை வளர்க!

— பொ. சிவசுப்பிரமணியம்
முன்னாள் அதிபர்.

# சாதனை புரிந்த நாயன்மார்கட்டினர்.

பாலர்-இளைஞர்-இயக்கங்களில் அதிகம் ஆர்வமுள்ளவனென்ற முறையில் இவ்வியக்கங்களை ஊக்குவிப்பது எனது தலையாய கடமை. நாயன்மார்கட்டிற்கும் எனக்கும் நீண்டகாலத் தொடர்புண்டு. அவ்வூர்மக்களின் கடமையுணர்ச்சி-கடவுள் பக்தி எடுத்த காரியத்தை எவ்வாற்றானும் நிறைவேற்ற வேண்டும் என்ற மனப்பான்மை நற்குண நற்செயல்கள் மெச்சத்தகுந்தன.

சைவ வித்தியா விருத்திச் சங்க (Hindu Board) பிதா அமரர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் ஒரு நாள் பேச்சுவாக்கில் ''ஓர் இரவில் ஒரு பாடசாலையை [மகேஸ்வரி வித்தியாசாலையை]க் கட்டித்தந்த மக்களல்லவா நாயன்மார்கட்டினர்'' என்ற வார்த்தை இன்றும் என் மனத்தின் ஆழத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது நாயன்மார்கட்டு மக்கள் அவருடைய இவ்வாக்கை தமக்குக் கிடைத்த ஓர் ஆசீர்வாதமாகக் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களால் அறுபத்து மூன்று நாயன்மார்களின் குரு பூசைக்காக விடப்பட்ட நிலப்பரப்பில் வாழ்கின்ற இம்மக்களின் பண்பு நிலவிசேடத்தால் சிறப்பாக அமைந்திருக்கும்தானே. இவ்வூர் இளம யுவர்கள் யுவதிகளின் சமயத்தொண்டு, அரசியல் தொண்டு, தளராத ஊக்கம் மற்றையவர்களுக்கு ஓர் வழிகாட்டியாக அமையுமென இவ்விளைஞர் சங்கத்தைப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்த்துகின்றேன்.

— ஆ. இளையதம்பி
இளைப்பாறிய முன்னாள் அதிபர்

# ஆலின் சிறுபழத்து ஒரு விதை!

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றையவை''

என்பது வள்ளுவர் வாய்மொழி. கெடுதலில்லாத செல்வம் கல்வி. அஃதொழிந்த மணி-பொன் முதலியன செல்வமல்ல. எனவே கெடுதலில்லாத கல்விச் செல்வத்தை வரும் சந்ததியினருமே பெற்றுக்கொள்ளும் வகையில் அமைந்தது நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை. மகேஸ்வரி வித்தியாசாலை உருவாக முயற்சித்தவர்கள் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் சிறுவர்கள். சிறுவர்களின் தலையீட்டால் உருவாகிய மேற்படி பாடசாலை இன்று எவ்வளவு பெரிதாய் அமைந்துவிட்டது. இன்னும் எவ்வளவு பெரிதாக அமையப்போகிறது. சிறுவர்கள் அன்றோ இப்பாடசாலையின் முதுகெலும்பு!

தெள்ளிய வாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே!

என்பதை நினைவுகூரும் வகையில் இப்பாடசாலை அமைந்துவிட்டது. இது சம்பந்தமான ஆரம்ப வரலாற்று வெளியீட்டில் அன்றிருந்த இளம் உள்ளங்கட்கும் எனக்குமுள்ள தொடர்பு ஓர் ஆசியுரை நல்க இன்று வாய்ப்பளித்துவிட்டது. சங்கம் வளர்க. சங்கத்தின் பணி வளர்க.

— தி, மாணிக்கவாசகர்
தபால் தந்திப் பகுதி, அநுராதபுரம்.

# முன்னுரை

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நான் கல்வி பயின்றேன். ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் அருகிலுள்ள ஸ்ரீ சித்திவிநாயகரைத் தரிசிக்கப் பள்ளிப்பிள்ளைகள் குறைந்தது மூன்று ஆசிரியர்களுடன் செல்வது அன்று நிலவிய வழக்கம். கலை, சமயம், கலாச்சாரம் என்பன மாணவர் மத்தியிலிருந்தே வளர்க்கப் படவேண்டும் என்பதற்கு அன்றிருந்த நடைமுறைகளுள் இதுவுமொன்று. பாடசாலையில் ஆரம்பக்கல்வி பயிலும்போதே திண்ணைப்பள்ளியிலும் நான் படிக்க வைக்கப்பட்டேன். இது எனது வீட்டுக்கு அண்மையிலேயே நடந்து வந்தது. இதை நடாத்தியவர் கந்தர்மடம் வேதாந்த மடத்தின் பஞ்சகர்த்தாக்களில் ஒருவராயிருந்து வந்தவரும் நாயன்மார்கட்டைச் சேர்ந்தவருமான காலஞ்சென்ற சிவசிதம்பரநாத சுவாமிகளாவர். காலை 6 மணிக்கு எனது தாயார் அங்கு படிப்பதற்குத் தவறாது என்னைக் கூட்டிச்செல்வார். பத்துக்கு மேற்பட்ட சிறுவர் அவரிடம் கல்வி பயின்றோம். நான் ஏழாவது வகுப்பிற் படிக்கும்போது ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, நமச்சிவாய மாலை, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, திருக்குறள் காமத்துப்பால் தவிர்ந்த 108 அதிகாரங்கள், நீதிவெண்பா, நாலடியார் நிகண்டு, முதல் ஐந்து தொகுதிகள் ஆகிய இவ்வளவும் மனப் பாடஞ்செய்து நாளாந்தம் சுவாமிகளிடம் ஒப் படைத்துவிட்டேன். இது அவருக்கும் எனது தாயாருக்கும் பெருமகிழ்ச்சிக்குரிய காரியமாய் அமைந்துவிட்டது. 8ம் வகுப்புப் படித்து முடியு முன் எனது தாயார் புராணங்கள் பலவற்றை நான் வாசிக்கக் கேட்டு இன்புறுவதும் வழக்கம். இவற்றைக் கவனித்து வந்த சுவாமிகள் நன்னூல் – தொல்காப்பியம் முதலானவற்றின் சூத்திரங்களைப் படித்து மனப்பாடஞ்செய்து பெற்றுக்கொள்ளவும் என்னை வழிநடாத்தினர். 1926ம் ஆண்டு 8ம் வகுப்புச் சித்தியெய்தியதும் சுவாமிகளது எண்ணப்படி நான்மதுரைப்பண்டித பரீட்சையில் சித்தியெய்தியவனாக வரவேண்டும் என்று சுன்னாகம் பிராசீன பாடசாலையில் சேர்க்கப்பட்டேன். வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையா அவர்கள் தமிழ் பகுதிக்கும் தமிழ்நாடு ஸ்ரீ சிதம்பரநாத சாஸ்திரிகள் சமஸ்கிருதபண்டித வகுப்புகளுக்கும் ஆசிரியன்மாராக அங்கிருந்தனர். பிரவேச பண்டிதர், பாலபண்டிதர் இரண்டையும் படித்து முடிக்கும் தறுவாயில் நான் பெரிய நோய்வாய்ப்பட நேர்ந்தது. என்னுடன் அங்கு படித்தவர்களுள் பெரும்பாலானவர் பிராமணப் பிள்ளைகள்; தாம்புக்கயிற்றிலே பிடித்தவண்ணம் மொண்டுவந்து கொடுக்கும் ஒரு செம்பு தண்ணீருடனும் 5 சதத்திற்குச் சுன்னாகம் சந்தையில் வாங்கும் வெந்தயத்துடனும் கணேசையா அவர்கள் ஆரம்பிக்கும் படிப்பு தண்ணீரும் வெந்தயமும் முடிய நாளாந்தம் முடியும் விதத்தைச் சொல்லாமல் விட என்னால் முடியவில்லை. எனக்கு நோய் சுகமாக மாதம் 2 கழிந்துவிட்டது. பண்டிதர் படித்துக் கல்வெட்டுப் பாடுவதுதான் மிச்சம் என்று சிலர் அபிப்பிராயம் கூறியதன் மட்டில் கோப்பாய் கலட்டிச் சாதனா பாடசாலையில் ஆசிரிய மாணவனாக வருவதற்கென்று பிரவேசப் பரீட்சையில் படிக்கச் சேர்க்கப் பட்டேன். இரண்டு வருடங்கள் இங்கு படித்ததும் படிப்பு முடிவடையா வகையில் பல வகையான இன்னல்கள் குறுக்கிட்டுக் கொண்டன.

ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் என்னுடன் கூடப் படித்தவர்களில் ஒருவர் காலஞ்சென்ற டக்ரர் க. குகநாகதாசன் அவர்கள். 8ம் வகுப்புச் சித்தியெய்தியதும் இவர் இந்துக் கல்லூரியில் ஆங்கிலம் படிக்க வைக்கப்பட்டார். ஆனால் திண்ணைப் பள்ளியில் அவர் என்னுடன் படிக்கவில்லை எனினும் எம்மிருவர்க்கும் இடையில் எம்மூரில் ஒரு சங்கம் நிறுவி அதன்மூலம் ஒரு வாசிகசாலை உண்டாக்கவேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. தொடக்க வேலைகள் ஆரம்பமாகி 6 மாதங்கள் வரை நடாத்தப் பட்டு வந்தது. இச்சங்கத்திற்கு நாங்கள் வைத்த பெயர் 'நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கம்' என்பதாகும். இதில் அங்கம் வகித்து எம்முடன் ஒத்துழைத்தவரில் ஒருவர் இன்றும்

சீவந்தராய் இருப்பவரான திரு. இ. திருநாவுக்கரசு ஆவார். ஒருசில விஷமிகள் இச்சங்கத்தைச் செயல்பட விடாது குழப்பிவிட்டனர். சிறிது காலம் செல்லப் பெரியார் ப. இராமசாமி அவர்களின் உதவியுடன் திண்ணைப்பள்ளிக்கும் கால ஒழுங்குக்கும் இடைப்பட்ட ஓர் இராப்பள்ளி அம்பாள் வீதியிலுள்ள வெயிலுகந்த விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் வைத்தியர் இ. தியாகராசா அவர்கள் வைத்தியம் செய்த மண்டபத்தில் தொடக்கப்பட்டது. இதில் பெரியார் இராமசாமி அவர்களும் நானும் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லிக் கொடுத்தோம். முப்பதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இராப்பள்ளிக்குச் சேர்ந்துவிட்டனர். எனவே வகுப்பு வகுப்பாகப் பிரித்து மேல்வகுப்புகளில் பயிலும் மாணவர்களையும் பாடஞ்சொல்லி வைப்பதற்குத் தேடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது. திருவாளர் சி. சரவணமுத்து ஆசிரியர், வை. ஆறுமுகம், இ.வேலாயுதபிள்ளை, க. தியாகராசா என்பவர்களும் நாளாந்தம் பாடஞ்சொல்லிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டார்கள். இதிற் பயின்ற பாலர், வாலிபர்கள் பலர் ஏற்கனவே பெரியாரின் நல்லூக்கத்தை ஆதரவாகக்கொண்டு சங்கமொன்றையும் ஆரம்பித்துக்கொண்டார்கள். அதன் பெயர் மகேஸ்வரி பாலர் ஞானேதைய சங்கம் என்பதாகும். இதுபற்றிய சில குறிப்புகள் இவ்வூர்ப் பாடசாலை வரலாற்றில் பின்னல் தரப்பட்டுள்ளன. இராப்பள்ளியில் பெரியார்கள் பலரின் உபந்நியாசங்கள் நடாத்தி வைப்பதும் இராப்பள்ளி பகற்பள்ளியாய் அமையவேண்டுமென்பதும்பெரியார்க்கும் எனக்கும் உள்ள ஒரே நோக்கம். இதற்கான செலவுகள் எமக்கு ஒரு பொருட்டாக அன்று இருக்கவில்லை. படிக்கும் பாலரும் பெற்றாரிடமிருந்து இயன்றளவு பணந்தரத் தொடங்கினர். பாடசாலை நிறுவப்பட்டு இயங்கத்தொடங்கியதும் எங்கள் மதிப்பிற்குரிய சோதிடர் க. திருஞானசம்பந்தர் அவர்கள் எமக்கு ஒரு கடிதமெழுதியிருந்தார். அதிலுள்ள ஒரு பகுதி இது '...... ஐயா ! பாடசாலை நிறுவப்பட்டதும் அதைப் பொதுச் சொத்தாகவிட உங்களுக்கு விருப்பமா?' என்பதே எனது முதற் கேள்வி. அப்படியானல் நாங்கள் எங்கள் ஊரார் ஒத்துழைப்போம்' என்பதாகும். நாங்கள் இதைப் படித்ததும் அந்தக் கடிதத்துடனேயே அவரைச் சந்தித்து உங்கள் கேள்விக்கு எவ்வித பிழையும் நேராது எனச் சொல்லிவிட்டோம். இதன் உண்மையை இளைப்பாறிய ஆசிரியர் திரு. இ. வேலாயுதர் அவர்களிடம் இன்றும் கேட்டறிந்து கொள்ளலாம். எனவே டாக்டர் வெ. சி. இராமநாதன், சோதிடர் க. திருஞானசம்பந்தர் ஆகிய இருவரது ஒத்துழைப்பும் தேவை என்ற எண்ணத்தில் சங்கம் - சங்கம் என்று நாங்கள் கங்கணம் கட்டி நின்றுல் தொழிற்பாடு மட்டுப்படுத்தப்பட்டதாயிருக்குமென்று சங்கம் அவர்களின் பின்னே நிற்குமளவிற்கு நடந்து காட்டினேம். இந்த ரீதியில் பள்ளிக்கூடத்தை உருவாக்கி வளர்ச்சிப்பாதையில் வைக்கவேண்டும் என்ற ஒரே நோக்கில் பெரியாரின் மருமகன் மு. குமாரசாமி அவர்களின் ஆலோசனையையும் பின்பற்றிச் சங்கத்தின் பெயரில் மிகுதியாயிருந்த பணத்தை எடுத்து ஸ்ரீ இராசராசேஸ்வரி பேச்சியம்பாள் ஆலயத்துக்கு இரண்டு பித்தளைக் கைத்தீவர்த்திகளைச் செய்து சங்கத்தின் பெயர் பொறித்துக் கொடுத்ததுடன் பாடசாலைக்குச் சங்கத்தின் பெயரை வைக்கவும் வழிவகுத்துப் பாடசாலை முன்னேறும் பாதையில் மேற்சொல்லியவர்களுடன் ச. சிதம்பரநாத சுவாமிகளும் சேர்ந்து ஐந்து பேராகப் பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைத்தோம். பாடசாலை அரசினர் நன்கொடை பெறுமளவிற்கு வரும்பொழுது சைவ வித்தியா விருத்திச் சங்க மனேஜர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் பஞ்சகர்த்தாக்கள் என்ற முறையில் ஒரு கொம்மிற்றியாகப் பாடசாலையை நடாத்துமாறு எங்களுக்கு ஆலோசனை கூறினர். நாங்கள் அது தேவையில்லை டாக்ரர் வெ. சி. இராமநாதன் அவர்கள் லோக்கல் மனேஜராய் இருந்தால் போதும் என்று அவரை லோக்கல் மனேஜராகக் கொண்டு பாடசாலை இயங்க ஒரே மனதுடன் எல்லோரும் மனமொப்பினேம். அவர் காலமானதும் தலைமை ஆசிரியர் திரு. ஆ. இளையதம்பி அவர்கள் தமது திறமையைப் பயன்படுத்திப் பாடசாலையை நடாத்திவரப் பாடசாலை 1962ம் ஆண்டு அரசினரால் சுவீகரிக்கப்பட்டுவிட்டது.

எனது விருத்தாந்தங்கள் சிலவற்றை நான் குறிப்பிடும் ஒரே பாதையில் இந்த முன்னுரை செல்வதாக அபிமானிகள் எண்ணக்கூடாது. திண்ணைப்பள்ளியில் படித்த - படிக்கவைத்த பெருமையும் சேர்ந்து அதன் நன்றிக்கடனுக மிளிரும் விதத்தில் ஒரு பெரிய பாடசாலை உரு வாயிற்று என்று சொல்லிவைக்கும் பாணியி லேயே இதைப் பெருமிதத்துடன் கைகூப்பி வெளிப்படுத்துகின்றேன். நாவலர் ஐயா காலந் தொடக்கம் திண்ணைப்பள்ளிகள் அளித்த முன் னேற்றத்தை இந்தத் தலைமுறையினர் அறிய வேண்டும் என்பதே என் நோக்கம்.

பாடசாலை கட்டத்தொடங்கிய காலத்தில் திருவாளர் மு. குமாரசாமி அவர்களது வீட்டி லேயே நான் பலமணி நேரத்தைக் கழித்துக் கொள்வேன். நான் அவர் வீடு சென்றதும் என்னை அவர் பெரிதும் வரவேற்று அன்புமொழி பேசி முற்றத்திலுள்ள மல்லிகைப் பந்தலின் கீழ் உள்ள ஒரு கல்லில் என்னை அமரச்செய்வார். அந்தக்கல்லை அவர் ''சந்திரகாந்தக் கல்'' என்று கூறிக்கொள்வது என்னுல் மறக்கமுடியாத ஒன்று. ஆத்மலாபமும், கிராம முன்னேற்றமும் கருதி இப்பள்ளி அமையவேண்டும் என்ற எண் ணத்திலேயே எல்லோரது குறிக்கோள்களும் இருந்துவந்தது. எங்களுடைய பாடசாலை என்றே, அதற்கும் மேலாக எங்கள் சந்ததி யிலுள்ள ஒருவரின் சொத்தாக ஆகவேண்டு மென்ற விருப்பமோ மேலே சொல்லப்பட்ட சங்கத்திற்கோ அதன் இயக்குநர்க்கோ ஏற் பட்டதில்லை.

இதில் தொடர்புகொண்ட பெரியார்களில் எவராவது பாடசாலையைத் தமது சொந்தச் சொத்தாகவோ, தனித்துச் செய்ததென்று வாதிப்பரென்றே - வாதிக்க வழிகோலுவ ரென்றே சங்க இயக்குனர்களில் எவரேனும் சந்தேகித்ததும் கிடையாது. மலரை வெளியிடும் விஷயத்தில் ஒத்துழைப்பும் ஊக்கமும் ஆசியும் தந்துதவிய மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்க இயக்குநர்க்கும் பாடசாலை வளர்ச்சிக்குஉழைத்த பெருமக்களுக்கும் எனது அன்பான சகோதர சகோதரிகளுக்கும் வருங்காலப் பெருமக் களாகத் திகழவிருக்கும் சிறுவர்க்கும் எனது அன்பு வணக்கம்.

''சொன்னபடியே தொழும்பாய்ப்
பணிசெய்வோம்.''

— வெ. சிவசம்பு
முன்னாள் ம. பா. ஞா. ச. போஷகர்


**அன்பளிப்பு**

★ சிறந்த பெறுபேறு
★ நிறைந்த வசதி
★ திறமையான ஆசிரியர்கள்
★ ஒழுங்கான வகுப்புகள்

# நொதேன் பெஸ்ற் இன்ஸ்ரிரியூட்,

391, நாவலர் வீதி, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# அம்பிகை அருள் வேண்டும்

சி, கனகரத்தினம்
உரிமையாளர், இரத்தினம் டிஸ்பென்சறி, உரும்பிராய் தெற்கு.
(முன்னுள் ம, பா, ஞா. சங்க இணைக்காரியதரிசி)

நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கத்தின் வாரிசாக 1930ம் ஆண்டில் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாள் ஆலய முன்றிலில் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் ஆரம்பமாகியது. காரியதரிசி என்ற முறையில் நானும் திரு: சி. சிவபாதசுந்தரம் அவர்களும் இணைக்காரியதரிசிகளாகத் தெரியப்பட்டுக் கருமமாற்றினோம். திருவாளர் ச. நடராசா அவர்கள் தனாதிகாரி. தலைவர் அமரரான ஆசிரியர் சி. சரவணமுத்து. உபதலைவர்திரு.இ.வேலாயுதர். பிரதானஇயக்குனர்களாக திருவாளர்கள் பெ. இராசகுலசூரியர் க. தியாகராசா ஆகியோரும் பணியாற்றினர். சங்கத்தின் கூட்டங்கள் திருவாளர் ச. நடராசா அவர்களின் இல்லத்தில் நடந்து வந்தது. சங்கத்தின் வளர்ச்சியில் பங்கு கொண்டவர்கள் பெரியார் ப. இராமசாமி, திரு. ச. சிவசிதம்பரம், மு: குமாரசாமி, வெ. சிவசம்பு என்போராவர். 1932ம் ஆண்டில் அம்பாள் வீதியிலிருந்த வைத்தியர் இ. தியாகராசா அவர்களின் வைத்தியசாலை மண்டபத்தில் இராப்பள்ளிக்கூடம் ஒன்றும் உருவாகியது. இக் காணி வெயிலுகந்த விநாயகராலயத்துக்குச் சொந்தமானதாகும். இதில் காலஞ்சென்ற ஆசிரியர் சி. சரவணமுத்து, வெ. சிவசம்பு, இ. வேலாயுதர், சி. சிவபாதசுந்தரம் வை. ஆறுமுகம், க. தியாகராசா என்போர் பாலர்க்குப் பாடஞ்சொல்லி வைக்கும் பணியில் ஈடுபட்டனர். 1934ம் ஆண்டில் இராப்பள்ளி ஒரு பகற்பள்ளியாய் ஆனாலென்ன என்ற எண்ணம் எல்லார் மனதிலும் வேரூன்றியது. பெரும் பெரும் உபந்நியாசங்கள் - கொண்டாட்டங்கள் - பாலரின் பாட்டு—அபிநயம் – கோலாட்டம் என்பவற்றுடன் நடைபெறும் அளவுக்கு இராப்பள்ளி தொழிற்பட்டது. இந்துசாதனப் பத்திராசிரியர் திரு. ம. வே. திருஞானசம்பந்தர், வித்துவான் க. கி. நடராசன் என்போரது வருகை - பேச்சு நடைபெற்றபின் பகற்பள்ளி உண்டாக்கும் முயற்சி துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. இந்துபோட் மனேச்சர் சு. இராசரத்தினம் அவர்களின் கண்காணிப்பில் கைலாச பிள்ளையார் கோவிற் காணியில் பாடசாலை ஆரம்பமாயிற்று: ஆரம்பத்தில் சங்கத்தின் தொழிற்பாட்டுடன் டாக்டர் வெ. சி. இராமநாதன், சோதிடர் க. திருஞானசம்பந்தர், திரு. வாளர்கள் ச. சிவசிதம்பரம், ப. இராமசாமி, மு. குமாரசாமி, வெ. சிவசம்பு என்போரும் ஒத்துழைத்தனர்.

பாடசாலையின் ஆரம்ப வரலாற்றை வெளியிட இன்று மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கமும் ஊரபிமானிகளும் - பெரியார்களும் வாலிபர் - சிறுவர் முன்வந்தமை மகிழ்ச்சிக்குரிய ஒன்று. பலரும் இதன் விருத்தாந்தங்களையே திரும்பத்திரும்ப எழுதுவதாக வெளியீடு அமைவது வாசகர்களுக்கு அருவருப்பை உண்டாக்கும். எனவே பாடசாலைக்கு அயராதுழைத்தவர்களர்கிய எனது பெரியதகப்பனுர் சோதிடர் க. திருஞானசம்பந்தர், எனது மாமனுர் டாக்டர் வெ. சி. இராமநாதன், திருவாளர் வெ. சிவசம்பு அண்ணர், அமரர் ச. சிவசிதம்பரம் ஆகியோருக்கும் சங்கத்தின் இணைக் காரியதரிசி என்ற முறையில் அவர்களுக்கு நன்றி கூறி பாடசாலையின் வளர்ச்சிக்கு அம்பிகையை வேண்டி முடிக்கிறேன்.

வணக்கம்

---

தேடி அலைந்து பெறும் புகழினை விட
தானாகத் தேடி வரும் புகழ் மகத்துவம் மிக்கது.

# நகையை விற்று நல்லது செய்த பெரியார்!

இ, வேலாயுதர்
இளைப்பாறிய ஆசிரியரும், முன்னாள் ம. பா. ஞா. சங்க உபதலைவரும்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் வரலாற்றுப் புத்தகத்தில் நான் ஓர் அணிந்துரை நல்குமாறு பணிக்கப்பட்டேன். அங்ஙனம் பணிக்கப்பட்டமைக்கு ஏதோ காரணம் இருக்கத்தான் வேண்டும். 1930ம் ஆண்டு தொடக்கம் நாயன்மார்கட்டு இளைஞர்களாகிய நாம் ஒன்று சேர்ந்து மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் என்ற பெயருடன் கிராம முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்து ஒரு சங்கத்தை நடாத்தி வந்தோம். இதற்கு திரு. சி. சரவணமுத்து தலைவராகவும், திரு. சி சிவபாதசுந்தரம், சி. கனகரத்தினம் இணைக்காரியதரிசிகளாகவும், திரு. ச. நடராசா தனாதிகாரியாகவும் நான் உபதலைவராகவும் இருந்து செயலாற்றினேம். இச்சங்கம் ஞாயிற்றுக்கிழமை தோறும் கூடி மாணவர்களுக்கு பேச்சு, தர்க்கம், பாட்டு முதலியவற்றில் பயிற்சி அளித்து வந்தது. இச்சங்கம் நாளடைவில் ஒரு இராப்பள்ளிக் கூடத்தையும் நடாத்தி வந்தது. காலம் சென்ற எனது அண்ணர் வைத்தியர் திரு. இ. தியாகராசா அவர்களால் அம்பாள் வீதியிலுள்ள ஒரு காணியில் இயங்கி வந்த வைத்தியசாலையில் இவ்விராப் பாடசாலை நடைபெற்று வந்தது எங்களுக்கு எமது தந்தையார் காலஞ்சென்ற திரு. ப. இராமசாமி அவர்களும், அறிஞரும் எமது அன்பிற்குப் பாத்திரமானவருமான திரு. வெ. சிவசம்பு அவர்களுமே வழிகாட்டிகளாக அமைந்தனர். இராப்பள்ளி நடாத்தி வந்த போது ஏற்பட்ட சிக்கல்களை எல்லாம் களைந்து சிறப்பாக அதை நடாத்த வழிவகுத்துத்தந்தவர்களும் அவர்களே. மாணவர்களாகிய எங்களால் நடாத்தப்பட்டுவந்த இராப்பள்ளியில் அனேக மாணவர்கள் சேர்ந்திருந்தமையாலும், எமது கிராமத்தில் ஒரு சைவப் பாடசாலை இல்லாமையாலும், இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியர் திரு. ம. வே. திருஞானசம்பந்தரை அழைத்து ஒரு ஆலோசனைக் கூட்டம் நடாத்த வேண்டும் என்று வழிகாட்டியதோடு அவரையும் அழைத்து வந்தவர் திரு, வெ. சிவசம்பு அவர்கள்தான். இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு மகேஸ்ரி பாலர் ஞானோதய சங்கமே கைப்பிரதியாக எழுதிய அறிவித்தல்களை வினியோகித்தது. திரு. ம. வே. திருஞானசம்பந்தரின் அறிவுரைகள் ம. பா. ஞா. சங்கத்தவர்களையும் எங்களுக்கு வழிகாட்டிகளாக இருந்தவர்களையும் ஏன் எங்கள் ஊரவர்கள் எல்லோரையுமே விழிக்கச் செய்தது. இதனால் எனது தந்தையாரும் திரு. வெ. சிவசம்பு, திரு. மு. குமாரசாமி, திரு. ச. சிவசிதம்பரம், சோதிடர் திரு. க. திருஞானசம்பந்தர் ஆகியோரும் இதில் தீவிரமாக ஈடுபட்டனர். திரு. ச. சிவசிதம்பரம் அவர்களின் ஆலோசனையின் பேரில் "இந்துபோட்" மனேச்சர் திரு. சு. இராசரத்தினத்திடம் பாடசாலை கட்டுவதைப்பற்றிக் கதைத்தபோது ரூபா 300 உடனடியாகக் கொடுத்தால் ஒரு கிழமைக்குள் பாடசாலை கட்டலாமென மனேச்சர் இராசரத்தினம் கூறியதாக அவர்கள் எங்களுக்கு அறிவித்தனர். பணம் கட்டுவதற்கு ஒருவரும் முன்வராமையாலும் ஏற்றுக்கொண்ட இலட்சியத்தை முற்றுப்பெறச் செய்யவேண்டுமென்ற ஆர்வ மிகுதியாலும் திரு. வெ. சிவசம்பு அவர்கள் தனது தாயாரது ஆபரணத்தை விற்று வந்த அவரது சொந்தப் பணம் ரூபா 300-ஐயும் சோதிடர் மூலமாக திரு. இராசரத்தினம் அவர்களிடம் சேர்ப்பித்தார். "புதிதாக ஆரம்பிக்க இருக்கும் பாடசாலையை பொதுவாகவிட உங்களுக்குச் சம்மதமா?" என்று கேட்டு எமது மதிப்புக்குரிய சோதிடர் திரு. க. திருஞானசம்பந்தர் அவர்கள் எங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் இராப்பள்ளிக்கூடமாக நடாத்திய அதே பள்ளிக்கூடம்தான் தற்பொழுது பகற் பள்ளிக்கூடமாக மாறி இருக்கிறது. இது எப்பொழுதும் பொதுவானதாகவே இருக்குமென்று

அவருக்கு அறிவித்திருந்தோம். அதன் பின்பே மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தவர்களும் எங்களுக்கு வழிகாட்டிகளாக இருந்தவர்களும் திரு. மு. குமாரசாமி, திரு. ச. சிவசிதம்பரம் சோதிடர் திரு. க. தி. சம்பந்தர், டாக்டர் வெ. சி. இராமநாதன் ஆகியோர் நமது கிராமத்திலும், அயல் கிராமங்களிலும் பணமும் பொருளும் சேகரிப்பதில் ஈடுபட்டுப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் மேற்படி சங்கத்தின் வேறு இரு சேவைகளைக் குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும். ஒன்று ம. பா. ஞா. ச. என்று பொறிக்கப்பட்ட இரு தீவர்த்திகளை இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாள் ஆலயத்திற்கு உபயமாக வழங்கியுள்ளது. இது இன்றும் அம்பாள் ஆலயத்தில் சான்றாகவுள்ளது. மற்றது இதே சங்கம் மேற்படி ஆலய உற்சவ காலத்தில் 6ம் திருவிழாவைச் செய்து வந்துள்ளதும் என்பதாகும்.

அரியாலையில் ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை உள்ளது போலவும், நல்லூரில் மங்கையர்க்கரசி வித்தியாசாலை உள்ளது போலவும் நாயன்மார் கட்டில் மகேஸ்வரி வித்தியாசாலை என்று பெயர் வைப்பது இதை ஆரம்பித்த சங்கத்தின் பெயரை ஞாபகப்படுத்துவதாகும் என்று இந்து போட் மனேச்சர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் கூறியபோதுஅதில் நின்ற நாம் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தோம். மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கமே மகேஸ்வரி வித்தியாசாலையைக் கட்டுவதற்கு முதற் காரணமாயிருந்தது என்பதை இராப்பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களும், கற்ற மாணவர்களும் சான்று பகர்வர். இத்தருணத்தில் இதில் பிற இடத்தில் கூறப்பட்ட பெரியோர்கள் இக்கைங்கரியத்தைச் செய்துமுடிப்பதற்குத் துணைக்காரணமாகவிருந்தார்கள் என்பதையும் குறிப்பிட வேண்டியதே, இளைஞர்கள் ஒன்றுதிரண்டால் எக்காரியத்தையும் சாதிக்கமுடியும் என்பதற்கு இப்பாடசாலை ஒரு உதாரணமாகும். வருங்காலத்தில் இக்கிராமத்தை முன்னேற்றுவதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென்று இளைஞர்களையும், பெரியோர்களையும் வேண்டிக் கொண்டு என்னையும் ஒரு பொருளாக மதித்து மகேஸ்வரி வித்தியாசாலையின் வரலாற்றுப் புத்தகத்திற்கு ஒரு குறிப்புத் தந்துதவும்வண்ணம் கேட்டமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே''

---

# மகிழ்ச்சிப் பிரவாகம்

**தி. தருமலிங்கம்**
இராப்பாடசாலை மாணவரும், பெ. ஆ. சங்க அங்கத்தவரும்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் வரலாற்று வெளியீட்டில் நான் ஒரு குறிப்பெழுத இடம் கிடைத்ததென்று பெருமைப்படவில்லை. எனது பேரனார் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாள்மீது இடையறா அன்புபூண்டவரென்பதும் பேச்சியின் ஆராதனைகளில் - புகழ் கூறுவதில் சலியாது உழைத்தவர் என்பதும் நான் கண்டதும் கேட்டதுமான தொன்று. அவரே இப்பாடசாலைக்கு அடிக்கல் நாட்டியவருமாவார். மேலும் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் நடாத்திய இராப்பாடசாலையில் கல்வி பயின்ற பெருமையின் அடிப்படையே நான் இக்குறிப்பு எழுதவும் இடமளித்தது. மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் தொடக்கம் - மகேஸ்வரி வித்தியாசாலை என்று ஆகியது சிறுவயது தொடக்கம் எனக்கு அடங்கா மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சிக் கடலில் நான் என் பிள்ளைகள் - உற்றார் - உறவினர் - ஊரார் எல்லோரும் திளைப்பதைப் பார்த்தல் அதிலும் மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சிப் பிரவாகம் என்றென்றும் நிலைக்கவும் பாடசாலை தனது வளர்ச்சிப் பாதையில் முன்னேறவும் தேவியின் அருள் வேண்டி இக்குறிப்பை முடிக்கிறேன்.

# கலைக் கல்வியும் தொழில் கல்வியும்

ச. நடராசா
இளைப்பாறிய புகையிரதப் பகுதி ஊழியர்

"மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் இயக்குனர்களில் நானும் ஒருவன். இச் சங்கத்தின் தனாதிகாரியாக நான் நீண்ட காலங் கள் பணிபுரிந்தேன். பல துறைகளையுந் தழுவிச் சங்கம் இயங்கியது, இதிலொன்று அம்பாள் வீதியில் அமைந்த முப்பதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் பயின்ற இராப்பள்ளியை நடாத்தியதாகும். இதில் என்னுடன் அயராதுழைத்தவர்கள் காலஞ்சென்ற ஆசிரியர் சி. சரவணமுத்து சி. சிவபாதசுந்தரம், இ. வேலாயுதர், ஆயுள்வேத டாக்டர் சி. கனகரத்தினம், பெ. இராசகுலசூரியர் என்போராவர். இராப்பள்ளி வளர வளர மேல் வகுப்புப் படித்த ஒரு சிலரும் ஒரு குறித்த நேரத்திற்குப் பாலர்க்குப் பாடஞ் சொல்லிவைக்க ஒழுங்கு செய்யப்பட்டனர். இதில் காலஞ்சென்ற ஆசிரியர் வை. ஆறுமுகம் இராஜேஸ்வரி வீதியில் வதிந்த கதிரவேலு அவர்களின் புத்திரனும் பொலிஸ் இலாகாவில் உத்தியோகம் வகித்தவருமான தியாகராசா ஆகிய இருவரும் பெரும் பங்கு கொண்டவர்கள்.

சங்கத்தின் ஆதரவில் நடந்த இராப் பள்ளிக்கு இடந்தந்தவர் வைத்தியர் தியாகராசா அவர்கள். தரச்செய்தவர் பெரியார் ப. இராமசாமி அவர்கள். இந்த இருவருடன்இராப் பள்ளி நல்ல முறையில் இயங்க திருவாளர் மு. குமாரசாமி, வெ. சிவசம்பு ஆகிய இருவரும் ஆரம்பத்தில் இருந்தே செயலாற்றினர். ஒரு சிறிய காலத்தில் இராப்பள்ளி பகற்பள்ளியாய் அமையவேண்டும் என்ற ஓர் எண்ணம் சங்கத்தினரையும் அதிற் பங்குகொண்ட பெரியார்களையும் பற்றிக்கொண்டது. இராப்பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர்களுள் திறமைசாலிகளாகவுள்ள பிள்ளைகளைத் தெரிந்து ஒரு பிரிவுக்கு 5 பிள்ளைகளாகக் கொண்டு பாட்டு, கும்மி, கோலாட்டம், உபந்நியாசம் என்பன பழக்கினோம். ஒருமுறை இதில் அக்கறை கொண்ட எல்லோரும் சேர்ந்து இந்துசாதனப் பத்திரிகாசிரியர் ம. வே. திருஞானசம்பந்த பிள்ளை அவர்களை அழைத்து ஒரு பகிரங்கக் கூட்டம் நடாத்தியதுடன் பாலர்களின் நடிப்பு முதலிய திறமைகளை வெளிக்கொணர வாய்ப் பளித்தோம். பல பல நூற்றுக்கணக்கானோர் இதைப் பார்த்தனர். பத்திராதிபர் அவர்கள் அன்று செய்த சொற்பொழிவு பள்ளிக்கூடம் கட்டி முடிந்ததுபோலான ஓர் எழுச்சியை உண்டுபண்ணிவிட்டது. அடுத்து வித்துவான் க. கி. நடராசன் அவர்களும் ஒரு சொற்பொழிவுக்கு அழைக்கப்பட்டார். பகற்பள்ளியும் ஆரம்பமாகிவிட்டது. பாடசாலை தொடங்கியதும் சங்கத்தின் பணி பாடசாலையை மையமாகக் கொண்டிருந்தது. பாடசாலையின் முதல் தலைமை ஆசிரியர் திருவாளர் இரத்தினம் அவர்கள். அடுத்து நீர்வேலியைச் சேர்ந்த பூ. சின்னத்துரை தலைமை ஆசிரியராக வந்தார். இவருடைய காலத்தில் நான் திருநெல்வேலி சைவ வித்தியாசாலைக்கு அருகாமையில் அமைந்திருந்த நெசவுப் பாடசாலை ஒன்றில் பயிற்சிபெற்றுக்கொண்டிருந்தேன். பயிற்சி நெறிகளில் கயிறு திரித்தலும் ஒன்று. குறித்த இரண்டு கைத்தொழில்களின் பயிற்சி முடிந்து நான் தராதரப் பத்திரமும் பெற்றுக்கொண்டேன். 1937ம் ஆண்டு மகேஸ்வரி வித்தியாசாலைக்கு திருவாளர் ஆ. இளையதம்பி அவர்கள் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். எனக்கும் அவருக்கும் இடையில் நடந்த சம்பாஷணை இன்றும் நினைவில் உள்ளது. ஷ பாடசாலையில் முதலில் கயிறு திரிக்கும் தொழிலை ஆரம்பிப்போமென அவர் என்னைக் கேட்டுக்கொண்டார். அதன் வளர்ச்சியை மட்டிட்டு அவ்வனுபவ அடிப்படையில் நெசவைத் தொடங்குவோமென்பது எம் இருவரதும் முடிவு. கயிறு திரிக்கும் சக்கரம் ஒன்றையும் பாடசாலைக்குத் தருவித்திருந்தார். ஆரம்பத்தில் வேதனம் பெறாத ஓர் ஆசிரியனாக நான் பணிபுரிந்தேன். முதலில் கொழும்புத்துறை சென்று வெளியிடங்களில் தும்புவாங்கி கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைக்கு அதைக் கொண்டுசென்று சுத்திகரித்து மகேஸ்வரி வித்தியாசாலைக்குக் கொண்டுவருவதும் பயிற்சி

வகுப்பை நடாத்துவதும் எனது தனிப்பட்ட பணியாக அமைந்துவிட்டது. 28க்கும் மேற்பட்ட சிறுவர் என்னிடம் பயிற்சிபெற்றனர். மாதங்கள் சில கழிந்தன. நான் வேதனம் எதுவும் பெறவில்லே. சங்கக் கூட்டம் எனது வீட்டிலேயே நடந்துவந்தது. இங்கு குறிப்பிடவேண்டியஒன்று. வேதனம் எதுவும் பெருததினல் சங்கத்தினருக்கும் நான் இதைச் சொல்லிவிட்டு நெசவுத் தொழிலே எனது வீட்டில் ஆரம்பித்துக்கொண்டேன். ஒருசில வாரங்கள் போனதும் மகேஸ்வரி வித்தியாசாலேயில் ஒரு சிங்கள ஆசிரியர் எனது பணியைச் செய்துவந்தார். குறிப்பிட்ட ஒரு காலத்தில் அதுவும் நின்றுவிட்டது. நாட்பள்ளியிலன்று ஆசிரியராக வந்து இளைப்பாறும்வரை சேவைபுரிந்த ஆசிரிர் திரு. க முத்தையா அவர்களுக்குப் பிரியாவிடை நடந்தபோது மகேஸ்வரி பாலர் ஞானேதய சங்கம் - அதன்பணி பாடசாலே கட்டப்பட்ட வரலாறு என்பன திருவாளர் வெ. சிவசம்பு அவர்களால் பலநூற்றுக் கணக்கான மக்கள் மத்தியில் கோடையிடிபோல அறியாதவர்களும் அறியும் விதத்தில் விளக்கி வைக்கப்பட்டது. இதிலிருந்து ஊரபிமானிகளின் சிந்தனே பாடசாலேயைப் பொறுத்தமட்டில் மேலும் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது.

அடுத்து இப்பொழுது மகேஸ்வரி பாலர் ஞானேதய சங்கமும் இதற்குமுன் இயங்கி மறைந்திருந்த நாயன்மார்கட்டு நல்லிளேஞர் சங்கமும் ஒன்று சேர்ந்து பாடசாலேயின் ஆரம்ப வரலாற்றை எடுத்துரைக்க முன்வந்தன. இதன் மட்டில் சங்கத்தின் தனதிகாரியென்ற முறையில் குறிப்பொன்று தரும்படி நான் கேட்கப்பட்டேன். இத்துணே மகிழ்ச்சி தரும் காரியம் பிறிதேனும் எனக்கில்லே. சிறுவனயிருந்த காலத்தில் எனக்குக் கிடைத்த தொடர்பு இம்முதுமைப்பருவத்திலும் பாடசாலேயை நினேவுகூரச் செய்ததும் இப்படியான வரலாற்றை நான் காணவும் வழிவகுத்தது. என்னே திருவருளின் விளேயாட்டு.

---

# உள்ளதைச் சொல்வேன்

**திருமதி. செ, நாகலிங்கம்**
*ஆசிரியை, மகேஸ்வரி வித்தியாசாலே*

**1934-ம்** ஆண்டு மகேஸ்வரி பாலர் ஞானேதய சங்கத்தினல் அம்பாள் வீதியிலுள்ள கோவில் வளவில் நடாத்தப்பட்ட இராப்பாடசாலேயில் கல்விபயின்ரேரில் யானும் ஒருத்தி என்பதைப் பெருமையுடன் ஒப்புக்கொள்கின்றேன். பின் மேற்படி சங்கத்தின் நன்முயற்சியால் இராமநாதன் வீதியிலுள்ள கைலாசபிள்ளேயார் வளவில் அச்சங்கத்தின் தலேப்பெயரைக் கொண்ட பாடசாலேக்குப் பெரியார் திரு. மு. வல்லிபுரம் என்பவரால் அத்திவாரம் இடப்பட்டது. ஊராரின் உதவியுடனும் சைவ வித்தியா விருத்திச் சங்க ஆதரவுடனும் இப்பாடசாலே படிப்படியாக வளர்ச்சிபெற்று வந்தது. மேற்படி பாடசாலேயில் ஆரம்பத்தில் ஆரம்பக் கல்வி கற்ற மாணவர்களுள் நானும் ஒருத்தி என்பதையும் பெருமையுடன் கூறிக்கொள்கின்றேன். காலகதியில் இப்பாடசாலே மகாவித்தியாலயமாக வளர்ச்சி பெற்று இக்கிராமத்துக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் என்பது எனது நம்பிக்கை, நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானேதய சங்க நிர்வாகிகள் நல்நோக்குடன் மேற்படி சங்கத்தின் 50ம் ஆண்டு நினேவாகப் பாடசாலேயின் வரலாற்று மலர் ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளார்கள் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு மலருக்கு எனது நல்லாசியையும், வாழ்த்தையும் எனது தந்தையாரின் நினேவாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன், ★

---

உலகத்தைத் துறந்தவனிலும் பார்க்கப் புரிந்தவனே ஞானி

# பெருமைக்குரியது

நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் வெளியிடும் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் வரலாற்று மலருக்கு மேற்படி சங்கம் நடாத்திய இராப்பாடசாலையில் கல்விபயின்ற மாணவி என்ற முறையில் சிறு குறிப்புரை நல்குவதில் நான் பெருமைப்படுகிறேன். மேற்படி சங்கம் நடாத்திய இராப்பாடசாலை மகேஸ்வரி வித்தியாசாலை என்ற பெயரோடு வளர்ச்சியடைந்து எத்தனையோ ஆசிரியர்களையும, மாணவர்களையும் கண்டு முன்னேற்றப்பாதையிவ்செல்வது பெருமைக்குரியது ஒன்று.மேலும் இப்பாடசாலை வளர்ச்சியடைந்து ஒரு மகா வித்தியாலயமாக வரவேண்டுமென எல்லாம் வல்ல அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

திருமதி ப. சிவபாக்கியம்

---

# நான் செய்த தொண்டு

திருமதி ஈச்சம்மா சரவணமுத்து

**1935-ம்** ஆண்டு மார்கழி மாதம், கொட்டும் மழை, இரவு ஏழு மணி இருக்கும். நான்கு முகங்கள் என் வீட்டுத் திண்ணையில் மண்ணெய் விளக்கின்முன் தோற்றமளித்தன. பெரியார் ச. பொன்னையா, செட்டியார் கந்தையா, வ. தம்பிப்பிள்ளை, வெ. சிவசம்பு இவர்கள்தான். மனத்திகிலுடன் வந்த காரியம் எதுவென வினவிக்கொண்டு வெற்றிலைத் தட்டத்தை அவர்கள் முன் வைத்தேன். '' இந்தப் பெடியள் ஒரு புதுப் பள்ளிக்கூடத்தைக் கட்டிப்போட்டுதுகள். உங்களுடைய குறிச்சியிலிருந்தும் நாலு இரண்டு பிள்ளைகளை அனுப்பப் பாருங்கோ! பிள்ளைகளுக்கு வேண்டிய சௌகரியம் எல்லாம் பெடியள் செய்யும்'' என்று கந்தையா அண்ணர் சொன்னார். கந்தையா அண்ணரின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாது ''என்னால் முடிந்தவரை பிள்ளைகளைச் சேர்த்து அனுப்பி வைக்கிறேன்'' என்று முகமலர்ச்சியோடு சொன்னேன் மூன்று நாட்களுள் முதன்முதலில் ஐந்து பிள்ளைகளை நானே கூட்டிச்சென்று படிக்கவைத்தேன். சிறுவர்கள் பாடசாலையிலிருந்து வரும்பொழுது புத்தகம், சிலேற்று, பென்சில் முதலிய உபகரணங்களோடும் வந்தனர். புத்தகங்களில் அப்பிள்ளைகளின் பெயர் எழுதப்பட்டிருந்ததுடன் ''நாயன்மார்கட்டு மகேஸ்வரி பர்லர் ஞானோதய சங்கத்தின் அன்பளிப்பு'' எனவும் எழுதப்பட்டிருந்தது. இதைக் கண்டவேறு சிலரும் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பிவைத்தனர். ஆரம்பத்தில் 120 அடி ;நீளமுடைய மண்டபமாக இருந்த வித்தியாசாலை நிரந்தரமான பல கட்டடங்களுடன் இன்று வளர்ச்சிபெற்று வருவது மகிழ்ச்சிக்குரிய காரியம். மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்க நிர்வாகிகளையும் பாடசாலை வளர்ச்சியில் அவர்களுக்குதவிய பெரியார் ச. பொன்னையா, செட்டியார் கந்தையா அண்ணர், வ. தம்பிப்பிள்ளை, வெ. சிவசம்பு ஆகிய நால்வரையும் பாடசாலை வழியாக நான் போகும் வேளைகளிலெல்லாம் நினையாத நாட்கள் இல்லை. எனது நினைவும் செயலுமே இவ்வறிக்கையில் சில சொல்லவைத்த தென்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிடுகிறேன்,

---

பிறரை வருத்திச் சேர்த்தநிதி உன்னை வருந்த வைத்துப் போகும்.

# முயற்சி திருவினையாக்கியது

த. குணமணி

இந்த மலருக்கு ஒரு குறிப்பெழுதவேண்டுமென நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்க நிர்வாகிகள் கேட்டார்கள். இக்கட்டத்தில் நான் ஒருபுறம் சந்தோஷமும் மறுபுறம் துக்கமும் அடைகின்றேன். எனது சிறிய தந்தையாராகிய செட்டியார் என வழங்கப் படும் இ. கந்தையா, வ. தம்பிப்பிள்ளை என்போர் வெ. சிவசம்பு அவர்கள் எதைக் கூறினு லும் அது ஒரு நியாயமான கோரிக்கை என்ற அடிப்படையில் அவரைப் பின்தொடர்வார் கள். இந்த அடிப்படையில் மகேஸ்வரி வித்தியாசாலைக்கு பிள்ளைகளைச் சேர்க்கும் பணியில் திரு. சிவசம்பு அவர்களின் கேள்விக்குச் சிறியதந்தையாரும், திருவாளர் தம்பிப்பிள்ளை அவர் களும் செவிசாய்த்தனர். பிள்ளைகளைச் சேர்த்து அனுப்பத் தொடங்கினார்கள். இவ்வாறான சந்தர்ப்பத்தில் நான் சோமசுந்தரப் போதகர் அவர்களின் கண்காணிப்பின் கீழ் இயங்கிய நல்லூர் சாதனா பாடசாலையில் ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தேன். அப்போது அங்கு தலைமையாசிரியராய் இருந்தவர் திருவாளர் கந்தப்பு ஆவர். சிறுவயதிலிருந்தே எந்த வகுப்பிலும் நான் முதலாவதாகவே தேறி வந்தேன். சங்கத்தின் தொழிற்பாட்டால் உருவான மகேஸ்வரி வித்தியாசாலைக்குப் பிள்ளைகளைச் சேர்த்து முன்னேற்ற வேண்டும் என்பதுதான் திரு. வெ. சிவசம்பு அவர்களின் ஒரே நோக்கம். இந்த நோக்கில் மேற்கொண்டு ஒரு நாள் வந்து ''குணமணியையும் எங்கள் பாடசாலையில் சேர்த்து விடுவோம்'' என்றார். சிறிய தந்தையாரிடம் மறுவார்த்தை கிடையாது. மறுநாளே சாதனா பாடசாலையில் இருந்து நான் மாற்றப்பட்டேன். தலைமையாசிரியர் கந்தப்பு அவர்கள் இதை விரும்பவில்லை. அதுபற்றி இங்கு நான் விபரிப் பதில் பலன் கிடையாது. இந்த மாற்றமே எனது கல்வி வளர்ச்சிக்குத் தடையாய் இருந்தது ஆரம்ப பாடசாலையானமையால் எனது கல்வித்தரம் குறையப் பல காரணங்கள் ஏற்பட்டு விட்டது. இதற்காக நான் இன்று கவலைப்படவில்லை. எங்கள் மத்தியில் திகழும் இப்பாடசாலை இன்று தரத்தில் உயர்ந்து வளர்ச்சிப்பாதையில் முன்னேறிக் கொண்டு செல்கிறது. மேலும் எனது மனைவியும் தற்போது இப்பாடசாலையில் ஓர் ஆசிரியையாகக் கடமையாற்றி வருகிறார். மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்க நிர்வாகிகளின் முயற்சி வீண்போகவில்லை, இப்பாடசாலை இன்னும் தரத்தால் உயர்ந்து அறிவொளிபரப்ப வேண்டுமென்று எல்லாம்வல்ல ஞானவைர வப்பெருமானின் பாதாரவிந்தங்களை வணங்கி விடைபெறுகிறேன்.

---

# வரலாற்றை வடிப்பது புகழின் போதைக்கன்று

குமாரசாமி துரைராசா

''கலைக்கூடம் ஒன்று திறக்கப்படும்போது சிறைச்சாலைகள் நூறு மூடப்படுகின்றன'' என்பது மேனாட்டு அறிஞர் கருத்து. இத்தகைய அரும்பணியில் அறிவொளி பரப்பி நிற்பது யாழ் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை ஆகும். ''ரோம் என்பது ஒருநாளில் கட்டி முடிக்கப்பட்ட நகரமன்று'' என்ற ஆங்கிலப் பழமொழிக்கு இவ்வித்தியாசாலையின் வளர்ச்சி மிகப்பொருந்தும். திண்ணைப் பாடசாலையாக இருந்து மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத் தால் வளர்த்து எடுக்கப்பட்ட அதன் வரலாறே ஒரு மான்மியம். தூக்கினால் அன்றோ தெரி யும் தலைச்சுமை'. இவ்வித்தியாசாலையின் வளர்ச்சிக்கு மேற்படி சங்கமும் ஏனைய பெருமக்களும் ஆற்றிய சேவை அளப்பரியது. இவற்றை என் தந்தையாரின் நாட்குறிப்பிலிருந்து அறியுந் தோறும் எத்துணை மகிழ்ச்சி. புதிய தலைமுறைகள் புரட்டிப்பார்க்கவேண்டும் இப்புதுமலரை பொதுவாழ்வின் சிறப்புக்கு அடித்தளம் அமைத்துவிடும்.

Donated by:-
Mr. K. C. KULARATNAM

''சூருவளி மாறிமோதியென், சூத்திரவிருத்துவான் ஆர்த்ததித்திடித்தென், கர்ண துரோண சயித்திரர் என்ன துரோகம் இழைத்திடினென் தேரொன்று கிடையாத குறையன்ரே களந்த வித்தான் சிறுவன்'' கைமாறு கருதாக் கழகத்தின் சேவையன்ரே. வரலாற்றைக் காலவெள்ளம் மறைத்தது. இடைச்சொருகல் தோன்றினுல் இலக்கியம் சீர்குலேயும். வரலாறுகள் இல்லா விட்டால் உண்மைகள் வக்கரிக்கப்படலாம். எனவே வரலாற்றை வடிப்பது புகழின் போதைக் கன்று; புனிதத்தைக் காப்பதற்கே என்பதை வாசகர்கள் நன்கறிவர்.

'' உங்களில் எவனுவது முதன்மை உள்ளவனு இருக்க விரும்பினுல்
அவன் ஊழியம் செய்யக் கடவன் ''
— பைபிள்

'' செய்கையிலனேன் சிறியேன் கழித்து பகல்
பொய்கை மலர்க் கொட்டிபோலப் பொலிந்ததுவே ''
— கந்தபுரார்ணம்

உண்மை ஊழியத்தால் உயர்ந்த கழகத்துக்கும் பெருமக்கள் சேவைக்கும் ஒரு அணி மலரை அர்ச்சிப்போமாக.

வணக்கம்

———

# மகேஸ்வரி பாலர் ஞானேதய சங்கத்தின் ஆரம்பகால அறிக்கையின் தொகுப்புரை

**சி. சிவபாதசுந்தரம் ( இணைக் கர்ரியதரிசிகளில் ஒருவர் )**

நாயன்மார்கட்டுக் கிராம முன்னேற்ற நலன் கருதி நாம் எம்முள் ஐக்கியப்பட்டு உழைக்கவேண்டும் என்னும் பெருநோக்குடன் 1930ம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பன்று ஸ்ரீ இராஜராசேஸ்வரி பேச்சியம்பாளின் மாலேப் பூசை முடிவடைந்ததும் ஆலய முன்றலில் திரு. வெ. சிவசம்பு அவர்கள் பெரியார் ப. இராம சாமிஅவர்கள் சகிதம்நாயன்மார்கட்டு இளைஞர் கள் பலர் கூடியிருந்தனர். கூட்டம் திரு. சி. சிவ பாதசுந்தரம் அவர்களின் தேவார பாராயணத் துடன் ஆரம்பமானதும் திரு.வெ.சிவசம்பு அவர் கள் முன்னுரை வழங்கினர். அதன் சுருக்கம் வருமாறு:

'' இரண்டு வருடங்களாக நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கம் என்று ஒரு சங்கம் இயங்கி வந்தது. அதன் முக்கியஸ்தர்களில் ஒரு சிலர் தற்போது பதவி வகிக்கவோ சங்கத்தை நடாத்தி வரவோ தயக்கம் காட்டி வருவதால் மேற்படி சங்கத்தில் பல புதிய இளைஞர்கட் கும் சந்தர்ப்பம் கொடுத்தால் சங்கம் வளர்ச்சி யடையும் எனவும் இளைஞர்களாகிய உங்கள் கையில்தான் யாவும் தங்கியிருக்கிறது. ... ...'' என்பதாகும். சிறுவர்கள் எல்லோரும் இவ் வுரையின் மூலம் எழுச்சியடைந்தனர்.

அடுத்து சங்க உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. முதலில் சங்கத்தின் தலேவரராக திரு. சி. சரவணமுத்து அவர்களும் உபதலேவராக திரு.இ. வேலாயுதர் அவர்களும் தெரிவுசெய்யப் பெற்றபின் இணைகாரியதரிசிகளாகத் திருவாளர் கள் சி. சிவபாதசுந்தரம் சி. கனகரத்தினம் ஆகி யோர்களும் தனுதிகாரியாக திரு. ச. நடராசா அவர்களும் மேலும் சங்கத் துணை-உறுப்பினர் களாகத் திருவாளர்கள் பெ. இராசகுலசூரியர் க. தியாகராசா, க. கனகரெத்தினம் ஆகியோ ருடன் சங்கக் காப்பாளர்களாக திருவாளர்கள் ப. இராமசுவாமி, வெ. சிவசம்பு ஆகிய இரு வரும் சபையோரால் தெரிவுசெய்யப்பெற்றனர்.

இதன்பின் சங்கத்திற்கு ஓர் அழகிய பெயர் சூட்டுதல் வேண்டும் என்று அங்கத்தவர்கள் கருத்து வெளியிட்டனர். பெரியார் ப. இராம சாமி அவர்கள் இதை வரவேற்றுப் பேசிய துடன் கூட்டம் அம்பாளின் ஆலய முன்றலில் நடைபெறுவதால் அம்பாளின் திருநாமங்களான மகேஸ்வரி, மனேன்மணி, பார்வதி, பரமேஸ் வரி, இராசராசேஸ்வரி முதலிய பெயர்களில் ஒன்றைத் தெரிவுசெய்யலாம் என்றும் மகேஸ் வரி என்பதை முன்னுகக் கொண்டு மகேஸ்வரி பாலர் ஞானேதய சங்கம் எனப் பெயரிடுதல்

நல்லதெனத் தாம் அபிப்பிராயப்படுவதாகவும் தெரிவித்தார். திரு. வெ. சிவசம்பு அவர்களும் இதை வரவேற்றுப் பேசினுர்கள். சபையோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். அன்றுமுதல் நாயன்மார்கட்டு மகேஸ்வரி பாலர் ஞானுேதய சங்கம் பல கூட்டங்களை நடாத்தி நாட்டின் நலன் முன்னேற்றம் என்பன கருதிப் பலசீரிய தொண்டுகளை ஆற்றிவந்தது.

1932ம் ஆண்டு சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பு அன்று அம்பாள் வீதியில் வைத்தியர் திரு. இ. தியாகராசா அவர்களால் தந்துதவப்பட்ட வைத்தியசாலை மண்டபத்தில் ஓர் இராப்பாடசாலை (திண்ணைப்பள்ளி) நடாத்துவது என்ற சங்கத்தின் தீர்மானத்தின்படி இராப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. குறுகிய காலத்தில் முப்பதிற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் அளவிற்கு வளர்ந்துவிட்டது. இராப் பாடசாலை பகற் பாடசாலையாக மாறினுல் என்ன? என்ற எண்ணம் சங்க அங்கத்தினரின் மனதில் உதித்தது. 1935ம் ஆண்டில் இராப் பாடசாலையில் படித்த பல பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள் சகிதம் ஒரு பகிரங்கக் கூட்டம் நடந்தது. காப்பாளர் திரு. வெ. சிவசம்புவின் வேண்டுகோளுக்கிணங்க இந்துசாதனப் பத்திராசிரியர் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள்பிரதமபேச்சாளராகக்கலந்து கொண்டு பொதுமக்கள் மத்தியில் உரையாற்றினர். சங்கத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசியதுடன் இவ்வூருக்கு ஒரு சைவப் பாடசாலை இல்லாத குறையை நீக்குதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்றும் கேட்டுக்கொண்டார்; அல்லாமலும் சிறுவர்களின் எண்ணம் நிறைவெய்தியே தீரும் எனவும் ஆணித்தரமாகக் கூறினுர். அவருடைய சொற்பொழிவினுல் உந்தப்பட்ட ஊர்ப்பெரு மக்கள் பலரும் தம்மால் இயன்ற பொருளுதவி சரீர உதவிகளை வேண்டியளவு தந்துதவினர். சோதிடர் க. திருஞானசம்பந்தர், ச. சிவசிதம்பரம், மு. குமாரசாமி, வெ. சிவசம்பு ஆகியோர் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் மனேஜர் சு. இராசரத்தினம் அவர்களைத் துணைக் கொண்டு பாடசாலை கட்ட முயற்சிசெய்தனர்.

இக்கட்டத்தில் சொந்தக் கருமார்த்தமாகச் சென்னை சென்று வீடு திரும்பிய வைத்திய கலாநிதி திரு. வெ. சி. இராமநாதன் அவர்கள் நாயன்மார்கட்டு இளைஞர்களின் நன்முயற்சியைக்கண்டு அகமகிழ்ந்து மேற்படி இளைஞர்கள் செய்போந்த பணிகளைத் தம்பணியெனக் கொண்டு பாடசாலைக் கட்டிடத்திற்கு ஏற்பட்ட செலவுகளில் தம்மாலான பெரும் பகுதியைத் தாமும் ஏனையவற்றைத் தம்முடைய வைத்தியத் திறமையையும் புகழையும் பயன்படுத்திப் பல நன்கொடையாளரிடமிருந்தும் திரட்டிப் பாடசாலையை உருப்படியாக்கி எங்கள் சங்கத்தின் பேருக்கு நன்மதிப்பைத் தேடித்தந்த மேற்படி வைத்தியகலாநிதி திரு. வெ. சி. இராமநாதன் அவர்களுக்கும் எங்கள் சங்கம் நடத்த முற்பட்ட இராப்பாடசாலையை நடத்துவதற்குத் தாமாக முற்பட்டு இடமளித்த வைத்தியர் திரு. இ. தியாகராசா அவர்களுக்கும், கோழி குஞ்சுகளைப் பராமரிப்பதுபோல எம்மையும் எமது இராப் பாடசாலைச் சிறுவர்களையும் பாதுகாத்தளித்த எமது போஷகர் பெரியார் திரு. ப. இராமசுவாமி அவர்களுக்கும் எமது சங்கத்திற்கு அச்சாணிபோலவும் தூண்போலவும் நின்று அவ்வப்போது ஏற்படும் செலவினங்களிலும் வெளிவிவகாரங்களிலும் எம்மைத் தளம்பவிடாது பொறுப்பேற்று நடாத்தித்தந்த போசகர் திரு. வெ. சிவசம்பு அவர்களுக்கும் எமது பாடசாலை வளவுப் பரிபாலனத்தில் தம்மாலான பணிகளைச் செய்துவந்த எங்கள் சோதிடர் திரு. க. திருஞானசம்பந்தர் அவர்களுக்கும் எங்கள் சங்கச் சார்பிலும் எமது ஊரவர்கள் சார்பிலும் மனமார்ந்த நன்றியைக் கூறக்கடமைப்பட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொண்டு மேலும் எங்கள் பாடசாலைக் கட்டட நிதிக்கென எங்கள் சங்கத்தாலும் சங்க ஆதரவாளர்களாலும் சேகரிக்கப்பட்ட பணம் ரூபா 1500/- ஆயிரத்தைஞ்ஞூறையும் திருவாளர்கள் வெ. சிவசம்பு மு. குமாரசாமி, ச. சிவசிதம்பரம் ஆகியோர்கள் சேர்ந்து சோதிடர் திரு. க. திருஞானசம்பந்தர் அவர்கள் மூலம் சைவவித்தியாவிருத்திச் சங்க நிருவாகக் காரியதரிசி திரு. சு. இராசரெத்தினம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதென்பதும் நாம் அறிந்த உண்மையாகும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியவனுகிறேன்.

1935ஆம் ஆண்டு கார்த்திகை விளக்கீடு அன்று நாட்பள்ளி ஆரம்பமானது. சங்க அங்கத்தவர்களின் அபிப்பிராயத்தின்படி "மகேஸ்வரி வித்தியாசாலை" என பாடசாலைக்கு பெயர் சூட்டப்பட்டது. சங்க இளைஞர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்ததுடன் பற்றையாகக் கிடந்த பாடசாலை வளவை துப்புரவு செய்து விளையாட்டுப்போட்டிகளைப் பாடசாலை வளவிலும் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கக் கூட்டங்களைப் பாடசாலை மண்டபத்திலும் தொடர்ந்து நடாத்தினர். கால ஓட்டத்தின் விளைவாகச் சங்கத்தின் முழுப் பொறுப்பையும் இணைச் செயலாளரில் ஒருவரான திரு. சி. கனகரத்தினம் அவர்கள் தொடர்ந்து நடாத்தினர். சிறிதுகாலத்தில் ஆயுள்வேதக் கல்வி பயிலும்பொருட்டு அவரும் சென்னைக்குப்பயணமானர். ஏனையோரும் ஒவ்வொரு பாதையில் படிப்புக்குச் சென்றனர். சங்கம் சிறிது உறங்கிக்கிடந்தது.

எனினும் தற்பொழுது மேற்படி சங்கங்களில் உள்ளவர்களும் நாயன்மார்கட்டு வாலிபர் இளைஞர்கள் பலரும் மேற்படி சங்கத்தைப் புனருத்தாரணம் செய்து தொடர்ந்து நடாத்த முன்வந்திருப்பதை அறிந்துநான் மிகமிக மகிழ்ச்சி அடைகிறேன். வாழ்க மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் வளர்க! மகேஸ்வரி வித்தியாசாலை.

---


# லக்ஷ்மி மெடிக்கல் சென்ரர்

சகல விதமான நோய்களுக்கும்,
பிரத்தியேகமாக முறிவு, தறிவு வியாதிகளுக்கும்
சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

டாக்டர் S. சக்திவேல்,
பருத்தித்துறை வீதி,
3-ம் கட்டையடி, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

# யாழ். நாயன்மார்கட்டு,
# மகேஸ்வரி வித்தியாசாலையினதும்
## அதன் தோற்றத்திற்குக் காரணமாயிருந்த
# மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தினதும்
# ஆரம்ப வரலாறு

---

கிராம முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு 1928ம் ஆண்டு பொங்கற் பண்டிகையன்று ஓர் இளைஞர் சங்கம் ஆரம்பமானது. இது இளைஞர் கலாவிருத்திச் சங்கம் என்ற முறையில் இயங்கியதேனும் சிறிய காலத்தில் ''நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கம்'' என்று பெயர் பெற்றது. இதில் பிரதான பங்கு கொண்டவர்கள் திருவாளர் இ. திருநாவுக்கரசு, காலஞ்சென்ற டாக்டர் க. குகநாததாசன், வெ. சிவசம்பு என்போராவர். ஒரு வருட காலம் வரையில் இதன் கூட்டங்கள் நியதியான ஓர் இடத்தில் வைக்கப்படாது அங்கும் இங்குமாக நடந்துவந்தது. துரதிஸ்டவசமாக ஒருசிலரின் கவனிப்பின்பேரில் திரு. க. குகநாததாசன் அவர்கள் இதிலிருந்து விலகிக்கொண்டார். சங்கம் ஈடாடியது.

*1930*ம் ஆண்டு நாயன்மார்கட்டு இளைஞர்கள் கிராம முன்னேற்றத்தையே குறிக்கோளாகக்கொண்டு ஒரு புதிய சங்கத்தை நடாத்துதற்குத் திட்டமிட்டு இன்றுஇராஜராஜேஸ்வரி பேச்சியம்பாள் என்று அழைக்கப்படும் ஆலய முன்றிலில் ஒன்று கூடினர். கூட்டம் திரு. சி. சிவபாதசுந்தரம் அவர்களின் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது. இதில் வெ. சிவசம்பு அவர்களும் சமுகமளித்திருந்தார். அவர் தமது பழைய சங்கம் பற்றிய சில குறிப்புக்களைச் சொல்லியதுடன் அதன் பலவீனத்தையும் சுட்டிக்காட்டினர். காலஞ்சென்ற திருவாளர் ப. இராமசாமிப் பெரியார் அம்பாள் தரிசனஞ் செய்துவிட்டு இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தார். அம்பாள் சந்நிதியில் புதியசங்க உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது: அவை பின்வருமாறு: தலைவர் திரு. சி. சரவணமுத்து, உபதலைவர் திரு. இ. வேலாயுதர், இணைக் காரியதரிசிகள் திருவாளர்கள் சி. சிவபாதசுந்தரம், சி. கனகரத்தினம், தனாதிகாரி திரு. ச. நடராசா, துணை உறுப்பினர்கள் திருவாளர்கள் க. கனகரத்தினம், க. தியாகராசா, வை. ஆறுமுகம், பெ. இராசகுலசூரியர் போஷகர்கள் திருவாளர்கள் வெ. சிவசம்பு, பெரியார் ப. இராமசாமி அடுத்த நிகழ்ச்சியாகச் சங்கத்திற்கு என்ன பெயர் சூட்டப்பவேண்டும் என்ற பிரேரணையின் பேரில் அம்பாள் சந்நிதியில் தொடங்கியபடியால் அம்பாள் நாமங்களான இராஜராஜேஸ்வரி, மனோன்மணி, மகேஸ்வரி என்று சொல்லப்படும் நவசக்திகளுள் ஒன்றான ''மகேஸ்வரி'' என்றபெயரை முன்வைத்து ''மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம்'' எனப் பெயரிடுதல் தக்கது. என்று பெரியார் ப. இராமசாமி அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். இளைஞர்கள் எல்லோரும் இதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டார்கள். அன்று முதல் சங்கம் தனாதிகாரி திரு. ச. நடராசா அவர்களின் இல்லத்தில் தனது கூட்டங்களை நடாத்தி வந்தது.

1932-ம் ஆண்டு எம்மூர் இளைஞர்களின் கல்வி முன்னேற்றங்கருதி ஓர் இலவச இராப் பாடசாலையை நடாத்த வேண்டும் என்ற ஒரு கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய வைத்தியர் இ. தியாகராசா அவர்கள் இருந்து வைத்தியம்செய்ததும் வெயில்உகந்த விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமானதும் தற்பொழுது அம்பாள் வீதியென அழைக்கப்பெறுவதுமான வீதியில் உள்ள காணியில் பெரியார் திரு. ப. இராம

UNIVERSITY OF JAFFNA LIBRARY

சாமி, வெ. சிவசம்பு, சி. சரவணமுத்து ஆகியோர் பாடம் சொல்லி வைக்க இராப்பாடசாலை ஆரம்பமாயது.

இராப்பள்ளி நாளாந்தம் வளர்ச்சி அடைந்து வந்து 30க்கு மேற்பட்ட சிறுவர்கள் படித்தனர். இதன் மட்டில் பள்ளியை வகுப்புகளாகப் பிரித்து எங்கள் சங்க அங்கத்தவர்களாகிய திருவாளர்கள் இ. வேலாயுதர், க. கனகரத்தினம், க. தியாகராசா, வை. ஆறுமுகம், என்போர்இலவசமாகப்பாடஞ் சொல்லிக்கொடுக்கும்பணியை ஆற்றிவந்தனர்.

இந்த இராப்பள்ளிக்கு வைத்தியர் இ. தியாகராசா அவர்கள் தமது வைத்தியசாலை மண்டபத்தை உதவுவதில் நல்லிணக்கம் தெரிவித்த பெருந்தன்மை பாராட்டுக்குரியது. நாயன்மார் கட்டு ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய பூபதிவெ.சிவசுப்பிரமணியபண்டிதர்அவர்களின் வலக்கரமாக இருந்து வைத்தியம் செய்த இவர் இப்பாடசாலை தொடங்கும்போது "பூபதி அவர்கள் குருபூசை மடத்தில் ஒரு பாடசாலையை வைத்து நடாத்திக் கைவிட்டுவிட்டார், இதன் அடிப்படையில் அவரைக் குருவாகப் பெற்ற நான் அப்படியான ஒரு பள்ளி நடைபெற இடம்தரப் பெரிதும் விழைகின்றேன், எனச் சொல்லி எமக்கு ஊக்கம் தந்தது. எம்மால் மறக்கமுடியாத தொன்று. இராப்பாடசாலை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மாலை 5-30 மணியானதும் வைத்தியர் தியாகராசா அவர்கள் முறிவு தறிவு காரர்களுக்குப் புக்கை கட்டும் தனது கடைசிப் பணியை முடித்து விடு சென்றுவிட திருவாளர் இராமசாமிப் பெரியார் கால்முகம் கழுவித் திருநீற்றுல் உத்தூளனமாக உடம்பின் பெரும் பகுதியைத் துலக்கி நான்குமுள வேட்டி ஒன்று உடுத்தியவராய் ஒரு பொல்லையும் கையில்தாங்கியபடி மண்டபத்தை அடைந்து சிறுவர்க்குத் தேவார திருவாசகங்களை ஓதிக்கொடுத்துப் பள்ளியைத் தொடக்கி சிறுவர் படிப்பு முடியு மட்டும் நாடியில் பொல்லு முட்டியபடி பார்த்துக் கொண்டே இருப்பார், இப்பாடசாலை வலுப்பெற்று நடைபெறத் தொடங்கியது, எங்கள் இராப்பாடசாலையைப் பகற் பாடசாலையாக மாற்றி எங்கள் ஊரின் அண்மையில் ஓர் சைவப் பாடசாலை இல்லாத குறையை நீக்கவேண்டும் என்ற எங்கள் சங்கத்தாரின் அபிலாச்சையை நிறைவேற்றும் நோக்கத்துடன்1935ம்ஆண்டுசித்திரை வருடப்பிறப்பிலன்று இந்த இராப்பள்ளி வளவுக்குள் ஒரு பொதுக் கூட்டம் நடாத்துப தீர்மானம் உருவாகியது. திரு. வெ. சிவசம்பு அவர்கள் அதற்கான செலவைத் தாம் பொறுப பதாக வாக்களித்தார். இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியர் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்த பிள்ளை அவர்கள் இக்கூட்டத்திற்கு வரவழைக் கப்பட்டார். மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத் தலைவர் காலம் சென்ற ஆசிரியர் திரு. சி, சரவணமுத்து அவர்களின் தலைமையின்கீழ் காரியதரிசி திரு. சி. சிவபாதசுந்தரம் அவர்களின் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமானது. சங்க உபதலைவர் திரு. இ. வேலாயுதர் அவர்களும் இணைக் காரியதரிசிகளில் ஒருவரான திரு. சி. கனகரத்தினம் அவர்களும் கூட்ட நிர்வாகக் காரியதரிசிகளும், வரவேற்பாளர்களாகவும் கடமையாற்றினர். தனதிகாரி திரு. ச. நடராசா அவர்களும் அங்கத்தவர்களுள் திருவாளர்கள், க. கனகரத்தினம், க. தியாகராசா, வை. ஆறுமுகம் பெ. இராசகுலசூரியர் அவர்களும் சங்கத்திலுள்ள இளைஞர்களும் கூட்டம் சிறப்பாய்நடைபெறத் தமது பூரண ஒத்துழைப்பை நல்கினர். 200க்கு மேற்பட்ட மக்கள் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றினர், தலைவர் அவர்கள் கூட்டத்தின் பிரதான நோக்கத்தைச் சுருக்கமாக விளக்கிக் கூறி அதுபற்றிச் சபையோருக்கு விரிவாக எடுத்துக்கூறும் வண்ணம் பிரதம பேச்சாளரான பண்டிதர் ம, வே. திருஞானசம்பந்தர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். பண்டிதர் அவர்கள் தமது உரையில் இக்கிராமத்திற்கு நாயன்மார் கட்டு என்ற பெயர் எப்படி வந்தது எனவும் அது மிகத் தொன்மையும், சிறப்பும் வாய்ந்தது எனவும் இப்படியான ஊரில் இவ்வளவுகாலமும் ஒரு சைவப்பாடசாலை இல்லாதது வருந்தத்தக்க விஷயமெனவும் இக்குறையை நிவர்த்திசெய்ய வேண்டும் என்றும் கங்கணம்கட்டி இக்கூட்டத்தைக் கூட்டிய மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் இளம் உள்ளங்களின் பெருநோக்கம் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்படத் தக்கது எனவும் இளம் உள்ளங்களில்தான்

372
NAY AR.



இறைவன் சைதன்னியமாக நின்று அருள் செய்கின்றான். ஆகையால் இக்குறை விரைவில் நிறைவெய்தியே தீரும் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு எனவும் அதற்கு இவ்வூர்ப் பெருமக்கள் இளைஞர்களின் இப்பெரு முயற்சிக்குப் பூரண ஒத்துழைப்பைச் சலியாது நல்கவேண்டும் என்ற சாரம் தொனிக்க ஊக்கம் தரும் சொற்பொழி வாற்றினார். அவ்வமையம் அங்கு பிரசன்னமாய் இருந்த சோதிடர் க. திருஞானசம்பந்தர் அவர்கள் மேற்படி கைங்கரியத்திற்கு சங்கத்தின் இளைஞர்களோடு சேர்ந்து தமது ஒத்துழைப்பையும் தம்மாலான சகல உதவிகளையும் அளிப்பேன் என்று இளைஞர்கள் மத்தியில் கூறினார். மாதங்கள் சில செல்லப் பண்டிதர், வித்துவான் க. கி. நடராசன் அவர்களும் எமது சங்கத்திற்கு வரவழைக்கப்பட்டு இனியதொரு சொற்பொழிவை நிகழ்த்தினார். அவரது சொற்பெருக்குச் சங்கத்தை மேலும் ஊக்கம் எடுத்து உழைக்க வழி கோலியதுடன் பண்டிதர் அவர்களின் பேச்சுக்கு மெருகூட்டுவதாகவும் அமைந்துவிட்டது. சங்கமும், இராப்பள்ளியும் துரிதநடையில் முன்னேறிக்கொண்டு போனது.

இது இவ்வாறிருக்க சோதிடர் திரு. க. திருஞானசம்பந்தர் அவர்கள் சங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார், 'ஐயா! பாடசாலை நிறுவப்பட்டதும் அதைப் பொதுச் சொத்தாகவிட விருப்பமா?' என்பதே எனது முதற் கேள்வி அப்படியானால் நாங்கள் – எங்கள் ஊரார் இதற்கு ஒத்துழைப்போம் என்பதாகும். நாங்கள் இதைப் படித்ததும் அக்கடிதத்துடனேயே அவரைச் சந்தித்து உங்கள் கேள்விக்கு எந்தவித பிழையும் நேராது எனச் சொல்லிவிட்டோம்.

எங்கள் போஷகர்கள் பெரியார் ப. இராமசாமி, வெ. சிவசம்பு, மு. குமாரசாமி, ஆகிய மூவர்களும் அரசினர் கண்காணிப்பின் கீழ் இயங்கக்கூடிய ஒரு பாடசாலை கட்டுவதற்கு என்ன வழி என்று பலருடனும் ஆராயத்தொடங்கினர். இறுதியில் இந்துசாதன அச்சகத்தில் பிரதம தொழிலாளராக விளங்கியவரும் கந்தர்மடம் வேதாந்த மடத்தின் பஞ்சகர்த்தாக்களில் ஒருவருமான ஸ்ரீமான் ச. சிவசிதம்பரம் அவர்களிடம் சென்று ஆலோசனை கேட்டனர். அதற்கு அவர் சைவ வித்தியாவிருத்திச் சங்க மனேச்சர் திரு. சு. இராசரத்தினம் அவர்களின் துணை கொண்டு அச்சங்கத்தின் முகாமையின்கீழ் ஒரு பள்ளிக்கூடம் தொடங்குவதுதான் சுலபம் எனப் புத்திமதி கூறினர். இதன்மட்டில் சோதிடர் திரு. க. திருஞானசம்பந்தர் அவர்களையும் கூட்டிச்செல்வது நல்லதென்றும், அவரையும் சேர்த்து நாங்கள் நால்வரும் திரு. சு. இராசரத்தினம் அவர்களைச் சந்திப்பதற்கு சோதிடரிடம் சென்று அவர் உதவியுடன் ஒரு நாளை ஒழுங்கு செய்வோம் எனவும் முடிவுகட்டி சோதிடர் அவர்களிடம் சென்று மேற்படி விஷயத்தை விளக்கிக்கூறி திரு இராசரத்தினம் அவர்களைச் சந்திக்க ஒரு நல்ல நாளும் குறிக்கப்பட்டது. குறித்த தினத்தன்று சோதிடர் அவர்களைக் கூட்டிச் செல்வதற்கு திருவாளர்கள் வெ. சிவசம்பு மு. குமாரசாமி ஆகிய இருவரும் அவர் வீடு சென்றார்கள். சோதிடர் அவர்கள் தினமும் நல்லூர்க் கந்தனைத் தொழும் பாக்கியம் பெற்றவர் ஆதலால் அவர் நல்லைகந்தன் தரிசனத்துக்குச் சென்றுவிட்டார். மேற்படி இருவரும் நல்லையம்பதிக்குச் சென்றார்கள். திருவாளர் ச. சிவசிதம்பரம் அவர்களும் அச்சகத்தில் இருந்து நல்லையம்பதிக்கு வந்தார், சோதிடர் அவர்களும் தரிசனம் முடித்து வெளியே வந்தார். நால்வரும் ஒன்றுகூடினார்கள் மணி 5-30 ஆகிறது. பாடசாலை கட்டுவிக்கும் நோக்கமாகப் பேசி ஒழுங்கு செய்தற்கு திரு. இராசரத்தினம் வீட்டைஅடைந்தார்கள் திரு. சு. இராசரத்தினம் அவர்கள் நால்வரையும் அமரச்செய்து தாமும் அவர்கள் மத்தியில் இருந்து என்ன காணும் வந்தநீங்கள் என்று கேட்டார் திரு. சிவசிதம்பரம் அவர்கள் விஷயத்தை விளக்கினார். சோதிடர் அவர்கள் பள்ளிக்கூடம் கட்டும் இடம் கைலாசபிள்ளையார் கோயில் காணி என்பதைத் தெளிவுபடுத்தினார். ''நூற்றுக்கணக்காகப் பள்ளிக்கூடம் கட்டும் தொழில்தான் காணும் எனக்கு. இதற்கு என்ன யோசனை ரூபா 300/- கொண்டு வாருங்கள் மரம் பறிபடும். விளக்கீட்டில் அன்று நாட் பள்ளி தொடங்கலாம்'' என்று சொல்லிமுடித்தார் திரு. இராசரத்தினம் அவர்கள். திருவாளர் சிவசம்பு அவர்கள் பத்து நாட்களுள் பாடசாலை கட்டி முடியுமா ஐயா? என்றார். திரு இராசரத்தினம் மாணிக்கம் என்று சொல்லப்

N.A

250256

படும் தேவத்தச்சன் ''மயன்'' என்னிடம் இருக்கிறன்; உமக்கேன் காணும் இந்தக் கேள்வி'' நாளைக்குக்காசைக் கொண்டுவாருங்கள் என்றார். அளவில்லாத மகிழ்ச்சி. கைகூப்பி வணங்கி எல்லோரும் வீடுதிரும்பினார்கள். வீடுவரும் பொழுது ரூபா முன்னூறு எப்படித் தேடுவது கொடுப்பது என்பதே எல்லோரினதும் யோசனை நாயன்மார் வீதியிலுள்ள பொன் வினைஞர் பண்டிதர் கனகசபாபதி அவர்களின் வீட்டைத் தாண்டும் சந்தர்ப்பத்தில் திருவாளர் சிவசிதம்பரம் அவர்கள் தான் ரூபா இருபத்தைந்து தருவதாகவும் அடுத்த மாதத்தில் தான் தருவேன் என்று சொல்லி முடிக்கும் தறுவாயில் சோதிடர் அவர்கள் ''வாலிபர் திட்டம் எப்படி முடியுமோ முருகா'' என்றார். மூன்றும் நாள் சாயந்தரம் நாலு மணியளவில் திரு. வெ. சிவசம்பு அவர்கள் அவரது தாயாரது ஆபரணத்தை விற்று வந்த பணம் ரூபா முன்னூறுடன் மு. குமாரசாமி அவர்களையும் துணை கொண்டு நல்லைக்கந்தன் சந்நிதி சென்று திரு. ச சிவசிதம்பரம் க. திருஞானசம்பந்தர் இருவரும் உட்பட நால்வர் ஒன்று கூடித்தங்கள் முறைப் பாட்டைக்கந்தனுக்குக்கூறிஎங்கள்தலையீட்டிற்கு ஊக்கமும் ஆக்கமும்தரல் வேண்டும்என வேண்டுதல்செய்து சோதிடர் கையில் ரூபா முன்னூறையும் கொடுத்து நால்வரும் மனேஜர் இராசரத்தினம் அவர்கள் வீடு சென்றதும் பணத்தை சோதிடர் திரு. இராசரத்தினம் அவர்களிடம் கொடுத்தார். முதன்முறை சொன்னதே போன்று வியாழக்கிழமை மரம் பறிபடும் காணும் அடுத்து விளக்கீட்டில் அன்று நாட் பள்ளியை இரவு 9 மணிக்கு தொடங்குங்கள் என்றார். யுவ வருடம் கார்த்திகை மாதம் 17ம் திகதி திங்கட்கிழமை இது நிகழ்ந்தது. இத்திகதி தமிழ்த்திகதி ஆகும். 20ம் திகதி வியாழக்கிழமை மரம் பறிபட்டது. 21ந் திகதி ''6-12-1935'' நாள் கப்பு நடும் ஒழுங்கு. மயன் என்று சொல்லப்பட்ட ஆசாரியும் பணிபுரிய வந்திருந்தார். நாட்கப்பு நடும் பணியைச் செய்யச்சோதிடரை அழைத்துவர இருவர் சென்றனர் ''அவர் இங்கு இல்லை'' என்ற குரல் கேட்டது சென்ற இருவருக்கும் பெரும் திகில் உண்டானது. தாங்கள் செய்வதிலும் அவர்கள் திருப்தி அடையவில்லை திருவாளர் சிவசிதம்பரநாத சுவாமிகளோ கந்தர்மடம் வேதாந்த மடத்தில், செய்வது இன்னது என்று அறியாது வைத்தியர் மு. வல்லிபுரம் அவர்களை நாடினர். இரவு பத்து மணி சோனாவாரி மழை. வைத்தியர் மட்டுக்குமிஞ்சிய வயோதிபர். கூனிக் குறுகிய தோற்றமுள்ளவர் முறிவு, நோ, என்பன அவர் கைபட்டால் பறந்துவிடும் இது ஊரார் அறிந்த இரகசியம்; வீடு சென்ற இருவர் குரலுக்கு அந்த ஒருவர் முதன்முறையிலேயே குரல்கொடுத்தார் நடு நடுங்கிய சத்தத்துடன் என்னதம்பி? யார்தம்பி? என்றபடி வெளியேவந்தார். குமாரசாமி அவர்கள் விஷயத்தை விளக்கினர். நடக்கமாட்டேன் என்றார். சிவசம்பு தான் தூங்கிச்செல்வதாகச் சொன்னார். ''கைப்பந்தத்தில்'' குமாரசாமி அவர்கள் குடைபிடிக்க பாடசாலைக்கு அஸ்திவாரம் இடப்படும் இடத்திற்கு வந்தார். பெரியார் மு. வல்லிபுரம் அவர்கள் நாட்கப்பு நாட்டினர். மீண்டும் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வைபவம் முடிந்ததும் மாணிக்கம் வீடு திரும்பினர். அடுத்தநாள் விடிகிறது. கட்டடத்தின்மரவேலைகள் நடைபெறுகிறது. அதன் மட்டில் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் செய்த பணியை வர்ணிக்க முடியாது. வாலிபர் பாலர் பள்ளி வேயக் கிடுகு சேர்க்கின்றனர். வீடு வீடாய் கட்டுக் கட்டாய் கிடுகு சேருகின்றது. குறித்த நாளில் வேயப்படுகிறது. நாள் மூன்றுக்குள் பெரும் ஆர்ப்பாட்டம். 24ந் திகதி திங்கட்கிழமை [ 9-12-1935 ] திருக்கார்த்திகை விளக்கீடு. நாட்பள்ளிக்கு ஒன்பதுபிள்ளைகள் வந்திருந்தனர். நாட்பள்ளிக்கு ஆசிரியர் திரு. க. முத்தையா அவர்களைத் தந்துதவுமாறு திருவாளர் இராசரத்தினத்தை சிவசம்பு கேட்டிருந்தார். அவரும் வந்தார் தொடக்கத்திலேயே 120 அடி நீளமுடைய கொட்டிலிலான பள்ளியில் நாட்பள்ளி ஆரம்பமானது. அன்று க. இரத்தினம் அவர்கள் தலைமை ஆசிரியராக அனுப்பப்பட்டார். அடுத்து திருவாளர் இராசரத்தினம் அவர்கள் பாடசாலையை வந்து பார்வையிட்டார். அரையும் குறையுமான வேலை ஆசாரிமாரும் பணிபுரிகின்றனர். மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தின் இயக்குநரும் பிறரும் பாடசாலையில் குழுமிநின்றனர். பாடசாலைக்கு

என்ன பெயர் வைக்க யோசிக்கின்றீர்கள்? என்ற ஒரு கேள்வியைப் போட்டார். இராசரத்தினம் அவர்கள். சங்கத்தின் ஞாபகார்த்தமாக 'மகேஸ்வரி வித்தியாசாலை' எனப் பெயரிடுதலே தக்கது என்றார்கள் அங்கு நின்ற சங்க அங்கத்தவர்கள். மெத்தச்சரி என்று திரு. சு. இராசரத்தினம் அவர்கள் கூறவே ஏகோபித்த கரகோசத்துடன் தமதுமகிழ்ச்சியைத் தெரிவித்தனர் அங்கு நின்ற அனைவரும் சோதிடர் அவர்களும் இதில்நின்றார். உடனே சிறிது உரத்த சத்தத்தில் ''நல்ல பெயர் ஐயா,'' எனக்கும் நன்றாய்ப்பிடித்துக் கொண்டது என்றார்.

இது இப்படியிருக்க மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் இயங்கி வந்த முறையிலும் இராப்பள்ளியில் முப்பது சிறுவருக்குமேல் கல்வி பயின்றவகையிலும் விளக்கெண்ணெய்ச் செலவுக்கென ஒருவர் 10 சதம் தொடக்கம் 25 சதம் வரையில் பணம் செலுத்தி வந்தனர். இராப்பள்ளி பகற்பள்ளியானதும் எல்லாரது ஊக்கமும் பகற்பள்ளியிலேயே செலவாகவேண்டி இருந்தமுறையில் இராப்பள்ளி சிறிது செயலிழந்து காணப்பட்டது சங்கத்தில் சிறிது பணம் கையிருப்பில் இருந்தது. ஒருநாள் பெரியார் இராமசாமி அவர்கள் பழங் கதைகள் சொல்லிப் பாலருடன் குதூகலிக்கும் பொழுது அம்பாள் சந்நிதியிலான சங்கம் இன்று வளர்ச்சிப் பாதையில் வந்த விதத்தை என்னென்று கூறுவது எனப் பெருமிதத்துடன் கூறி திருவாளர் குமாரசாமி அவர்களின் எண்ணத்துக்கும் இணங்க எங்கள் சங்கத்தாரிடம் உள்ள காசில் அம்பாளுக்கு இரண்டு பித்தளைக் கைத்தி வர்த்திகள் செய்துகொடுப்போம்என்று ஒருபிரேரணையை முன்வைத்தார். பாலர் எல்லோரும் ஒப்பினர் தீவர்த்திகள் இரண்டு பித்தளையில் செய்யப்பட்டன; ம. பா. ஞா. ச. உபயம் எனப் பெயரும் பொறிக்கப்பட்டு தேவிக்குக் கொடுக்கப்பட்டது. நல்லிளைஞர் சங்கத்தார் பெரிய தீவர்த்திகள் செய்துகொடுத்ததும் இங்கு கவனிக்கத்தக்கது. பள்ளிக்கூடத்தை ஆக்கிய மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் இப்படியான ஒரு திருப்பணியையும் செய்துகொடுத்தது என்பதற்கு மேற்படி ஆலயத்தில் இருக்கும் இத் தீவர்த்திகள் இன்றும் சான்று பகரும். அது மட்டுமல்லாது அக்காலத்தில் தேவி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சியம்பாளின் 6ம் திருவிழா வைச் செய்துவந்தவர்களும் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கத்தினரே. அடுத்து பகற்பள்ளி ஆரம்பித்துவிட்டதென்று சங்கம் தொழிற்படாதிருக்க முடியவில்லை. ஒன்பது பிள்ளைகளுடன் நாட்பள்ளி ஆரம்பிக்கப்பட்ட தெனினும் புதுப்பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகளை விடுவதற்கு எத்தனையோ பிரமுகர்கள் முற்படவில்லை. இந்நேரத்தில் திருவாளர் க. முத்தையா ஆசிரியர் அவர்கள் தம் பகுதியிலிருந்து கூடுமான வரை பிள்ளைகளைக் கொண்டுவந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்தமை பாராட்டப்பட வேண்டியதொன்று. பெரியார் ச. பொன்னையா வெ. சிவசம்பு - செட்டியார் இ. கந்தையா வ. தம்பிப்பிள்ளை ஆகியோரின் உதவியுடன் சாளியபுட்டி – அரியாலை – மடத்தடி – கடுக்காயடி - வெட்டுக்குளம் ஆகிய குறிச்சிகளிலிருந்தும் பிள்ளைகளைச் சேர்த்துப் பாடசாலை வளரும் ஒழுங்குகளைச் செய்தனர். நாட்பள்ளி தொடங்கிய அடுத்தநாள் டாக்டர் வெ. சி. இராமநாதன் அவர்கள் சென்னைப் பட்டணத்தில் இருந்து வந்துவிட்டார் என்ற செய்தி அறிந்ததும் திருவாளர் குமாரசாமி, சிவசம்பு ஆகிய இருவரும் அவரைச் சந்தித்து பள்ளி அமைத்த வரலாற்றை விளக்கியதுடன் அதை வந்து பார்க்கும்படியும் கூறினர். உடனே அவர் தமது காரில் குறித்த இருவருடனும் வந்தார், பார்த்தார் – திகைத்தார் கண்கலங்கினார். ஐயாவாலும் இன்னும் எத்தனையோ பெரியாராலும் நெடுங்காலமாக இழுபட்டு வந்த ஒரு பெரிய கைங்கரியம் நான் சென்னை சென்று திரும்பும் இரு வாரத்திற்குள் பூர்த்தியான விதம் என்மனதைப் பெரிதும் ஈர்த்துவிட்டது'' என்றதுடன் பாடசாலை நிதிக்கென ரூபா 250/– ஐயும் அதற்கான கொப்பியில் எழுதினார். வாலிபருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. இனி என்ன எங்களூரில் பெரிய பள்ளி திகழப்போகிறதென்ற மகிழ்ச்சிக் கடலில் நீந்தியவராய் பள்ளி தொடங்கியதும் ரூபா 50/-க்குத் தளபாடம் போடுகின்றேன் என்று வாக்களித்திருந்தவராகிய ஆசிரியர் வெ. கந்தையா அவர்களைச் சந்தித்து தளபாடம் போடுமாறு வேண்டினர். அவர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் பாடசாலையைக் கொடுத்

துவிட்டு என்னிடம் எப்படித் தளபாடம் போடச்சொல்லிக் கேட்பீர்கள்? என்று மறுத்து விட்டார். எனினும் டாக்டர் வெ. சி. இராமநாதன் தமது வைத்தியத் திறமையின் செல்வாக்கையும், சோதிடர் திரு. க. திருஞானசம்பந்தர் அவர்கள் தமது சோதிடத் திறமையின் செல்வாக்கையும் பிரயோகித்துச் சங்க அங்கத்தவர்களுடன் பற்பல கோணங்களிலும் சென்று நிதி சேர்த்து சோதிடர் சம்பந்தர் மூலமாக சைவ வித்தியாவிருத்திச் சங்க மனேச்சர் திரு. சு. இராசரத்தினம் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேற்படி பாடசாலைக்குக் காலாகாலங்களில் பிரபல கட்டிட ஒப்பந்தக்காரர் திரு. யோ. வே. போல் அவர்களின் உதவியுடன் பணம் சேர்த்தது மல்லாமல் 120 அடி நீளமான பாடசாலையின் விஸ்தரிப்பில் கட்டிடங்கள் பலவற்றைக் கட்டி டாக்டர் வெ. சி. இராமநாதன் அவர்கள் லோக்கல் மனேச்சராகவும் விளங்கினர். எனினும் சோதிடர் அவர்கள் பாடசாலைக் காணியின் மேற்பார்வையை ஏற்று நடத்தி வந்தார்.

பள்ளிக்கூடம் அரசினரின் உதவிநன்கொடை பெறும்பொழுது இடாப்பில் ஏறக்குறைய 65 பிள்ளைகள் இருந்தனர். அடுத்து நீர்வேலியைச் சேர்ந்த பூ. சின்னத்துரை அவர்கள் தலைமையாசிரியராகவும் வரப்பெற்றார். மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம் - காடாய்க்கிடந்த கைலாசபிள்ளையார் கோவிற் காணி வீடாய் வந்த விதம் பத்து நாட்களுக்குள் பள்ளி அமைந்த வரலாறு நாலாபக்கங்களிலிருந்தும் பிள்ளைகள் ஊர்ந்தூர்ந்து வந்து வீதிகளையும், பள்ளியையும் துலங்கச்செய்த தன்மை தரம் வாய்ந்த அனுபவமுள்ள ஒரு தலைமையாசிரியர் பள்ளியை நடாத்தும் பணியை மேற்கொண்டமைகண்டு இறும்பூதெய்தினர். எந்தவொரு மூலைமுடுக்கில் ஒரு புல் பூண்டு காணப்படுமோ அவற்றையெல்லாம் அகற்றி மாலை நேரங்களில் பந்தடித்தல், கிளித்தட்டு மறித்தல் தேகாப்பியாசம் முதலிய விளையாட்டுக்களை பாடசாலை வளவிலும் கூட்டங்களை பாடசாலை மண்டபத்திலும் நடாத்தி மேலும் சந்தோஷித்தனர். சங்கரசுப்பிரமணிய சச்சிதானந்த ராசயோகிகள், மணி ஐயர், இந்துசாதனப் பத்திராசிரியர்கள் என் போரை வரவழைத்துக் காலாகாலங்களில் சொற்பொழிவுகள் - கதாப்பிரசங்கங்களையும் நடாத்துவித்தனர்.

இதன்மட்டில் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கக் காரியதரிசி திரு. சி. சிவபாதசுந்தரமவர்களும் சிறிது காலத்தில் விவாகம் செய்து கல்வியங்காட்டில் வசித்தார் இணைக்காரியதரிசியாகவிருந்த திருவாளர் சி. கனகரத்தினமவர்கள்தொடர்ந்து இச்சங்கத்தை 1942ஆம் ஆண்டு வரை தனித்து நடாத்தி வந்தார். இதன்பின் அவர்களும் ஆயுர்வேதம் படிக்கச் சென்னைப் பட்டினம் சென்றுவிட்டார். சங்கம் தனது பணியை ஆற்றும் வழியில் பள்ளிக்கூடம் ஒன்று உருவாகியதே போதும் என்ற மகிழ்ச்சி ஒருபுறமும், அன்றியும் சோதிடர் எழுதிய கடிதமும் அவரது கேள்வியும் ஓர் அளவுக்கு பூர்த்திசெய்யப்படவேண்டும் என்ற எண்ணமும் ஒருசிலரிடம் வலுப்பெற்ற தன்மையையும் கண்டு பிரச்சினைகள் பலவற்றின் மத்தியில் சங்கம் சிறிதுகாலம் உறக்கநிலையடைந்ததெனினும் தற்கால இளைஞர்கள் மேற்படி சங்கத்தைப் புனருத்தாரணம் செய்து மிகவும் திறன்பட நடாத்த முற்பட்டிருப்பதைக் கண்டு நாம் மிகவும் மனத்தேறுதல் அடைந்துள்ளோம் என்பதையும் மிகவும் அகமகிழ்ச்சியுடன் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம்.

டாக்டர் வெ.சி.இராமநாதன் அவர்கள் லோக்கல் மனேச்சராக இருந்து தமது பணியை புரிந்தாரேனும் சோதிடர் அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக டாக்டர் அவர்களுடன் சேர்ந்து பணம் சேகரிக்கவோ, தான் தனிப்பட்டமுறையில் பாடசாலைக்கு காலாகாலங்களில் எதெது செய்யவேண்டுமோ அதையெல்லாம் தன்னையும் டாக்டரையும் வேறாகக்கருதாது வளர்ச்சிக்கு உழைத்தமை பெரிதும் போற்றப்படவேண்டிய ஒன்று. அவர் மாத்திரமல்ல அவரது வீட்டார் அனைவருமே, பாடசாலைக்கும் ஆசிரியருக்கும் தேவையான எந்த உதவிக்கும் வேண்டுகோளுக்கும் சலிப்பின்றி உதவி நல்கியும் வந்தனர். இவை எல்லாம் மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கமும், எம்மூரும் செய்த தவமாகும்.

பாடசாலைத் தலைமையாசிரியர் ஆ. இளையதம்பி அவர்கள் தமது மதியூகத்தைப் பயன்படுத்தி ஊராரோடு இணைந்து பாடசாலையை நடாத்தி வந்தார். நாட்பள்ளிக்கு வந்திருந்த திரு. வாளர் க. முத்தையா ஆசிரியர் அவர்கள் இளைப்பாறும்வரை தமது சேவையை நல்கினர். 33 வருட சேவையில் திருவாளர் ஆ. இளையதம்பி அவர்களுக்கு பிற்பகுதியில் திரு. வை. ஆறுமுகம் அவர்களும் உதவித் தலைமையாசிரியராகக் கிடைக்கப்பெற்றுர். இவரது சேவை பாடசாலைக்குப் பெரும் முன்னேற்றத்தை அளித்தது.

* *

# நன்றியுரை

எமது சங்கத்திற்கும் சங்கத்தாலாய மகேஸ்வரி வித்தியாசாலைக்கும் வேண்டிய உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நல்கிய பெருமக்கள் அனைவருக்கும் எமது சங்கச்சார்பாக மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம் மேலும் உடுக்கை இழந்தவன் கைபோலநின்று எமது சங்கத்தின் இடுக்கண் களைந்து எறிந்த எங்கள் போஷகர் அமரர் திரு. வெ. சிவசம்பு அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்தி அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டிக் கொள்கிறோம்.

''நிற்க விளக்கிட்டார் பேறு சொல்லின் மெஞ்நெறி ஞானமாகும்'' என்ற பொன்மொழிக்கிணங்க எம்மூரின் கீழ்த்திசையில் கோயில் கொண்டு நின்று பல புதுமைகளைப் புரிந்து அஞதியில் பேச்சியம்மன் எனவும் எமது சங்கத்தாரால் மகேஸ்வரி எனவும் தற்பொழுது எமது ஊரவர்களால் இராஜராஜேஸ்வரி எனவும் அழைக்கப்பட்டுவரும் எமது குலதெய்வமாகிய அத்தேவியின் கருணைவெள்ளம் எம்மூரவர்களது ஏகோபித்த ஒத்துழைப்பையும் வைத்தியர் திரு. மு. வல்லிபுரம் அவர்களின் அடிக்கல் நாட்டிய கைவிசேசத்தின் பெருமையையும் எமக்கு நல்கி எமது மகேஸ்வரி வித்தியாசாலை படிப்படியாக வளர்ந்து சென்ற 1962ம் ஆண்டில் அரசினரால் சுவீகரிக்கப்பட்டு மேலும் பல புதுக் கட்டிடங்களையும் கொண்டு கல்வி வளர்ச்சிப் பாதையில் முன்னேடியாகத் திகழ வழிவகுத்துவிட்ட பேரருளைப் போற்றித் துதித்து எங்கள் பாடசாலையின் வரலாற்றில் உள்ள குறை முறைகளையும் அத்தேவிக்கே சமர்ப்பணம் செய்துவைக்கிறோம்.

வணக்கம்

முன்னுள் மகேஸ்வரி பாலர் ஞானேதய சங்க
உறுப்பினர்கள்

---

**செம்மணி, நாயன்மார்கட்டு** என பெயர் வந்த காரணங்களின் சில வரலாற்று புத்தகங்களிலிருந்தும் கர்ணபரம்பரையாகவும் எமக்குக் கிடைத்த சில ஆதாரங்களை வாசகர்களுக்குத் தருகிறோம்.

செம்மை + மண்ணி = செம்மணி எனத் திரிவுபெற்றது என்பதற்குச் சான்ருக இன்றும் செம்மணி வயலில் சிலவற்றில் அடிப்பாகத்தில் இரத்தக்கறை போன்ற செம்மை நிற மண் அமைந்திருப்பது காணக்கூடியதாக இருக்கின்றது.

பண்டைத்தமிழ் மன்னர் காலத்தில் மேற்படி வயற் பிரதேசங்களில் அமோக விளைச்சல் கிடைத்ததென்றும் அதையிட்டு அவர்கள் தங்கள் நல்லூர் இராஜதானியின் கீழ்த்திசையின் கண் வெயிலுகந்த விஞயகர் ஆலயத்தையும் ஒரு குருபூசை மடத்தையும் கட்டி அதில் 63 நாயன்மார்கள் குருபூசையை முறையாக நடாத்திவந்தார்கள். மேற்படி குருபூசைக்கு வரும் அடியார்கள் ஸ்நானசந்தியாவந்தனம் செய்வதற்கென 100 பரப்பு விஸ்தீரணம் கொண்ட ஓர் குளத்தை அமைத்து அதற்கு நாயன்மார் கட்டுக் குளம் எனப் பெயரிட்டு அதன் சுற்றுடல் கிராமத்திற்கு நாயன்மார்கட்டு என்னும் பெயர் வழங்கி வரலாயிற்று.

# சிலம்புக் கட்டுரைகள்

## முகவுரை

''சிறந்த நூல் என்பது ஒரு பெருங் கலைஞனின் உயிர்த்துடிப்பாகும். அவன் வாணாளைக் கடந்து பலகாலம் நிலைபெற்று வாழ்வதற்காகப் பக்குவம் செய்யப்பட்ட உயிர் அனுபவமாகும் அது.'' என்பது மில்டன் (Milton) என்ற பெருங் கலைஞனின் அனுபவச் சொற்கள். இந்த அறிஞனின் கூற்றுக்கேற்றதும், தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் புகழ்ந்து மணங்கமழச் செய்யவேண்டியதுமான ஒப்பற்ற காப்பியம் சிலப்பதிகாரம். இளமையில் அரசியல் வாழ்வைத் துறந்து, ஒப்புயர்விலாத் துறவியாகிச் செல்லுமிடமெல்லாம் தமிழ் செழிக்கவேண்டும் என்ற நோக்கோடு, இயற்கையன்னையின் அரவணைப்பில் திளைத்துத் தமிழ்த்தாயைக் காதலித்தவர் இளங்கோவடிகள். கூலவாணிகசாத்தனார், தம் சுவைப்பட்ட சில பூர்வீக உண்மைகளை இளங்கோவடிகட்குக் கூற அவர் அதைக் கற்பின் வீரகாவியமாக மாற்றினார்.

அரசியல் வாழ்வையும் சுகபோகங்களையும் துறந்து ஆண்டியாக வாழ்ந்தாலும் மன்னன் நீதி இது, மக்கள் நீதி இவை, உலக இயல்புகள் இவை என்று இடக்துக்கு இடம் வலியுறுத்தும் இளங்கோவின் இக்காவியம் எங்கள் பாரத மணித் திருநாட்டின் காவியம்! எங்கள் தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு காவியம்! அதனால் அது எம்மை வளர்த்துப் பண்படுத்தும் ஆற்றல் மிகுந்த ஒன்று என்பதை நாம் உணரவேண்டும்.

''ஊழ்வினை உருத்து வந்தூட்டும்', 'உரைசால் பந்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்', 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றுகும்' என்ற மூன்று தத்துவங்களையும் விளக்க எழுந்ததெனக் கூறப்படும் இக்காவியத்தில் காதல், இசை, தத்துவம் என்னுமிவை எவ்வாறு மிளிர்ந்து வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன என்பதை ஆராய்வதே இக்கட்டுரைத் தொகுப்பின் நோக்கமாகும். வற்றுது வழிந்தோடி வளம் பெருக்கும் வைகைபோல் ஆங்காங்கு வாழ்க்கை வளத்துக்கு அடிகோலும் மணிமணியான கருத்துக்களை நம் தமிழ் உலகம் வரவேற்க வேண்டுமென்பதே எனது பேரவா.

எந்த ஒரு பணியைச் செய்வதாக இருந்தாலும் அதற்கு ஊக்குவிப்பவர்களும் உதவிபுரிபவர்களும் பணியைச் செய்பவரை விட மிக உயர்ந்தவர்களாகி விடுகிறார்கள். (1946 பட்டிமன்றம் கலாவதி இதழில் ''குறள்வழி இளங்கோ'' என்ற சிறு கட்டுரையை எழுதிய போதே) எனக்குச் சிலப்பதிகாரத்தில் ஒரு ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது. அந்த ஆர்வத்தை அறிந்து உணர்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைக்கு நான் விடயம் தேடி அலைந்தபோது ''சிலப்பதிகாரம்'' என்று அடியெடுத்துக் கொடுத்த என் சிநேகிதி செல்வி சாந்தநாயகி வெற்றிவேலு அவர்களுக்கு எனது மனம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கவேண்டியது என் கடமை.

இன்னும் இக்கட்டுரைகளின் கையெழுத்துப் பிரதியை அலுக்காமல் சலிக்காமல் வாசித்துத் திருத்தி - அவ்வப்போது மணிமணியான அரும் யோசனைகளையும் அளித்தமைக்காக அன்புச் சகோதரன் செல்வன் சோ. பத்மநாதன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கவேண்டிய கடமை எனக்குண்டு. ஆனாலும்கூட இந்த இரு மணிகளுக்கும் நான் நேரில் நன்றி தெரிவிக்கப்போவதில்லை.

''பூங்கை புகழவோ நாவிற்குதவும் — ?''
ஒருகாலுமில்லையே!

செல்வி விஜயலட்சுமி சிவசம்பு
(திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்)

# சிலம்புக் கட்டுரைகள்

திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்

## 1. சிலம்பில் இசை

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் நடுநாயகமாக விளங்குவது இசைத்தமிழ் அதுவே தமிழ் இசை! முடியுடை மூவேந்தர் களும் முன்னின்று வளர்த்த மூவகைத் தமிழில் இசைத்தமிழே தமிழ்நாட்டின் பெருமைக்குப் பெரிதும் துணைநின்றது.

தமிழிசையின் பெருமை பழமை சான்றது. வெகுகாலத்துக்கு முன் இந்து சமுத்திரத்தில் சந்தாத்தீவுகளிலிருந்து ஆசியாக் கண்டத்தின் தென்கரை வழியே நீண்டு சென்று ஆபிரிக்காக் கண்டத்தின் கீழ்க்கரை வழியே ஒரு பெரிய கண்டம் எட்டியிருந்தது. லெமூரியா என்னும் அக்கண்டத்தின் ஒரு பகுதியே நம் தமிழ் நாடென்பது ஆராய்ச்சியாளர் கண்டறிந்த முடிபு. இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் லெமூரியா மேம்பாடடைந்திருந்தது. தர்ஸ்டன் (Thurstan)போன்ற மேல்நாட்டறிஞர்கள் ஆதிமனிதப் பிறப்பிடமாக லெமூரியா அமைந்திருக்கலாம் என்று கருதுகின்றனர். இன்றும் எஸ். வி. தொமஸ் அவர்களின் கட்டுரைகளின்படி இந்த லெமூரியாக்கண்டம் கடலால் கொள்ளப்பட்டதென்பதும் எஞ்சிய பகுதிகளே இன்றய இந்துசீன தீபகற்பம், தென்னிந்தியா, இலங்கை சந்தாத் தீவுகள், கிழக்கிந்தியத்தீவுகள் ஆகியவை என்பதும் பெறப்படும்.

இயல், இசை, நாடகம், வைத்தியம் என்பவற்றிற்கு வித்திட்ட அகத்தியர் எண்பதினாயிரம் சூத்திரங்களில் விளக்கிய பேரகத்தியம் என்னும் நூலை அவரது மாணாக்கராகிய தொல்காப்பியர் எண்ணாயிரம் சூத்திரங்களிற் சுருக்கித் தமிழகத்திற்குத் தந்தார். இந்நூலே பிற்காலத்தில் இடைச்சங்கத்தாருக்கு ஆதாரமாயிற்று. சங்ககாலத்தில் இசையைத் தம்தொழிலாகக் கொண்டு நடத்திய வகுப்பினர் இருந்தனர் என்றும் இவர்களை அரசர்களும், பிரபுக்களும் ஆதரித்தனர் என்றும் திரு. ஆபிரகாம் பண்டிதர் முதலியோர் கருதுகின்றனர். சங்கீதத்தை எழுத்து மூலமாக விளக்கும் முறையை ஆரியர் தமிழ் நாட்டிலிருந்தே கற்றுக்கொண்டதாக எஸ் வி. வெங்கடேச்வரர் (Vide Indian Culture Through Ages) போன்றோர் கருதுகின்றனர். இன்னும் பேரிசை நூல்களாகிய முறுவல் பெருநாரை, மதிவாணர் நாடகத்தமிழ்நூல், பெருங் குருகு, பரதம், பரதசேனாபதீயம் பஞ்சமரபு: பஞ்சபாரதீயம், இசைமரபு, சொக்கபரதம், செயிற்றியம், தாளவகையோத்து, சயந்தம் கூத்தநூல், அகத்தியம், இசைநுணுக்கம், இந்திரகாளியம், குணநூல் என்பன சங்கம் வீற்றிருந்த தமிழிசைப் புலவர்களாலேயே இயற்றப்பட்டன.

ஹன்டர் (Hunter) போன்ற மேலைநாட்டறிஞர்கள் நமது நாட்டு இசை பாரசீகம், அரேபியா, கிரேக்கம் முதலிய தேசங்கட்கு எடுத்துச்செல்லப்பட்டதாகக் கருதுகின்றனர். (Guide de Arezzo) கைடோடா அரஸெஸோ என்பவர் ஐரோப்பிய சங்கீதத்துக்கு நமது சுர சாகித்திய முறையை (Notation) கி. பி. பதினோராம் நூற்றாண்டில் உபயோகித்தாரென மேலை நாட்டறிஞர்கள் கூறுகின்றனர். Vide Introduction in the study of Musical Seales by Dalialon) இன்னும் ஆயிரம் தந்திகள் பூட்டிய பேரியாழை இராவணன் தன் இருபது கைகளாலும் வாசித்ததாகவும் கூறப்படுகிறது. வயோல் (Viol) என்ற கின்னர வாத்தியம் (வில்லினால் வாசிக்கப்படுவது) இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டதென வும் அதை தமது மத போதனைகளில் புத்தர் பிரான் பக்கவாத்தியமாகப் பயன்படுத்தின ரெனவும் வாண்ட் தமது சங்கீத சரித்திரத்தில் கூறுகிறார்.

இவ்வாறெல்லாம் பழம் பெருமைவாய்ந்த தமிழிசையின் சிறப்பினை ஆங்காங்கு அடியார் களின் தேவாரங்களிலும், சிலப்பதிகாரம், அக

நானூறு, மணிமேகலை, பெருங்கதை ஆகிய நூல்களிலும் காணமுடிகிறது.

''பண்ணெற்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்''

என்று சம்பந்தசுவாமிகள் தம் தேவார அடிகளால், தமிழிசையால் அடையும் விண்ணுலக இன்பத்தை விளக்கினர். சூலைநோய் கண்டு துடிதுடித்த அப்பர் சுவாமிகள்,

''தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''

என அலறினர், இறைவனுல் ஆட்கொள்ளப்பட்டார். அன்றி, பண்டைத்தமிழ் நூலாகிய அகநானூற்றில், கபிலர் என்ற பெரும் புலவரொருவர் இசையோடு கலந்த ஆடரங்கு ஒன்றை,

''ஆடமைக்குயின்ற அவிர்துளை மருங்கிற்
கோடை அவ்வழி குழலிசையாகப்
பாடின் அருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் துதைகுரலாகக்
கணக்கலை யிருக்குங் கடுங்குளற் றூம்பொடு
மலைப்பூஞ்சாரல் வண்டியாழ் ஆக
இன்பர் இமிழிசை கேட்டுக் கவிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழை வளரடுக்கத் தியலியாடு மயில்
நனவுப் புகுவிறலியிற் றோன்று நாடன்''

என்று வருணிக்கின்றார். தொன்மை வாய்ந்த இப்பாடலில் கூறப்படும் வருணனையோ அக்காலத் தமிழ் இசையின் நன்னிலைக்கோர் சிறந்த சான்று.

''கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மர்மயிலாடும்
விரைப் பூம் பந்தர்... ''

என்கிறது மணிமேகலை.

''காழ்வரையில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வளரத் தாங்கியாங்கு''

என்று வீணையிசையில் மதங்கொண்ட யானையை ஆயுதங்களில்லாமலே அடக்கும் தன்மை கலித்தொகையில் கூறப்படுகிறது.

இன்னும்,

''அணியிழை மகளிரும் யானையும் வணங்கும்
மணியொலி வீணையும்''

என்று பெருங்கதையும்,

''மகரயாழ்வல்ல மைந்தன் ஒருவனைக்
கண்டமதத்தப் புகர்முகக் களிற்றின்''

என மந்தபுராணமும் கூறுகின்றன.

இவ்வாறெல்லாம் பண்டைத் தமிழ் நூல்களில் ஆங்காங்கு காணப்படும் ஆயிரக்கணக்கான பாடல்கள் தமிழிசையின் தொன்மையையும் பெருமையையும் எடுத்தியம்புகின்றன. இனி தமிழிலே தோன்றிய முதற்பெருங் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இசை எவ்வாறு முக்கியத்துவம் வகிக்கின்றதென்பதை ஆராய்வோம்.

கண்களுக்கு இனிமைதரும் இயற்கை நலத்தின் எழிலுறு காட்சியினும், காணுந்தோறும் உள்ளத்தைக் கவர்ந்து உவகையூட்டும் ஓவியத்தினும் சிந்தைக்கு இன்பம்.

சிலம்பிசை: பயக்கும் செய்யுள் நயத்திலும் இசையின் நயமே சிறந்ததென யாவரும் இசைந்து கூறுகின்றார்கள். இத்தகைய இசையைப் போற்றி வளர்த்து அத்துறையில் மேம்பாடடைந்த நாடுகள் நாகரிகத்தில் நனிசிறந்த நாடுகளாகக் கருதப்படுகின்றன. அக்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிவந்த இசைக்கருவிகளையும் இன்னிசையில் தமிழ்மக்கள் எய்தியிருந்த புலமையையும் அறிந்துகொள்வதற்குச் சிறந்த குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் கிடைத்திருக்கின்றன.

சேரன்செங்குட்டுவனின் தம்பியாகிய இளங்கோ தந்த சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழ்க் காப்பியம். சங்கம் சார்ந்த நூலான இச்சிலப்பதிகாரத்தில் கானல்வரி, வேட்டுவவரி, ஊசல்வரி முதலிய இசைப்பாடல்கள் நிறைந்து மிளிர்கின்றன.

ஒரு பண்ணின் பாலைகளைக் கொண்டு உருவாக்குவதற்கே இசை என்று பெயர். சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில்,

''பாவோ டணைத லிசையென்றார் பண்ணென்
[றார்

"மேவார் பெருந்தான மெட்டாலும் - பாவா
யெடுத்தண முதலா இருநான்கும் பண்ணில்
படுத்தமையாற் பண்ணென்று பார்."

என்கிருர் இளங்கோ.

சோழநாட்டின் தலைநகரான காவிரிப்பூம் பட்டினத்தில்,

"குழலினும் யாழினும் குரல்முதல் எழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபில் பெரும்பானிருக்கையும்
அமைந்து விளங்கின"

என்று ஆசிரியர் கூறுவதால் ஏழு இசைகளையும் சரிகமபதநி என்னும் ஏழு எழுத்தினையும் மூவகை வாக்கியத்திலும் நால்வகை யாழிலும் பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவேழு திறத்தையும் குற்றமற இசைத்துக் காட்டவல்ல இசை மரபறிந்த குழலோர், பாணர் முதலிய பெரிய இசைக்காரர்கள், புகார் நகரத்திலிருந்தார்களென்று தெரிகின்றது. இன்னும் மாதவியென்னும் மாது இசைவடி வாகவே விளங்குகின்ருள். தன்இசையின் நயத்தால் கோவலனைத் தன்வசப்படுத்தினுள். கடற்கரையில் மடலவிழ்தாழையாற் சூழப்பெற்ற புன்னை மரத்தின் நிழலில் மாதவி தன் காதலனை மகிழ்விக்கும்பொருட்டு இசைக்கருவியாகிய யாழைக் கையிலெடுத்து, காந்தள் மலர்போன்ற மெல்விரல்களால் பாடநினைந்த பண்ணுக்கு இணை நரம்பு, கிளைநரம்பு, பகைநரம்பு, நட்புநரம்பு, முதலிய நரம்புகள் பெயரும் தன்மையை அறிந்து கட்டி, கட்டிய நரம்பை அகவிரலாலும் புறவிரலாலும் கானஞ்செய்து தடவிப்பார்த்து ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரிந்து சுருதிஏற்றி எண்ணிய வண்ணத்தில் சந்தத்தைப் போக்கி வண்ணப் பாக்களை இனிமையாகப் பாடினுள்; இவ்வாறு மாதவி தன் யாழைத் திருத்திய அழகை ஆசிரியர்

"மரகத மணித்தாள் செறிந்த மணிக்காந்தள்-
[மெல்விரல்கள்
பயிர் வண்டின் கிளைபோலப் பன்னரம்பின்-
[மிசைப்படா

என்று அழகுற இயம்பினுர்; இவ்வாறு மாதவி கடற்கரையில் பாடிய கானல் வரிப் பாக்கள் இசைநயம் பெரிதும் வாய்ந்தனவாய் கவிநயம் அறிந்த புலவர் உள்ளத்தை ஒருங்கே கவரும் தன்மைவாய்ந்தனவாம். இப்பாடல்கள் தவிர ஐயைகோட்டத்தில் சிறு தெய்வவழிபாடு செய்து வாழ்த்தி வணங்கும் வரிப்பாக்களும் ஆயர்சேரியில் திருமால் திருவிளையாடல்களை ஆய்ச்சியர்கள் புகழ்ந்து பாடிய அழகிய பாக்களும் இன்னும் குன்றக்குறவர்கள் அறுமுகன் பெருமையை அமைத்துப்பாடிய அழகிய பாக்களும், தமிழரசர் மூவரையும் கற்பரசியாகிய கண்ணகியையும் வாழ்த்தி அன்பர்கள் பாடிய அழகிய வரிப்பாக்களும் கற்போர் உள்ளத்தைக் கவர்வனவாகும்;

இத்தனைக்கும் மேலாக இக்காப்பியத்தில் யாழ், குரல், பண், பாணி, இயக்கு, மிடறு, பற்று, குயிலுயக்கருவிகள், கொட்டு வாத்தியங்கள், கூத்துவகைகள் முதலியவற்றைப்பற்றி மிகவிரிவாகவே இளங்கோவடிகள் எழுதியுள்ளார். குயிலுவக் கருவிகள் கூடி இசைக்கும் கூட்டஇசையை இக்காலத்தில் 'ஆர்க்கெஸ்ட்ரர்' என்பர். நல்லஆடலரங்கங்களில்புல்லாங்குழலின் இசையைத் தழுவி யாழிசை அமைவதுண்டென்பதும், யாழிசைக்கேற்ப மத்தள இசை அமைவதுண்டென்பதும் குடமுழவோடு ஆமந்திரிகை என்னும் இடக்கைக் கருவியோசை கூடிநின்று இசைப்பதுண்டென்பதும் அரங்கேற்று காதையில் வரிசையாகக் கூறப்பட்டன.

"குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே..."

என்பதுஇளங்கோ கூறும் பாடலடிகள். அரண்மனையில், சுகபோகங்களிடையே வாழ்ந்து பின் துறவுபூண்ட இளங்கோவடிகள் இசைக்கலை பற்றி இவ்வளவு அறிந்திருந்ததில் வியப்பொன்றுமில்லை. ஆழமாக நாம் ஆராயின் "சிலப்பதிகாரத்தில் இசை" என்று தனியொரு நூலே செய்துவிடக்கூடிய அளவில் இக்காப்பியத்தில் இசை முக்கியத்துவம் வகிப்பதை உணரமுடியும் பண்டைத்தமிழ் நாட்டின் இசைச் சிறப்பை எடுத்துரைக்கும் ஓரேயொரு நூல் சிலப்பதிகாரமே!

## 2. சிலம்பில் காதல்

"கார்சுத்திரு கண்ணிற் கொன்றே மணி-
[கலந்தாங்கு இருவர்
ஆகத்துள் ஒருவர் கண்டனம்''
—என்கிறது திருக்கோவை

''இருவர் ஆசுத்துள் ஒருயிர்'' காண்பது காதல்

காதல் ''கண்ணுற்றிற் போகார் இமைப்பிற்-
[படுவரார்
நுண்ணிய ரெங்காதலவர்''

''கருமணியிற் பாவாய்நீ போதா யாம் வீழுந்
திருநுதற்கில்லை யிடம்''

என்றெல்லாம் கூறுகிறது குறள் ஆனல் இவையெல்லாம் கூறுவது என்ன? கண்ணை இமைப்பதால் துன்புறுவார் காதல ரென்று எண்ணி ஏங்குகிறது ஒரு பெண்ணின் காதலுள்ளம் கண்ணின் கருமணிப் பாவை இருக்குமிடத்தில் தன் காதலியை அமர்த்த எண்ணிக் கருமணிப் பாவையை ''போய்விடு'' என்று விரட்டுகிறது ஒரு ஆணின் காதலுள்ளம். இவ்வாறெல்லாம் தனக்காக இன்பம் தேடாது தன் அன்புக்குரிய ஒருவருக்காக இன்பம் தேடும் இனிய உள்ளங்களில் தான் ''காதல்'' என்ற புனித நினைவு - இனிய உணர்வு- ஊற்றெடுத்து ஓடுகிறது.

காதல் என்பது அன்பான இருவர் மனமும் லயித்தலால் சுருதி சேர்ந்த சங்கீதம் போன்றது மலரில் மணம் போன்றது, மதியில் குளிர் போன்றது காதல் எப்பொழுதும் கல்யாணத்தில்தான் முடியவேண்டுமென்பதில்லை. தமிழ் நூல்களிலெல்லாம் நாம் காணும் காதலுள்ளங்கள்பற்றி ஈண்டு விரிக்கிற் பெருகும். அன்பான ஒரு நெஞ்சத்துக்காக அரியணையையே துறந்த மன்னர்களின் கதைகளைப் பண்டைத் தமிழ் நூல்களில் காண்பது போன்று இன்றைய சிறந்த சரித்திரக் கதையான ''பாண்டிமாதேவி'' போன்றவற்றிலும் நாம் வாசித்து உள்ளம் உருக முடிகிறது.

''திருமுடியும் அரியணையும் பெருவீரத்
திருவாளும் நினைப்பொழியக்
கருதரிய தென்பாண்டி நிலம் மறந்து
கருணைமிகு தாய்மறந்து
சிறுதெரிவை மதிவதனி சிரிப்பினுக்குச்
செயல்தோற்று நினைவலைந்து
பொருதுமனம் பிடித்திழுக்கப் பிடித்திழுக்கப்
போகின்றான் போகின்றான்''

என்ற உருக்கமான பாடல் ஒன்றே போதுமே! அன்பான மதிவதனியின் சிரிப்பு ஒன்றுக்காக அரியணையையும், வீரத்திருவாளையும் துறந்த அவனுடைய தன்மை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்ததுபோல

''செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந்தனவே''

என்று காதலை விளக்கும் அடிகள் நேர்க்கத்தக்கவை. குறுந்தொகைப் பாடலொன்றின் இறுதியில் அமைந்த இவ்வடிகள் காதலின் பொருளைச் சுருங்கக் கூறி விளங்கவைக்சின்றன. செம்மண் நிலத்தில் பெய்த நீர் மண்ணின் நிறம் கலந்து பிரிக்கமுடியாமல் இருப்பதுபோன்று, பிரிவின்றிக் கலந்த இரு உள்ளங்களின் இணைப்பு உளதென்று வர்ணிக்கப்படுகிறது.

எப்பிறப்பிலும் பிரிக்கமுடியாத தன்மை காதலுள்ளங்கட்கு உண்டு. பெருநட்புடன் உடலுறவும் சேர்ந்து அன்பு வலிமையுறுவதையே பொதுவாகக் காதல் என்பர் பெருநட்புக்கு உதாரணமாகப் பிசிராந்தையாரினதும் கோப்பெருஞ்சோழனதும் நட்புக் கூறப்படலாம். கருத்தூன்றிக் கருத்தொருமித்து வாழ்ந்த வாழ்வு இவர்களுடையது. ஒருவர் மனத்தால் மற்றவர் சிந்தித்து வாழ்ந்த வாழ்வு இவர்களுடையது எவ்வெப்பிறப்பிலும் பிரியாத் தன்மை காதலர் தன்மை, அதுவே முதிர்ந்த தன்மையும்,

''இம்மைப் பிறப்பிற் பிரியலாம் என்றேனாக்
கண்ணிறை நீர் கொண்டனள்''

என்கிறது குறள் ''இப்பிறப்பில் உன்னைப் பிரியேன்'' என அபயம் கூறிய காதலன்முன்னே

கலங்குகிருள் பேதை. அப்படியானல் மறுபிறப் புக்களில் அவன் பிரிவானே என்று ஏங்குகிறது அந்தக் காதல் நெஞ்சம்.

இப்பிறப்பில் காதலனைக் கண்டு சேரமுடியா விட்டாலும் கூட மறுபிறப்பிலாவது அவனைச் சேருவேனெனத் தன்னைத்தானே தேற்றிக் கொள்ளும் நெஞ்சத்தை எமக்குப் படம்பிடித்துக் காட்டுகிருர் அதிவீரராமபாண்டியர்.

''மன்னவனே இப்பிறப்பில் கண்டு மணந்திலனேல்
இன்னும் ஒருபிறப்பில் ஆனுலும் ஏழையேன்
தன்னந்தனியே இருந்து தவம் ஆற்றியுமுன்
பொன்னகலம் உள்ளுநகப் புல்லா தொழிவேனே''

என்பது பாடல். தன் நெஞ்சத்தால் கண நேரமும் காதலனைப் பிரியாமல் கடைசிவரை வாழ்ந்து சிலப்பதிகாரத்தையே கற்பின் வீர காவியமாக மாற்றி அமைத்து '' ஒரு மாமணி யாய் உலகுக்கு ஓங்கிய திருமாமணி '' என்று பாராட்டப்பட்ட கண்ணகியையும், கலையின் பிறப்பிடமாகச் சமுதாயத்தின் கொடுமையால் தனக்கென ஒருவனைத் தெரிந்தெடுத்து அவ னேடு இல்லறம் நடத்தும் வாய்ப்பின்றி அவயத் தோர் அவச்சொல்லையேற்று அழியாத காத லோடு வாழ்ந்து, துறவு பூண்ட மாதவியையும் கணவனுயிர் பிரிந்தது காணப்பொருமல் அரி யணையில் இருந்து வீழ்ந்து ஆருயிர் நீத்த கோப்பெருந்தேவியையும், கலைக்கும் காதலுக் கும் நடுவே நின்று மனமழிந் தலைந்த கோவ லனையும் 'சிலம்பில்' சந்திப்போம்.

### கண்ணகியின் காதல் :

சோழநாட்டின் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு விமரிசையான திருமணம்.

அங்கே மணமக்களை எமக்கு அறிமுகப் படுத்துகிருர் இளங்கோவடிகள்;

''அவளுந்தான் ....
காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள்''
''அவனுந்தான் .. காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன்என்பான்

இந்தத் திருமணத்தில் மகளிர் அழகாக மங்கல வாழ்த்துக் கூறுகிருர்கள்:

''காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீதறுக ..... ''

இவ்வரிகளை நாம் ஆராய முற்படுகையில் 1964ம் கலைக்கதிர்ப் பொங்கல் மலர் இதழில் டாக்டர் துரையரங்களுர் கூறும் விவாதம் நினை வுக்கு வராமல் இல்லை. ''கண்ணகியும், கோவல னும் பூம்புகாரில் தோன்றியவர்களே! குடிமை முதலிய பத்தாலும் இருவரும் ஒப்புடையவர் களே. எனவே இருவர் குடிகட்கும் ஒன்றிற் கொள்ளுதல் தவருகாது. அவ்வாருயின் கண்ண கியும் கோவலனும் தம்முள் ஒருவரை ஒருவர் கண்டு காதல்பூண்ட பின்பே அவர்தம் பெற்ருர் அவர்கட்கு மணவினை நடத்தினர் எனலாம். சங்க காலத்தையடுத்துத் தோன்றிய சிலப்பதி கார காலத்தில் களவொழுக்கமின்றியே கற் பொழுக்கம் நிகழ்ந்ததென்பதைப் பூம்புகார் மக்கள் வாய்மொழியாக இளங்கோவடிகள் நுண்ணிதாக எடுத்துரைக்கின்ருர். ''அருந் ததியின் கற்பு இவளுடைய கற்பை ஒப்பதாகும்' என்று பூம்புகார் மகளிர் பாராட்டுவது அவள் முன்பே தன்னைக் கோவலனுக்கு உரிமையாக்கி விட்ட களவொழுக்கத்தைச் சுட்டவேயாகும். இன்னும் ''காதலன் பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னே'' எனவும், காதலாற் கொண் டேத்தும் கிழமையான் கோவலன் என்பான் மன்ருே! எனவும் பூம்புகார் மகளிர் கூறும் கூற்றுகளும் இவர்கள் களவொழுக்கத்தைச் சுட்டும் குறிப்புடையன'' என்பது இவரது விவாதம்.

ஆனல் கவிப்புலமை மிகுந்த ஒருவரின் வரி களுக்கு வலிந்து கற்பனை செய்து நாம் பொருள் கொள்வது தகுதியன்று. திருமணம் செய்த தம் பதிகள் காதலோடு வாழவேண்டியவர்கள் என்ற பொது நோக்கோடு அவர்கள் அவ்வாறு வாழ்த் தியதாக நாம் கொள்வதே சிறப்பாகும். இன்னும், அவ்வாறெரு முதிர் காதல் அவர் களிடம் இருந்திருப்பின் அதை வெளியாகப் பாட இளங்கோவிடம் திறமையில்லாமலில்லை. காப்பிய ஆசிரியர் கூருத கருத்துக்களை நாம் வலிந்து புகுத்துவது காப்பியத்துக்கே இழிவு

தரும்: ''அருந்ததியின் கற்பு'' என்று கண்ணகியின் கற்பை மக்கள் வாழ்த்துதற்கு அவளிடம் முன்பே காதல் குடிகொண்டிருக்க வேண்டுமெனல் சாலாது, குலத்து மாதர்க்குக் கற்பு இயல்பாகவே அமையுமென்ற நோக்கோடு அக் குலமகளை அவர்கள் வாழ்த்தியதாகக் கொள்ளலே தகுதிபோலும். எனவே திரு. துரையரங்கனார் அவர்களது கருத்து வேறுபாடான ஒன்றாகவும் தோன்றுகிறது.

இனி, இவர்களது இல்வாழ்வில் காதலை ஆராய்வோம். திருமணத்தின் பின்புதான் இவர்களை நாம் இளங்கோமூலம் நன்கு அறிகிறோம். இவர்கள் இருவரும் கூடிவாழ்ந்த காலம் மிக அற்பமாயினும் அவர்கள் அச்சிறுகாலத்தில் எப்படி வாழ்ந்தார்கள்?

''தீராக் காதலிற் திருமுகம் நோக்கி'' அவன் கூறும் சொற்கள் சாதாரணமாக எல்லாக் கணவனும் மனைவிக்கும் கூறும் சொற்களாக நமக்குத் தெரியவில்லை. அழியாக் காதல் பிறைபாக் கலையொடு சேர்ந்து அவன் குரலில் எதிரொலிப்பதை நாம் காண - உணர - முடிகிறது மயிலையும். அன்னத்தையும், குழலிசையையும், கிளிமொழியையும் பெருமை குன்றச் செய்து விட்டாளென்று கூறும் அவனது மொழிகளிலே காதல் பெருக்கெடுக்கோடுகிறது, ஒத்த உணர்வோடு, ஒருவர் மகிழ்விலே மற்றவர் இன்புற்று வாழ்ந்த இந்த வாழ்விலே மட்டுமன்றி பின்பு நீங்காத துன்பமுற்ற காலத்துங்கூட இவளன்பு மாறாமல் ஒளிர்வதையும் அவனன்பு அவளுக்காக ''நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடு''வதையும் இளங்கோ இனிமையாகவும் சுவைபடவும் எடுத்துரைக்கின்றார்:

''முதிர்கடல் ஞாலம் முழுவதும்வி ளக்கும் கதிர் ஒருங்கிருந்த காட்சிபோல'' வாழ்ந்த வாழ்வு, ஒருசில நாட்களிலேயே கலைந்த கனவாக, கருவற்ற கற்பனையாக, கருத்தற்ற கதையாக, உருக்குலைந்த ஓவியமாக மாறிவிட்டது. மாதவி மனைபுகுந்து ''விடுதல் அறியாவிருப்பினன்'' ஆகி உணர்விழந்த காதலுக்காக ஏங்குகிறது பெண் உள்ளம்.

அவன் கண்கள் காணமுடியாத அலங்காரங்கள் அவசியமற்றவையாக அவளுக்குத் தோன்றின. கண்ட கனவைத் தன் தோழியான தேவந்தியிடம் பதற்றத்தோடு எடுத்துரைக்கின்றாள் கண்ணகி.

''கடுக்குமென் நெஞ்சங் கனவினா லென்கை
பிடித்தனன் போயோர் பெருமதியுட்பட்டோம்'
என்று கூறிய அவளை நோக்கி,

'' .. பொற்றொடீஇ
கைத்தாயுமில்லை கணவற்கொரு நோன்பு
பொய்த்தாய் ...''

என்றுகூறித் துறைமூழ்கித்தெய்வம் தொழுமாறு கூறுகின்றாள் தோழி. அந்தத் தோழியின் ஆலோசனையை நிராகரிக்கும் கண்ணகியிடம் குலமாதர்க்குரிய கற்பை மட்டுமன்றி நீங்காத காதல் உடைய நெஞ்சத்தின் நம்பிக்கையையும் நாம் காணமுடிகிறது. அவன் வருவான் என்பதில் அவளுக்கு அத்தனை நம்பிக்கை.

வீடுவந்த காதலனிடம் வீண் கேள்விகேட்காமல் ''நலங்கேள் முறுவல் நகைமுகங் காட்டிச் சிலம்புள கொண்டுமென்'' ஆதரவோடு கூறும் அந்த அன்பு நெஞ்சில் குரோதம் இல்லை. மாதவியுடன் அவன் வாழ்ந்த நாட்களைப்பற்றிய விசனமோ வெறுப்போ இல்லை. கட்டிவைத்த காதல் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. புறப்பட்டுக் காட்டுவழியே நடக்கும் இக்காதலரையும், ஒருவர்க்காக மற்றவர் கலுழும் அவர் அன்பு நிலையையும், தானே நடுநின்று வர்ணிக்கிறார் இளங்கோவடிகள்.

''காதலி தன்னொடு கானகம் போந்தற்கு
ஊதுலைக் குருகின் உயிர்த்தனன்''

கோவலன். ஆனால்,

''கடுங்கதிர் வெம்மையின் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி''

ஆகிவிட்டாள் கண்ணகி. காதல் தனக்காக இன்பம் தேடுவதில்லை; தனக்காகக் கவலைப்படுவதுமில்லை. ஆனால் தன் அன்புக்குரியவரின் துன்பத்துக்காகப் பதறிப் புலம்பவைக்கின்றது.

மதுரைக்கு வந்த காதலர்களை மாதரியின் வீட்டில் சந்திக்கும் நமக்கு, அழகான அருமை

யான - குறுந்தொகைப் பாடலொன்று நினைவுக்கு வருகிறது.

''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதில் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே!'

என்பது பாடல்.

அன்பான இல்லறம் நடத்தும் ஒரு பெண்ணைக் கண்டு இன்னொரு பெண் மகிழ்ந்து, உள நெகிழ்ந்து பாராட்டுகிறாள்; தன் மகிழ்வை இன்னொரு பெண்ணுக்கே எடுத்துரைக்கின்றாள். செல்வக் குடும்பத்திலே பிறந்து பெருமாளிகையிலே வாழ்ந்த கண்ணகியும் கூட மாதரியின் வீட்டிலே கன்கள் சிவப்ப - மென்விரல் துடிப்ப சமையல் செய்து அன்னம் பரிமாறுகிறாள். இது கண்டு மாதரியும் அவள் மகளும் மகிழ்ந்து அவ் விருவரையும் கண்ணனும் அவன் காதலியுமெனப் புகழ்கிறார்கள். இந்தக் காதலர்களை நாம் சந்திக்கும்பொது ஏனோ நம் உள்ளம் பதறி ஏங்குகிறது. இந்தக் காட்சி அழியப்போகிறதே என்று எம்மை யறியாமலே ஒரு ஏக்கம் மனதில் தோன்றுகிறது.

''ஆயர்பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பி; ஈங்குப்
பல்வளைத் தோழியும் பண்டு நம்குலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்''

என்பது பாடல்.

நெஞ்சையள்ளும் இந்த நிகழ்ச்சிக்குப்பின் தன் அருமைக் காதலியிடம் விடைபெற்றுச் சிலம்பு கொண்டு செல்கிறான் கோவலன்.

சிலம்பை விற்று வரச்சென்ற தன் காதலன் நெடுநேரமாகத் திரும்பவில்லை. வையையாற்றில் நீராடச் சென்ற மாதரி என்ற முதுமகள் கோவலன் வெட்டுண்டு இறந்தான் என்று ஊரார் சொல்லக் கேட்டாள். தன் வீட்டுக்கு விரைந்தோடி வந்தாள். கண்ணகியைக் கண்டாள். ஏதும் சொல்ல நாவெழாது நின்றாள். இதனைக் குறிப்பால் உணர்ந்த கண்ணகி தன் தோழியைப் பார்த்து, சோகம் பொங்கித் ததும்பும்சொற்களால் இரந்து புலம்புகிறாள். அவளோடு சேர்ந்து நாமும் அழுது தீர்க்கிறோம்.

''காதலன் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சன்றே
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்னது எவன் வாழியோதோழி''

''தோழி, என் காதலன் இன்னும் வரக் காணேன். என்நெஞ்சம் கலங்குகின்றது. ஊதும் உலைபோல உள்ளத்தில் அழல் பொங்கி எழுகின்றது. பாவியேனாகிய என்னை நோக்கி இவ் வாய்ச்சியர்கள் என்ன சொல்லுகின்றார்கள்? தோழி நீயேனும் என்னிடம் சொல்லமாட்டாயோ'' என்று அலறுகிறாள்.

''நண்பகற்போதே நடுக்குநோய் கைமிகும்
அன்பனைக் காணாது அலறும் என் நெஞ்சன்றே
அன்பனைக் காணாது அலறும்என் நெஞ்சாயின்
மன்பதை சொன்ன தெவன் வாழியோதோழி''

''தோழி, என் காதலன் போய் நெடுநேரமாயிற்றே. இன்னும் அவர் திரும்பி வரக் காணேனே! என் அன்பனைக்காணாது என் நெஞ்சம் அலறுகின்றதே! இந்தஆய்ச்சியர்கள் என்ன சொல்லுகின்றார்கள்? தோழி, நீயாவது எனக்கு இந்த உண்மையைச் சொல்லமாட்டாயா?'' என்று ஏங்குகிறாள்.

''தஞ்சமோ தோழி தலைவன் வரக் காணேன்
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்குமென் நெஞ்சாயின்
நெஞ்சிலார் சொன்ன தெவன் வாழியோ-தோழி''

''தோழி, என்னை விட்டுப்போன தலைவன் இன்னமும் வரக்காணவில்லை. எனக்கு இந்நிலையில் நீதான் தஞ்சம். ஏழையாகிய என்னை நோக்கி இந்த அருளற்ற ஆய்ச்சியர்கள் என்ன சொல்கிறார்கள்? நீயாவது எனக்குச் சொல்லலாகாதா?'' என்று கதறித் துடிக்கின்றாள்.

இந்த இடத்திலே, காதலனைப் பிரிந்து கலுழும் கண்ணகியின் நெஞ்சத்தை நமக்கு புரிய வைக்கிறார் இளங்கோவடிகள். காதலன் இறந்தான் என்ற செய்திகேட்டு ஓடோடியும் சென்று அவனுடல் கண்டு புலம்பும் அவளைத் தேற்ற

முடியாமல் நாமும் திகைக்கும் உணர்வு நமக்கு உண்டாகின்றது;

'என்றுறு துயர்கண்டும் இடருறும் இவள் என்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்-
[பதோ'

என்று புலம்புகிருள்.

பொன்போன்ற திருமேனி பொடியாகிக் கிடக்கலாமோ? தார் மலிந்த மணி மார்பு தரை மூழ்கிக் கிடக்கலாமோ என்று புலம்பும் அவளிடம் தீராத காதலையும், கழிந்து முடிந்த காதல் வாழ்வின் பசுமையான நினைவின் நிழலையும் நாம் காண முடிகின்றது.

கணவன் கொலைப் பட்டதறிந்து, சீற்றம் கொண்டெழுந்து, பாண்டியனையும் அழித்து மதுரையையும் எரித்த அவளிடம் காதலைவிட வீரக் கற்பினைத்தான் நாம் அதிகம் காணமுடிகின்றது. வீரம் கொண்டு வீறு கொண்டு அரண்மனை நோக்கியோடும் இவளிடம், மகன் இறந்தான் எனக் கேள்வியுற்று, அவன் மார்பிலே காயம்பட்டு இறந்தானுவென அறியும் ஆவேசத்தோடு களம் நோக்கி ஓடும் வீரத்தாயின் தன்மையைத்தான் நாம் காணமுடிகிறது.

விலைமகள் ஒருத்தியை நாடிச் சென்முன் எனக் கேள்வியுற்ற போதும் கணவனைக் கடிந்தாளில்லை. அவன் இறந்தபோது அவளும் கூட இறந்தாள் இல்லை. என்பன போன்ற பழிகளை உலகம் அவள்மேல் சுமத்தக்கூடும்.

''அவர் உள்ளகம் வருந்தப்போற்ரு ஒழுக்கம் புரிந்தீர்'' என்று நயமாக எடுத்துரைக்கும் அவளிடம் முதலாவது குறை நீங்குகின்றது: ஆனுலும் காதல் கொண்ட நெஞ்சம் இன்னெருத்திக்கு அந்த உயர்ந்த இடத்தை அளிக்கத் துணிவதில்லை. அது மனித இயல்புக்கு ஏற்றதுமன்று. இரண்டாவது குறைபற்றிய ஆராய்ச்சிக்கே இடமில்லை. கண்ணகி கோவலனேடு - ஒரு கலையுள்ளம் கொண்ட சாதாரண மனிதனேடு -வாழப் பிறந்தவளாக இல்லை. அவள் உயர்ந்து தெய்வமாகிருள். கோவலனை வழிநடத்திச் சென்று மதுரையை அளிக்கவென்றே படைக்கப்பட்டவள்போல் தெரிகிருள். முன்னையநாள் நடந்த நிகழ்ச்சிகளின் பழிநீங்க மதுரையை எரிக்க என்றே பிறந்தவள் கோவலனேடு கூட எப்படி இறந்துவிடமுடியும்? எனவே இரண்டாவது குறையும் இல்லாதொழிகிறது. கண்ணகி ஒரு குலமாது; கற்பின் தெய்வம் என்பது மறுக்க முடியாத ஒன்று.

**மாதவியின் காதல்:** நாடகக் கணிகையான சித்திராபதியின் மகளாக நாம் மாதவியைச் சந்திக்கின்றேம். ஆனுலும் ஆரம்பத்திலேயே அவளது கலை நம்மை ஆட்கொள்கிறது. இருந்தும் என்ன செய்வது? கணிகையர்யிற்றே! ஆதலால் கோவலனது வாழ்வில் அவள் குறுக்கிட்டபோது - மாலையைக் கோவலன் வாங்கியபோது எமது மனம் அவளைச் சபிக்கலாம். ஆயின் இளங்கோ அவளை நமக்கு மென்மேலும் அறிமுகப்படுத்துகையில் மனதில் ஏற்பட்ட வெறுப்பு இருந்த இடம் தெரியாமலே மறைந்துவிடுகிறது. கதாநாயகனை கோவலனின் பெருமை மங்கிவிடாது பாதுகாக்கும் அளவு அவள் பாத்திரம் உயர்ந்து விளங்குகின்றது. அவள்மேல் எமக்கு அனுதாபம் மேலிடுகிறது. தமிழ்ப் பெண்குலம் சற்றே பெருமையும் அடைகிறது.

சீர்கெட்ட இந்தச் சமுதாயம் - கணிகையர் என்றெரு குலத்தை ஏற்படுத்திய சமுதாயம்- தலைகவிழ்கிறது. சேற்றிலே தாமரை மலர்வதும் சிப்பியிலே முத்துப் பிறப்பதும் புதுமையேயல்ல என்ற ஞானேதய வாக்கு நம் ஞாபகத்துக்கு வருகிறது. மாதவியை நாம் மென்மேலும் அறியும்தோறும் அவள் தெய்வமான கண்ணகியைவிட உயர்ந்தவளாக - மனித உள்ளம் படைத்த நம்போன்ற ஒரு சாதாரணப் பெண்ணுக நமது சமுதாயத்தின் கொடுமையால் மனம் விரும்பிய காதலனை அடைந்து இல்வாழ்க்கை நடத்தமுடியாதவளாக நமது முழு அனுதாபத்துக்கும் பாத்திரமாக நம்முன் உயர்ந்து நிற்கின்ருள். ஒத்த குணம், ஒத்த விருப்பம், ஒத்த பண்பு உடைய இருவரிடம் அன்பு தோன்றுவது இயற்கை. கலையைப் போற்றும் இருவரிடம் காதல் அரும்பியது புதுமையல்ல! கண்டு பின்உணர்ந்து பின் காதல் கொள்கிருர்கள். ஆனுல் அந்தோ! அவன் மணமானவன். அவளோ கணிகை! இங்கே காமத்துக்கு மட்டுமே இடம்உண்டு. காதலுக்கல்ல! இருந்தும் நம்கண்முன்னே இருவரையுமே உயர்த்திவைப்பது இளங்கோவின் திறமை.

கண்ணகியை விட கூடியகாலம் கோவல னேடு வாழ்ந்தவள் மாதவி என்பது அவள் கோவலன்பால் காட்டும் உரிமையில் இருந்தே அறியவருகிறது. துணிந்து அவனுக்கு கடிதம் வரையும் அவளிடம் வற்ருத காதலை நாம் காண்கிறேம். கண்ணகிக்கு இல்லாத துணிவு, கண்ணகிக்கு இல்லாத ஆர்வம், கண்ணகிக்கு இல்லாத ஆற்ருமை, இத்தனையும் இவளிடம் இருந்தது காதலாலன்றோ ...? இத்தனைக்கும் மேலாக இவளிடம் இருந்த கலையுணர்வு காத லுக்கு உரமூட்டியது.

''நிலவுப் பயன் கொள்ளும் நெடுநிலா- [முற்றத்துக்
கலவியும் புலவியும் காதலற்கு அளித்து ஆங்கு
ஆர்வ நெஞ்சமொடு கோவலற்கு எதிரிக்-
கோலம் கொண்ட மாதவி''

என்ற பாடலால் அவர்கள் வாழ்ந்த அன்பு வாழ்வை விளக்குகிருர் இளங்கோ! அன்புள்ள வர்களை அத்துடன் அரிய பண்பும் சேர்ந்துள் ளவர்களைப் பிரிவது என்ருல் முடிகிற காரியமா? மாதவியின் மிகுந்த காதலால் உவகைகொண்ட கோவலன்,

''விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்தென்''

என்று ஆற்ருமையுடன் பின்பு கூறிக்கொள் கிருன். கடற்கரை நிகழ்ச்சிக்குப்பின் பிரிந்து சென்றுவிட்ட கோவலனை விட்டு,

''கையற்ற நெஞ்சினளாய் வையத்தினுள்புக்குக்
காதலனுடன் அன்றியே மாதவிதன்-
மனைபுக்காள்''

என்று இளங்கோ கூறுகிருர். பகலெல்லாம் பலப்பல பேசி மகிழ்ந்திருந்த இன்னுயிர்க் காத லன்பிரிந்து சென்றுவிட்டான். கொடும் பிரிவுத் துன்பம்ஆற்ருதுகலங்கி ஏங்கிய மாதவியின்முதற் கடிதத்தை நாம் வாசிக்கும்போது அந்த ஒவ் வொரு எழுத்திலும் அந்தக் கடிதத்தை எழுத அவள் கையாண்ட ஒவ்வொரு பொருளிலும் காதல் மணம் கமழ்வதை உணர்கிறேம்.

நறுமண மலர்களும், இலைகளும், வேர்களும் சேர்த்துத் தொடுத்த மாலை! அவற்றிற்கு இடையே அமைந்த தாழைமடலில் பித்திகை யின் அரும்பைச் செம்பஞ்சுக் குழம்பிலே தோய்த்து எழுதுகிருள். இதிலே காதலன்போடு அவள்தன் கலைத்திறமையும் புலப்படுகிறது.

''மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்விய னல்லன்
புணர்ந்த மாக்கள் தம்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூது அன்று இஃது அறிந்தீமின்''

என்ற அக்கடித வாசகங்களிலே காதலனைப் பிரிந்த ஆற்ருமை தெரியக் காண்கிறேம். காத லர்களது பிரிவின்போது கடந்தகாலத்து நிகழ்ந் தவை மனக்கண்ணிலே தோன்றி இன்பம், துன் பம், ஏக்கம் இவற்றையளித்தலுண்டென நாம் பண்டைத் தமிழ் நூல்களிலே அறிந்திருக்கின் றேம். இந்தக் கடிதத்திலும் கடந்த காலத் தின் – கழிந்து முடிந்த நிகழ்ச்சிகளின் - ஏக்கம் தெரிகிறது.

இரண்டாவது கடிதம் எழுதி கோசிகனிடம் அனுப்பும்போது பணிவன்போடும் மதிப்போடும் எழுதிவிட்டாலும் கூட அவனை - அவன் காதலை அவள் மறக்கவில்லை. அவளுக்கு அவன் காத லனேதான்;

'' கண்மணியனையாற்குக் காட்டுக''

என்ற அவளது சொற்களிலே கண்ணீர் தேங்கி நிற்கின்றது. அழியாத காதல் தெரி கிறது. விலைமகளாகச் சமுதாயத்தினுல் மதிக்கப் பட்டாலும்கூட குலமகளாக ஒரு தலைமகளாக வாழும்இவளிடம்கோப்பெருந்தேவியிடம்கண்ட காதலை விட தன் குலநெறியையும் கற்பையும் காத்துக் கற்பின் தெய்வமாகிவிட்ட கண்ணகியி டம்கண்ட காதலைவிட கூடியமிகச்சிறந்த ஒருவித அன்பை - பண்பை – நாம் கண்டு உள்ளமுருக முடிகிறது. தத்தம் குலத்துக்கு விதித்த தர்மப் படி வாழ்ந்துசென்ற கோப்பெருந்தேவியின் காதலையும், கண்ணகியின் காதலையும் விட தன் குலநெறிமுறையையும் வெறுத்து ஒருவனுக் கென்றே வாழ்ந்து அவனில்லாதபோது துறவு பூண்ட இவள் ஒரு ஒப்புயர்விலாத மாணிக்கமே தான்! தானும் கணிகையாக வாழாமல் தன் மகளையும்,

''மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்''

என்று கூறித் தன்னையே உயர்த்திக் கொண்ட அவளிடம் ஒரேஒரு குற்றம் காண முடிகிறது. அதுதான் அவனது தகுதியை உணர்ந்து அவனது செல்வ நிலைக்கேற்ப வாழ அவனை அறிவுறுத்தாத ஒருகுறை. ஆனால் அவளுக்குகோவலனது காதல் ஒன்றுமட்டுமே தெரிந்தது. செல்வத்தை அவன் தொலைத்த வழிபற்றி அவளுக்குக் கவலையில்லை.

இன்னும் அவன் செலவு செய்த பொருள் முழுவதும் அவளுக்காகச் செலவு செய்யப்பட்டதுமல்ல என்பதை இளங்கோவடிகள் கண்டு நமக்குக் கூறுகின்றார்.

''செம்பொன்மாரி செங்கையின் பொழிந்த''தும், இன்னும் பல தானம் செய்ததும் எல்லாம் அவனை மாதவியின் பொருட்டே செல்வத்தைத் தொலைத்தான் என்று கூறமுடியாமல் செய்கின்றது. அவனிடம் எல்லாக் கணிகையரையும்போல் பொருள் பறிக்கும் நோக்கம் அவளிடம் இருந்திருப்பின் அவன் ஊர்விட்டுச் சென்றபின்பு இன்னொருவனைநாடிச் செல்வம் பறித்திருக்கலாம். அவள் அவனது வறுமைக்குக் காரணமாக இல்லையென்பது உண்மையேயெனினும் அவனைத் தடுக்காத குறை – அளவுக்கு மீறிய ஆடம்பரத்துடன் வாழ்ந்த குறை-அவளிடம்உண்டு. அவனுக்காகவே அவள் தன்னை அலங்கரித்தாள் என்பது உண்மையாயினும் அவனுக்கு அறிவுரை கூறாத குற்றம் ஒன்று இருக்கவே இருக்கின்றது. கணிகை வயிற்றில் பிறந்து துறவியாகி அரசனும், நாடும் வியக்க அறவாழ்வு வாழ்ந்த இவள் காதல் தெய்வம்! கலையின் அம்சம்.

சிலப்பதிகாரத்தின் கதாநாயகனான நம்முன் நிற்கும் கோவலனைக் கண்ணகியின் கணவனாக நாம் மணப்பந்தரில் சந்திக்கின்றோம்.

**கோவலன் காதல் :** ''அவனுந்தான் ...... காதலால் கொண்டேத்தும் கிழமையான் கோவலன்.....'' என்று அழகாக எமக்கு அவனை அறிமுகம் செய்துவைக்கிறார் இளங்கோ!

மனைவியான கண்ணகியோடு மகிழ்வாக இவன் வாழ்ந்த காதல் வாழ்வை முன்பே கண்டோம். கலைக்கு அடிமையான இவனது நெஞ்சம் கண்ணகியிடமே கலைத்திறமையும் இருந்திருப்பின் மாதவியை நாடாமலே இருந்திருக்க இடமுண்டு.

கலையோடு ஒன்றிய நெஞ்சம் தன் அன்புக்குரிய எவரிடமும் கலையுள்ளத்தை, கலையுணர்வை எதிர்பார்க்கின்றது. அதனால் கலைமேல் அவனுக்கு இருந்த ஆராஆசை அவனை மாதவியிடம் இட்டுச்சென்றது என்றால் பொருந்தும். கண்ணகியிடம் இவன் கொண்ட காதல் குறைவானது - புனிதமற்றது - என்று கூறுவதற்கில்லை. திட்பம் இழந்த நெஞ்சும், மாறிமாறி அலையும் செயலும் இவனது தூய்மையற்ற வாழ்வுக்கு ஏணியாயமைந்தன. மாதவியிடம் சென்று வாழ்ந்தவன் என்பதால் இவன் கண்ணகிக்குக் காதலனாக வாழவில்லை என்று சொல்லிவிட முடியாது.

இவர்களது ஆரம்பகால வாழ்வு சுருதியுடன் இணைந்த சங்கீதம் போல இனிமை சேர்ந்தகாதல் வாழ்வாகவே அமைந்து கிடப்பதை முன்பே ''கண்ணகியின் காதல்'' என்ற தலைப்பின் கீழ் ஆராய்ந்தோம்.

மாதவியுடன் அவன் வாழ்ந்த வாழ்விலும் கூடக் காதலன்பு தெரியாமல் இல்லை. முதலில் அவளைப் பிரிந்து சென்றபோது அவன் கண்ணகியின் துன்பம் கண்டு ஏங்கிய நிலையில் தன்னை மறந்து மாதவியைத் தூற்றிய போதிலும் மாதவியின் இரண்டாவது கடிதம் கண்டு தன்வயமிழந்து மாதவியைப் போற்றும் அவனிடம் காதல் நெஞ்சின் உருக்கத்தை நாம் காணமுடிகிறது. கண்முன்னே நிற்பவளது அன்பே அவனுக்குப் பெரிதாகப் பட்டது. மாதவியிடம் சென்று ''விடுதல் அறியா விருப்பினன்'' ஆகிப் பின்பு கண்ணகியின் வாடிய மேனிகண்டு மாதவியை மறந்து பின்பு இரண்டாம் கடிதம் அனுப்பிய நிலையில் மாதவிவியை நினைந்து இரங்கினாலும்கூட கண்முன்னே நின்ற கண்ணகியைப் பெரிதாக மதித்து அவளிடம் பொதுவாகவே துன்பியல் நாடகத்தில் வரும் கதாநாயகனது தன்மையான நிலையற்ற மனதை நாம் காண்கிறோம்.

இவனது இறுதிக்கால வாழ்வை ஆராயும் போது அங்கே காதலுக்கு அதிகம் இடம் இருக்கவில்லை என்பது பொருந்தும். மாதவியிடம் இருந்து பிரிந்துவந்த கோவலன் காதல் மிகுதியால் கண்ணகியை நாடி வந்தானில்லை. அவளது வாடிய மேனி கண்ட அவன் ஒரு தெய்வ சந்நிதானத்தில் நிற்கும் பக்தனாக நிற்பதைத்தான் நாம் காணமுடிகிறது. இன்னும் கண்ணகியின் அன்றைய நிலையை ஆராய்ந்தாலும் கூட இந்த முடிவுதான் நமக்குத் தெரியவரும். கணவன் பிரிவிலும் கதறாமல் - பதறாமல் – ஆவேசம் உற்று அரண்மனை நோக்கியோடும் அவளிடம் காதலைவிடப் பழிவாங்கும் எண்ணமே நிறைந்துள்ளது.

மாதவியை ''சலம்புணர் கொள்கைச்சலதி'' என்று வசைபாடும் அவனது குரலிலே காதல் ஒலிக்கவில்லை. பக்தி கலந்த பயம்தான் எதிரொலிக்கின்றது. கோவலனிடத்திலே பிற்கால வாழ்வில் நாம் காதல் காணமுடியவில்லை. கண்ணகித் தெய்வத்தின் முன் நின்ற பக்தனாகத்தான் அவனை நாம் காணமுடிகிறது.

ஆராய்ந்து பார்த்தால் கற்பின் தெய்வமாக வாழ்ந்து தெய்வமேயாகிவிட்ட ஒரு பெண்ணும் கணிகையர் குலத்திலே பிறந்து கற்புடன் வாழ்ந்து துறவியாகிவிட்ட ஒரு பெண்ணுமாக இரு பெண்மணிகளோடு வாழ்ந்த காரணத்தால் தெய்வங்களான அவர்களின் பெண்மை இவனை நம்கண்முன் உயர்த்திவைக்கிறது என்றே கொள்ளமுடிகிறது. மாதவியோடு இவன் வாழ்ந்த நாட்களைப்பற்றிக் கண்ணகி இவனுடன் வாதிட்டிருந்தால் அல்லது தன்னை இவ்வாறு இழிவுசெய்த குற்றத்துக்காக மாதவி அவனைத் திட்டியிருந்தால் நாமும் கூட அப்பெண்ணின் பக்கமே சேர்ந்திருப்போம் ஏனெனில் நாமெல்லாம் மனித இதயம் படைத்தவர்களேதான். ஆகவே நல்லவர்களாக வாழ்ந்த இவர்கள் அவனை உயர்த்திவிட்டார்கள் என்பது அழியாத உண்மை. கோவலன் காதலனேதான்! சிலநாள் கண்ணகியின் பலநாள் கலையின் (அதனால் மாதவியினதும்) காதலன்.

**கோப்பெருந்தேவி காதல் :** கோப்பெருந்தேவியையோ அன்றிப் பாண்டிய மன்னனையோ நாம் முதலில் அறிய வாய்ப்புக் கிடைக்கவில்லை. அவர்களை இக்காப்பியத்தின் உச்சக்கட்டத்திலே வழக்குரை காதையிலே சந்திக்கும்போது அவர்களது முன்னைநாள் வாழ்வுபற்றி எதுவும் கூறமுடியவில்லை.

தன் காதலன் நீதிபிழைத்து உயிர்துறந்த பொழுது அரசமாதேவி அரியாசனத்தின் அருகே நின்றாள் அப்பொழுது அவளது தோற்றம் உள்ளத்தை உருக்கும் தன்மைவாய்ந்ததாய் இருக்கிறது தன் கணவன் மயங்கி விழுந்துகிடக்கின்றான். கடுஞ்சினம் கொண்ட கண்ணகி முன்னே நிற்கின்றாள் காதலனைக் கண்டு நெஞ்சம் குழைந்தாள் கற்புடைய தெய்வத்தைக் கண்டு நடுங்கினாள். காதலனை இழந்த கற்பரசிக்கு எவ்வகையான ஆறுதல் சொல்லமுடியும் என்றுஎண்ணி ஒன்றும் சொல்லாதவளாய் அரசி கண்ணகியின் காலில் விழுந்து அவள் அடியிணை தொழுதாள் அப்பால் எழுந்து மயங்கி விழுந்துகிடந்த தன் கணவன் மலரடியை தன் மென்கரங்களால் வருடினாள்.

''தவத்தாள் நெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கம் கொள்ளாள் கடும் துயர் பொருள்
மன்னன் செல்வழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினன் போல்
கோப்பெரும் பெண்டும் ஒருங்கு உடன்-
[மாய்ந்தனள்''

காதலன் இறந்த கடும் துயர் பொறாது தன் கணவன் சென்ற வழி தானும் செல்லத்துணிந்து தன்னுயிரைக் கொண்டு அவன் உயிரைத்தேடுபவள்போல அரசமாதேவியும் மயங்கி விழுந்து மாண்டனள். இத்தகைய உயிரை உருக்கும் நிகழ்ச்சி நிகழ்ந்தது காதலால் அன்றோ.

''உயிருடன் வந்த ஒருமகள் தன்னிலும்
செயிருடன் வந்த இச் சேயிழை தன்னிலும்
நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்''

என வினவிய செங்குட்டுவனுக்கு அவன் பத்தினி கூறிய விடையே கோப்பெருந்தேவி தன் கணவனிடம் கொண்டிருந்த தீராக் காதலுக்கும் அவள் தன் அரிய கற்புக்கும் குறையாத சான்றாகும்.

''காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு உருக வானகத்து''

என்ற கூற்று ஒன்றே தேவியின் காதலை உலகுக்கு உணர்த்துவதாகும்.

# 3. சிலம்பில் தத்துவம்

**வா**ழ்வின் இலட்சியங்கள் அன்பு எனும் நீரோடையில் பண்பெனும் இலக்கிய வரம்பினுள் கட்டுண்டு செல்லவேண்டும் என அறிவுறுத்தும் இந்நூலில் தத்துவக் கருத்துகட்கும் பஞ்சமில்லை. எனினும் எந்த மூன்று முக்கிய தத்துவங்களை விளக்கவென இக்காப்பியம் எழுந்ததெனக் கூறப்படுகின்றதோ அந்த மூன்று தத்துவங்களையும் இக்கட்டுரையில் ஆராய்வோம்.

**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்:** சிலப்பதிகார ஆசிரியர் தம்முன்னுரையில் ''உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்'' உண்மை என்பதை உலகில் நிலைநாட்டும் பொருட்டு நூல் எழுந்ததெனக் கூறியுள்ளார். இந்நூலை நாம் கற்கும்தோறும் கண்ணகியின் கற்பே நம் கண்முன் நிற்கின்றது. கற்பின் அளப்பெரும் பெருமையை உலகமெலாம் அறிந்து போற்றுமாறு இக்காப்பியம் அமைந்துளது. முக்கியமாக வஞ்சிக்காண்டம் முழுவதுமே இக்கூற்றினிலக்கணமாகவும் கண்ணகியே அவ்விலக்கணத்தைப் புரியவும் நயக்கவும் இயைந்த இலக்கியமாகவும் அமைந்த தன்மை பாராட்டவல்லது.

கண்ணகியை எமக்கு ஆரம்பத்தில்அறிமுகம் செய்துவைக்கும் பொழுதே

'' .. சாலி ஒரு மீன்தகையாள்;''

'' தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் -''

''அங்கண் உலகில் அருந்ததி அன்னாள்'' என்றெல்லாம் கூறுகிறார்.

மணமகளை - குலமகளை – திருமகளை - கற்பின் செல்வியை அவள்தன் இயல்புக்கு ஏற்ப ''அருந்ததி'' என்று போற்றும் ஆசிரியர் நமக்கு அவளை ''அருந்ததி'' என்றே அறிமுகப்படுத்துகின்றார். இந்த அறிமுகத்தின் பொருத்தம் எத்தகையது – எத்துணை உண்மை வாய்ந்தது - என்பதை நாம் இக்காப்பியத்தில் நன்கு காணமுடிகிறது.

மாதவியிடம் இருந்து மீண்டுவந்த கோவலனை இகழாது, அவள் துயர் காண மனம் பொறுது, தன்னால் இயன்றவரை கணவன் மனவாட்டம் திருத்துவதே கற்புடைய மங்கையின் கடமை என்பதை உணர்ந்து,

''நலங்கேள் முறுவல் நகைமுகம் காட்டிச்
சிலம்புள் கொண்மெனச்''

சொல்லும் அவள் கற்பின் திறம் நம்மை அதிசயத்தில் ஆழ்த்துகின்றது.

பின்பும் மதுரை நோக்கிப் புறப்படும் தன் காதலனுடன், தன்துயர் கருதாது தானும் புறப்படும் அவளது உயரிய கற்பினை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

''பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.''

என்ற வள்ளுவரின் கூற்றையே மதுரைக் காண்டத்தின் முடிவில் வரும் ஒரு வெண்பாவில் சிறிது கற்பனையோடு கலந்து தருகிறான் இளங்கோ.

''தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழும் தகைமை திண்ணிதால் — தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து''.

கொழுநற் றொழுது தெய்வமாகினாள் கண்ணகி. புகார்க் காண்டத்திலேயே 'கண்ணகியின் கற்பு நலனை நமக்கு நன்றாகப் புலப்படுத்துகிறான் இளங்கோ. ஆருயிர்க் கணவன் அவளைப் பிரிந்து சென்று விட்டான். தான் கண்ட கனவைத் தோழியாகிய தேவந்தியிடம் கூறுகிறாள் கண்ணகி,

''கடுக்கு மென் நெஞ்சம் கனவினா லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதி யுட்பட்டோம்''

என்றிவ்வாறு கூறியவளை நோக்கித் தேவந்தி,

''......பொற்றொடீஇ
கைத்தாயுமில்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய் ...''

என்று கூறிக் கண்ணகியை துறைமூழ்கித் தெய்வம் தொழுமாறு வற்புறுத்துகிருள். அவ்வாறு செய்தல் குலத்திற் பிறந்தார்க்கு பெருமையன்றென்று கூறும் கண்ணகியிடம் ''மண்ணக மாதர்க் கணியாய்'' தன்மையினை நாம் காண முடிகின்றது.

''தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழு-
[தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

என்று கற்பின் வலிமையைப் பாராட்டியுரைக்கின்ருர் வள்ளுவனர். இதன் எதிரொலியேபோல் வாய்ச்சொற்களாக மதுரைக்காண்டத்தில் அடைக்கலக் காதையில்,

''கற்புக் கடம் பூண்ட இத்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண்டிலமால்
வானம் பொய்யாது வளம் பிழைப்பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்தநா டென்று
மத்தகு நல்லுரை யறியா யோநீ''

என்கிருர் இளங்கோ. இடைக்குலப் பெண்ணுன மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாகத் தரும்போது கவுந்தியடிகள் கூறியதாய் அமைந்த கருத்தாழம் மிக்க இவ்வரிகளில் ''பெய்யெனப் பெய்யும் மழை'' என்ற வள்ளுவரின் சொற்ருெடருக்கு விரிவான பொருள் காணமுடிகிறது. இன்னும்,

''செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்-
[பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்ததிது வென்கொ
லையரி யுண்கணழு தேங்கி யரற்றுவாள்
தெய்வமுற்ருள் போலும் தகையளிது வென்-
[கொல்''

என்கின்றனர் மதுராபுரி மக்கள். தமிழ் வளர்ந்த, தமிழை வளர்த்த, மதுரையம்பதி மக்கள் அவளைக் கற்பின் தெய்வமாகக் கண்டனர். கனல் பறக்கும் கண்களோடு மெய்நடுங்க வைக்கும் உருவமாக நின்ற அவளைப் பேயாக ஏன் கண்டிருக்கக்கூடாது? கற்பின் தெய்வம் கண்ணகி!

பொற்புடைத் தெய்வம் என்று கவுந்தி அடிகளால் கூறப்பட்டவள் கண்ணகி; கற்புநெறி பூவாது வாழ்ந்த கண்ணகியை மதுரை மக்களும், ''வம்பப் பெருந்தெய்வம்'' என விழிந்தனர்.

''மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியேயாமாயின்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்''

என்று சொல்லித் தன் வலதுகையால் இடது மார்பைத் திருகி மதுரையின் மேல் எறிந்தாள். உடனே மதுரையில் தீப்பற்றியது. அழலை விளைத்த அரும்பெரும் தெய்வம் கண்ணகியின் முன்னே தோன்றி 'இவ்வூரை இப்பொழுதே எரிப்பேன்; உனது ஏவல் யாது?' எனவினவிற்று.

அதற்குக் கண்ணகி, ''பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி என்னும் இவரைக் கைவிட்டு தீத்திறந்தார் பக்கமே சேர்க'' என்றலும், மதுரையில் அழல் மண்டித் தீயோரை எரித்தது. அதன்பின் அவள் மதுரையினின்றும் புறப்பட்டு 'என் கருத்தில் பொருந்திய கணவனைக் காணுமளவும் இருக்கவும்மாட்டேன்; நிற்கவும்மாட்டேன்' என்று சொல்லி இரவும் பகலும் அலைந்து திரிந்து திருச்செங்கோட்டுமலையில் ஒரு வேங்கை மர நிழலில் வந்தாள்.

தேவர்கள் மலர்மாரி பொழிந்து தெய்வ வடிவோடு கோவலனைக் காட்டி அவளையும் விமானமேற்றி விண்ணுலகுக்கு இட்டுச்சென்றனர். ''மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி விண்ணக மாதர்க்கு விருந்து'' ஆயினுள்.

இக்காட்சியைத் தம் கண்குளிரக் கண்ட குன்றக்குரவர்கள் கண்ணகியை குலதெய்வமாகக்கொண்டு வேங்கை மரத்தின் நிழலில் தெய்வம் அமைத்து, சிறுபறை அடித்து, கோடு வைத்தூதி, கொடுமணியடித்து, குறிஞ்சிபாடி, நறும்புகையெடுத்து, பூப்பலிசெய்து, நறுமலர் தூவி, குரவைக் கூத்தாடிக் கண்ணகியை வணங்கினுர்கள்.

அப்பால் இமயமலையில் கல்லெடுத்துக் கங்கையாற்றில் நீர்ப்படை செய்து வஞ்சிமாநகரில் ஆலயம் அமைத்து வேள்வியும் விழாவும் வகுத்துச் சேரன்செங்குட்டுவன் பத்தினியைப்போற்றினுன்.

இதுகாறும் ஆராயப்பட்ட கண்ணகியின் கற்பு சீரிய கற்பு என்று அடியார்க்கு நல்லாரால்

250256

கருதப்படுகிறது. இதனை வீரக்கற்பென்றும் மறக்கற்பென்றும் மற்றைய ஆசிரியர்கள் வழங்குவார்கள். சீற்றத்தால் அழல்விளைத்து மதுரை மாநகரை எரித்தமையால் சீரியகற்பென்றும், பெண்மைக்குணமான நாணம் முதலிய நாற்குணங்களையும் துறந்து முறைதவறிய பாண்டிய மன்னன் முன்னே சென்று வழக்குரைத்து அரசனை வென்று நகரையும் சுட்டெரித்தமையால் கண்ணகியின் கற்பு வீரக் கற்பென்றும் வழங்கப்படும்.

கண்ணகி கற்பின் தெய்வம். "உரைசால் பத்தினி" என்று உயர்ந்தோரால் கூறப்பட்டவள். அவளைப்போன்ற பத்தினிகளை உயர்ந்தோர் ஏத்துவர் என்பது சிலப்பதிகாரத்தில் நாம் கண்டறியும் ஒரு சிறந்த உண்மையாகும்.

## அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்

அக்காலத்தில் தமிழ்நாட்டை ஆண்டுவந்த அரசர்கள் நீதியைக் கண்ணும், ஆவியுமாகப் போற்றினார்கள் என்பது சிலப்பதிகாரத்தால் விளங்குகின்றது. குடிகளின் நலத்தை தம்நலம்போல் பேணியும், தம் குடைக்கீழ் அமைந்து வாழும் குடிகள் எவ்வகைத் துன்பத்தாலும் நலிவுறாது இன்புற்று வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்டும் தமிழ் அரசர்கள் ஆண்டு வந்தார்கள் என்று தெரிகிறது. நீதி தவறாது அரசாளும் முறையில் தமிழ்நாட்டு மூவேந்தரும் ஒருவரை ஒருவர் வெல்ல முயன்றனர் என்பதும் அறியப்படுகிறது.

தன் கணவனை இழந்து கையில் சிலம்பும் கண்ணில் கண்ணீருமாக பாண்டியன் முன்னே வந்து நின்ற கண்ணகியைப் பார்த்து அவ்வரசன், 'மாதே! நீ யார்?' என்று கேட்டவுடன் கண்ணகி கூறுகின்றாள்;

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுட
தான்தன் அரும்பெறல் புதல்வனை ஆழியின் [மடித்தோன்
பெரும் பெயர் புகார் என்பதியே".

என்று தான் பிறந்து வளர்ந்த சோழநாட்டின் நீதியைப் பாண்டிய மன்னன் அறியுமாறு எடுத்துரைத்தாள். "ஒரு மைந்தன் தன்குலத்துக்குள்ளான் என்பதும்" உணராது. "தருமத் தனிவழிச் செல்கை கடனென்று தன்மைந்தன் மருமந்தன் தேராழி உற ஊர்ந்த" மனுவேந்தனை - அவனது அருமந்த அரசாட்சியை - சேக்கிழார்பெருமானும் பெரியபுராணத்தில் உருக்கமாகப் பாடினார்.

இன்னும் மற்றொரு அரசன் தன்னிடம் அடைக்கலம் புகுந்த ஒரு புறாவின் உயிரைக் காக்கும் பொருட்டு அதனைப் பின்தொடர்ந்து கொல்ல வந்த பருந்திற்குத் தான் இரையாகி சொன்ன சொற்பிழையாமல் நீதி செலுத்திய செயலும் சோழநாட்டில் பழங்கதையாகவே நின்று நிலவியது.

இக்கதையைச் சிலப்பதிகார ஆசிரியர்,

"குருநடைப் புறவின் நெடுந்துயர் தீர
வெரிதரு பருந்தின் இடும்பை நீங்க
அரிந்து உடம்பிட்டோன் அறந்தரு கோலும்
திரிந்து வேறாகும் காலமும் உண்டோ"

என்று அழகாகக் கூறுகிறார். இவ்வாறு சோழ அரசர்கள் நீதியை உயிரினும் அருமையாகப் போற்றிய சிறப்பு அக்காலத்திய மக்களால் பெரிதும் வியந்து பாராட்டப்பெற்றது.

இவ்வாறே பாண்டிய நாட்டை ஆண்டுவந்த மன்னன் ஒருவன் நீதிகாக்கும் பொருட்டுத் தன் கரத்தைத் தானே அரிந்ததையும் அவன் இன்றளவும் மக்களால் புகழப்படுவதையும் கூட நமக்கு இளங்கோ கூறுகிறார்.

"நெஞ்சம் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று
வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து
இறைக் குடிப் பிறந்தோர்க்கு. இழுக்கம்- [இன்மை."

என்பது இளங்கோ கூறும் வரலாறு.

இத்தகைய கொள்கைகள் பரவியிருந்த தமிழ் நாட்டில் கண்ணகியின் காரணத்தால் வளையாச் செங்கோல் வளைந்தது. அல்லலுற்று ஆற்றாது அழுத கண்ணகியைக் கண்ட மாந்தர் சிலர்,

"களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
வளையாச் செங்கோல் வளைந்தது"

என்று வருந்தினர்.

மற்றும் சிலர்,

''மன்னர் மன்னன் மதிக்குடை வாள் வேந்தன்
தென்னவன் கொற்றம் சிதைந்தது''

என்று தயங்கினுர்கள்.

இன்னும் சிலர்,

''மண்குளிரச் செய்யும் மறவேள் நெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்தது''

என்று வாடி வருந்தினுர்கள்.

கண்ணகியும் வீதிவழியே சென்று,

''பார்மிகு பழிதூற்ற பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணு விதுஎன உரையாரோ!'.

என்றும் தன்காதலனைக் கொன்ற மன்னவன் பிழையை நினைந்து.

''மன்பதை பழிதூற்ற மன்வன் தவறிழைப்ப
உண்பதோர் வினைகாணு விதுவென உரை-
[யாரோ''

என்றும் நெஞ்சம் உருகினுள்.

உண்மையை அவள் உணர்த்த உணர்ந்த மன்னனுே வெனில்,

''பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட
யானுே அரசன், யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது கெடுக என்னுயுள்''

என மயங்கி வீழ்ந்தான். இம் மன்னவன் நீதியை எத்துணை அருமையாக போற்றி வந்தான் என்பது ஆசிரியர் கூறும் அழகிய வெண்பா ஒன்றினுல் இனிது விளங்கும்.

''மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச் சிலம்பும் கண்ணீரும் – வையைக்
–கோன்
கண்டனவே தோற்றுன், அக்காரிகை தன்-
[சொற்செவியில்
உண்டளேவ தோற்றுன் உயிர்''.

என்பது வெண்பா.

''கயலெழுதிய இமய நெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந் தண் பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பார் அரசாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன்''.

என்று புகழப்பட்ட பாண்டியன் – போர்க்களத்தில் வீரரது வில்லம்பால் தோல்வியடையாத பாண்டியன் - நீதி தவறி இம்மாதின் சொல்லம்பால் உயிரைத் தோற்றுன். அரசன் நீதி பிழைத்ததையும் அதனுல் உயிர் நீத்ததையும் அறிந்த ஆயர்குல மகளான மாதரி,

''கோவலன் தீதிலன் கோமகன் பிழைத்தான்
அடைக்கலம் இழந்தேன், இடைக்குல மக்காள்
குடையும் கோலும் பிழைத்த வோஎன
இடையருள் யாமத்து எரியகம் புக்காள்''

என்று ஆசிரியர் கூறுகிறுர். இன்னும் மதுரையில் வந்திருந்த அருந்தவப் பெருமை வாய்ந்த கவுந்தி அடிகள்,

''நிவந்தோங்கு செங்கோல் நீழ்நில வேந்தன்
போகுயிர் தாங்காப் பொறை சாலாட்டி
உண்ணு நோன்பொடு உயர் பதி பெயர்ந்தாள்,

என்று ஆசிரியர் உருக்கமாக உரைக்கின்றுர். இன்னும் கோவலன் தாயும் கண்ணகியின் தாயும் உயிர் துறந்தனர்.

அரசியல் பிழைக்கவே மன்னனின் ஆவியும் அகன்றது. அரசியல் பிழைத்த மன்னனுக்கு அறமே கூற்றுக அமைந்தது; இந்த உண்மையை இளங்கோ எமக்கு உணர்த்தும் முறையேதனி,

## ஊழ்வினை உருத்து வந்தூட்டும்

''ஊழிற் பெருவலியர்வுள மற்றென்று
சூழினும் தான் முந்துறும்''.

என்கிறது குறள்; ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பது சிலப்பதிகாரத்தின் சிறப்பான கோட்பாடுகளில் ஒன்று. மேலே கூறப்பட்ட வள்ளுவரது குறளுக்கு விளக்கம் கூறஎழுந்தது போலுள்ளது சிலப்பதிகார முற்கதை. கோவ

லன் சங்கமன் என்பானைப் போலவே கொலை செய்யப்பட்டதும், கண்ணகி சங்கமனது மனைவியின் துயர நிலையில் அவலச்சுவை ததும்ப,

''கீழ்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
மேல்திசை வாயில் வறியேன் பெயர்கென'',

நின்று கதறிப் பதறிப் புலம்புவதும் வள்ளுவரது குறளுக்கே விளக்கம் கூற எழுந்ததோ வென ஓர் ஐயத்தை எழுப்புகின்றன. கட்டுரை.

காதையிலும் இளங்கோவடிகள்,

''உம்மை வினைவந்துருத்த காலைச்
செம்மையிலோர்க்குச் செய்தவ முதவாது''

என்று கூறியுள்ளமை கவனிக்கத் தகுந்து; ஆனாலும் எல்லா வினைக்கும் ஊழ்வலியைக் குற்றம்சொல்வது தவறாகலாம். பாண்டிய மன்னன் இறந்தது கண்டும், கோப்பெருந்தேவி இறந்தது கண்டும், கலங்காமல் பெண் இயல்பென்பதே அற்று நின்று, தமிழ் வளர்ந்த மதுரையை எரித்த கண்ணகியின் பண்பற்ற தன்மையை மறைக்க ஊழ்வலிமேல் பழிபோடுமொன்று இளங்கோ செய்த மன்னிக்கமுடியாத தவறு எனல் பொருந்தும்.

''ஊழ்வினை உருத்துவந்தூட்டும்'' என்ற தத்துவம் இக்காப்பியத்தில் அளவுக்கதிகமாக வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. இதனால் யாரும் தயங்காமலே தாம்செய்யும் குற்றங்களுக்கு எல்லாம் ஊழ்வலியைப் பழிபோட ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக்கின்றது.

சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம்; நாடகம் உச்சக் கட்டத்தில் முடியவேண்டும் என்ற நோக்கத்தினால் இளங்கோ கண்ணகிமூலம் மதுரையை எரிப்பித்திருக்கவும் கூடும்.

எப்படி இருந்தபோதும் செந்தமிழ் வளர்ந்த மதுரையை எரித்த கண்ணகியை அவள் பத்தினித்தெய்வமென்று ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் கூட, எந்தத் தமிழணங்கும் தமிழைப் போற்றும் எந்தப் பெண்ணும் போற்றிப் புகழமாட்டாள்.

இவளைவிட கணிகையாகப் பிறந்து, வாழ்வில் சீராக வாழ்ந்து துறவுபூண்ட மாதவியே சிறந்தவள் என்று நாம் கூறமுடிவது ஊழ்வினை வலிக்கு இளங்கோ கொடுத்த மேலதிகமான முக்கியத்துவத்தினால்தான்! இந்த ஒன்றுமட்டும் அளவாக அமைந்திருந்தால் ''சிலம்பு'' ஓர் ஒப்புயர்வில்லாக் காப்பியமாக என்றென்றும் திகழுமென்பதில் ஐயமில்லை.



UNIVERSITY OF JAFFNA LIBRARY
University of Jaffna
250256
Library
UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES
250256

பல தரப்பட்ட தொலைக்காட்சிக் கருவிகளுக்கு (T. V.)

**நம்பிக்கையும் உத்தரவாதமுள்ளதுமான ஸ்தாபனம்**

# V. K. இராசரத்தினம்

போன்: 7447

95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

பொன்விழா மலர் சிறப்புற

**எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்!**

சிறந்த தையல் வேலைகளுக்கு இன்றே நாடுங்கள்!

# “மைதிலி தையல் நிலையம்”

உரிமையாளர்
**இ. இந்திரன்**
இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

Donate
Mr RATNAM

யாழ். நகரின்

கௌரவம் மிக்க

இரண்டு
தாபனங்கள்:

*

# ஆனந்தா

அச்சகம்

*

# ஆனந்தா

புத்தகசாலை

*

226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 348



அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.